# இந்து ஒளி
## HINDU OLI

தீபம் - 19 சுடர் - 07




PUBLIC LIBRARY
JAFFNA
PL
23/9/15

நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ்

மன்மத வருடம்
ஆவணி - புரட்டாதி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

August - September
2015

# மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாடு ஆரம்ப நிகழ்வு – 31.07.2015



பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன






மாமன்ற யாழ் பணிமனையிலிருந்து நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படும் காட்சி



மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர்
மனிதநேயமாமணி திரு. வி. கயிலாசபிள்ளை
தம்பதியினர் மங்கள விளக்கேற்றி வைக்கிறார்கள்



நிகழ்வின்போது மேடையில் பிரமுகர்கள்




மேடையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீமத் மௌனகுமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், வடமாகாண முதல்வர் சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன், சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள், மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனிதநேயமாமணி திரு வி. கயிலாசபிள்ளை.

PUBLIC LIBRARY
JAFFNA

உ
சிவமயம்

தீபம் – 19

# இந்து ஒளி

சுடர் – 07

மன்மத வருடம் ஆவணித் திங்கள் 23 ஆம் நாள் (09.09.2015)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே!

### திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!

### திருவிசைப்பா

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென்று இங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குலகு ஒழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமகள் உடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே!

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய கலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்தபித்
தற்குப் பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

ஆழ்க தீயது என்று ஓதிற்று அயல்நெறி
வீழ்க என்றது வேறு எல்லாம் அரன்பெயர்
சூழ்க என்றது தொல் உயிர் யாவையும்
வாழி அஞ்செழுத்து ஓதி வளர்கவே!

## நல்லூர் கந்தன் குபேரவாசல் இராஜகோபுரம்.

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தன் கோயிலின் வடக்கு வீதியில் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 108 அடி உயரமான குபேர வாசல் இராஜகோபுரத்திற்கு இம்மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 2012ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு மூன்று ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்ட இந்த இராஜகோபுரம் இப்போது மிகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. யாழ் குடாநாட்டின் அராலியைச் சேர்ந்த ஈழத்துச் சிற்பக் கலைஞரின் கைவண்ணத்தில் இக்கோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை இந்திய சிற்பக் கலைஞர்கள் உருவாக்கியிருக்கலாம் என பலர் கருதுகிறார்கள். உண்மையிலேயே வயதில் குறைந்த ஈழத்து சிற்பக் கலைஞர்தான் கோபுரத்தை உருவாக்கியிருக்கிறார். இதே கலைஞர்தான் 2011 ஆம் ஆண்டில் நல்லூர் கந்தன் தெற்கு வாசல் இராஜகோபுரத்தையும் அற்புதமாக வடிவமைத்து பலரது பாராட்டையும் பெற்றவர்.

நல்லூர் கந்தப் பெருமானின் இருபெரும் இராஜ கோபுரங்களும் ஒருசில ஆண்டுகளுக்குள் உருவாக்கப் பட்டமை அற்புதமான நிகழ்வெனலாம். குபேர வாசல் இராஜகோபுரம் என்பது ஆலய வீதியின் வடதிசையில் அமைவதாகும். எட்டுத்திக்கு பாலகர்களில் ஒருவனான குபேரன் வடதிசைக்கு உரியவன்.நீண்டகாலம் தவம் செய்து சிவபெருமானிடம் உயர்ந்த வரங்களைப் பெற்றவன். திசைக்காவலனாகவும், நிதிகளுக்கு அதிபதியாகவும் பெரும்பேறு பெற்றவன். வற்றாத செல்வத்துக்கு அதிபதியான குபேரனை அடிப்படையாக வைத்தே குபேரவாசல் கோபுரம் வடதிசையில் அமைப்பது வழக்கம். இந்தியாவின் பல இடங்களில் குபேரவாசல் கோபுரம் விஜயநகரப் பேரரசு காலத்தில் நிறுவப்பட்டது. ஈழத்தில் முதன்முதலாக குபேரவாசல் கோபுரம் நல்லூர் கந்தப் பெருமானின் சந்நிதானத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

குபேரனைத் தெய்வமாக வழிபடும் மரபு சைவ சமயத்தவர்களிடம் மட்டுமன்றி, ஏனைய மதத்தவர்களிடமும் இருந்து வருகிறது. வைஷ்ணவர்கள் லட்சுமி குபேரன் என நாமம் சூட்டி வணங்குவர். இந்தியாவில் லட்சுமி குபேரன் என தனிக்கோயில்களும் இருக்கின்றன. வடநாட்டவர்கள் குபேரனை உத்தரகுரு என அழைப்பதுண்டு. கதாயுதம்

குபேரனுடைய ஆயுதமாகும். குபேரன் நவநிதிகளின் அதிபதியாகவும் விளங்குகிறான். சங்கநிதி, பதுமநிதி உட்பட நவநிதிகள் ஒன்பது பேருக்கும் இவனே தலைவன். இராவணனுக்கு முன் சிவபூமியாகிய இலங்காபுரியை சிவபக்தனான குபேரனே சகல சிறப்புக்களுடன் ஆட்சிபுரிந்தான் என புராணங்கள் கூறுகின்றன. புத்த மதத்தவர்கள் குபேரனுக்கு வைஷ்வணா என நாமம் சூட்டி வழிபட்டு வருகின்றனர். குபேர யந்திரம், குபேர யாகம் என நிதிவேண்டி பூஜிக்கும் மரபும் உண்டு. திருப்பதி கோயில் ஏழுமலையானுக்கு குபேரன் கடன் கொடுத்தான் என்று ஒரு ஐதீகம் உண்டு. திருப்பதி கோயிலின் வடக்கு வீதியில் குபேர காணிக்கை என்ற பெயரில் உண்டியல் வைக்கப்பட்டிருப்பதுடன் அந்த உண்டியலில் நிதி இடுபவர்கள் சகல செல்வங்களும் பெறுவர் என்ற ஐதீகம் இன்று வரையும் உண்டு. குபேர வழிபாடு தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதிலும் பரவியிருந்துள்ளது. ஜப்பானியர்களிடையே குபேர வழிபாடு உண்டு. குற்றம் செய்பவர்களைத் தண்டிக்கும் தெய்வமாக குபேரனைக் கருதுகின்றார்கள். பாளி மொழியில் குபேரக் கடவுள் பற்றிய பல கதைகள் உண்டு. பாளி மொழியில் குபேரனை வேஷ்சபணன் என அழைப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

சைவ மரபில் சிவனின் பேரருள் பெற்ற குபேரனின் திசையாகக் கருதப்படும் வடதிக்கு எல்லையில் இந்த இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளமை புதுமையே. நவதளங்களைக் கொண்ட இக்கோபுரத்தில் நவவாசல்கள் இரு மருங்கிலும் குபேர சிற்பம் மட்டும் உருவ அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளது. மிக வித்தியாசமான அமைப்பில் கோபுரம் உருவாக்கப்பட்டுள்ளது. நிதிக்கு அதிபதியாக இருக்கும் குபேரக் கடவுள் வடபுலத்து மக்களை வாழவைக்கவேண்டும் என்ற நோக்கில் இந்த இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தப் பெருமான் கனவை நனவாக்கும் தெய்வம். யாரிடமும் இரந்து கேட்காமலே ஆலயத்தின் திருப்பணிகள் நிறைவேறிவருவதும் வழக்கம். நல்லூர் திருக்கோயிலை முருகப்பெருமான் திருவருளால் ஆற்றுப்படுத்துகின்ற அறங்காவலர் ஸ்ரீமான் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களும், அவரது ஏக புதல்வர் குகஸ்ரீ சயன் மாப்பாண முதலியார் அவர்களும், அமைதியாக, அற்புதமாக ஆற்றிவரும் திருப்பணியை அடியார்கள் வியந்து போற்றுகிறார்கள். அவைக்கு முன்வராது, அடியார்களுள் அடியாராக நின்று அறங்காவலர்கள் சாதித்துவரும் செயற்பாடுகள் தெய்வத் திருவருளே!


**அடுத்த சுடர்**

மன்மத வருடம் ஐப்பசி – கார்த்திகை


வாழ்த்து

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேல்படை வாழ்க
பொய்யில் சீரடியார் வாழ்க! வாழ்கவிப் புவனமெல்லாம்!


# இந்து ஒளி

**அகில இலங்கை இந்து மாமன்ற**
**இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு**
நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ்
**மன்மத வருடம் ஆவணி - புரட்டாதி (09. 09 .2015)**



**ஆசிரியர் குழு :**
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Publication of**
**HINDU RESEARCH CENTRE OF**
**ALL CEYLON HINDU CONGRESS**
**Nallai Kanthan Mahotsava**
**Special Issue - 09.09.2015**



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |




**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**




**ISSN : 2012 - 9645**



## ஆன்மீகச்சுடரின்

## அருள் மடல்



# நல்லூர் முருகனுக்கு வாஷிங்டனிலும் தேர்த்திருவிழா

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானின் தலையாய ஈழத்துத் திருத்தலம் நல்லூர் கோயில். பல்லாயிரம் ஆண்டு பழமைவாய்ந்த இத்திருத்தலம் பல சித்தர்கள், ஞானியர் வாழ்ந்த புண்ணிய பூமியாக விளங்குகின்றது. ஆவணி மாதம் வந்து விட்டால் நல்லூர்த் திருவிழா ஈழத்து சைவமக்களுக்கு ஒரு பெருவிழாவாகவே அமைகிறது. ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து அடியவர்கள் நல்லூர்த் திருவிழாக் காலங்களில் யாத்திரை செய்து எம்பெருமானின் நல்லருளைப் பெறுகின்றார்கள். குறிப்பாக நல்லூர்த் தேர்த்திருவிழா ஈழத்து சைவமக்களுக்கு ஒரு முக்கிய தினமாக விளங்குகின்றது.

ஈழத்தில் நல்லூர்த் திருவிழா சிறப்பாக அமைவது போன்று, அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனிலும் நல்லூர் முருகன் வருடா வருடம் தேரில் பவனி வருவது பலருக்கும் வியப்பாக இருக்கலாம்.

யாழ்ப்பாண யோகர் சுவாமிகளின் ஆசி பெற்று ஹவாய் மாநிலத்தில் ஒரு சைவ ஆதீனத்தையும் சிவாலயத்தையும் நிறுவினார் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். இந்த ஹவாய் சைவ ஆதீனத்துக்கு நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்காவில் வாழும் திரு. திருமதி சரவணபவன் தம்பதிகள் 1982 ஆம் ஆண்டு யாத்திரை செய்தார்கள். அவர்கள் குருதேவரிடம் தாமும் சில அடியவர்களுமாகச் சேர்ந்து வாஷிங்டனில் ஒரு இந்துக்கோயிலை அமைப்பதற்கு முயற்சிப்பதாகவும், அதற்கு பல தடைகள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்களின் விருப்பத்தை செவிமடுத்த குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், அவர்களிடம் கருங்கல்லிலாலான ஒரு விநாயகர் விக்கிரகத்தைக் கொடுத்து, விநாயகரை முன் வைத்து அமெரிக்கா தலைநகரான வாஷிங்டன் நகரில் ஒரு முருகன் கோயிலைக் கட்டுமாறு அருளினார். சரவணபவன் தம்பதிகள் தங்களது வீட்டில் அந்த விநாயகர் விக்கிரகத்தை வைத்து வழிபாடுகளைச் செய்து வந்தார்கள். அங்குள்ள அடியவர்களும் வந்து இந்த வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள்.



காலப்போக்கில் இந்த அடியவர் கூட்டம் வளர்ச்சி அடைந்து வட அமெரிக்க முருகன் கோயில் திருப்பணிச் சபையாக மாறியது. இந்திய சிற்பாசாரியார்களின் கைவண்ணத்தில் ஒரு பாரிய ஆலயம் வாஷிங்டன் நகரில் அமைக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டு முருகனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த கும்பாபிஷேகத்திற்கு குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுடன் சென்று கலந்து கொள்ளும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது.

ஈழத்தில் இருந்து ஒரு சித்திரத்தேர் செய்யப்பட்டு அமெரிக்காவிற்கு கொண்டுவரப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் நல்லூர் - கதிர்காம முருகன் தேர்த்திருவிழா என்ற பெயரில் திருவிழாவும் விமரிசையாக நடைபெற்று வருகிறது. இந்தச் சித்திரத் தேரிலே நல்லூரில் வாழ்ந்த ஞானிகளாகிய தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், கடையிற் சுவாமிகள் போன்றவர்களின் உருவங்களும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. இந்த இரதத்திலே முருகன் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்த ஆலயத்திலே அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவுருவங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பது ஒரு தனித்துவமாகும். ஈழத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் ஆசிபெற்ற சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆசியுடனும் மற்றும் திருமுருக கிருபானந்தவாரியார், சுவாமி சச்சிதானந்தா போன்ற மகான்களின் ஆசியுடனும் அமெரிக்கா வாழ் சைவத்தமிழ் அடியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் இன்று அமெரிக்க தலைநகரில் ஒரு தனித்துவமான ஆலயமாகத் திகழ்கிறது. வருடந்தோறும் ஆவணி மாதம் ஈழத்து சைவர்கள் நல்லூருக்கு யாத்திரை வருவது போல் வட அமெரிக்கா எங்கும் பரந்து வாழும் ஈழத்து சைவமக்கள் வாஷிங்டனுக்கு வந்து நல்லூர் முருகன் தேரேறி வருவதை கண்டு வணங்குவதோடு, காவடி எடுத்தும், அன்னதானங்கள் செய்தும் தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். வாஷிங்டனையும் அதனை அண்டிய நகரங்களிலும் வாழும் சைவ இளைஞர்கள் அந்த ஆலயத்துக்கு வந்து சிரமதானப்பணி செய்வதைக் கண்டு பூரிப்படைந்தேன். அங்குள்ள இளைய தலைமுறையினருக்கு சைவசமயத்தை போதிக்கும் ஒரு பாக்கியத்தையும் நல்லூர் முருகன் அடியேனுக்கு அருளியுள்ளார்.

முருகப் பெருமானின் கிருபையால் அமெரிக்கத் தலைநகரில் ஒரு புதிய சைவத்தமிழ் தலைமுறையினர் உருவாகுவதையிட்டு மனப்பூரிப்படைகின்றேன். முருகனின் கருணையே கருணை!


ரிஷி தொண்டுநாதன்

(வாஷிங்டன் முருகன் ஆலயத்தின் நல்லூர் தேர்த்திருவிழா படங்களை இந்த இதழின் பின் அட்டை உள்ளே காணலாம்.)

# இந்து மக்களின் வாழ்க்கையை வளம்படுத்துவதில் தொடர்ந்தும் மாமன்றத்தின் பயணம் அமையவேண்டும்

**அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் நடாத்திய இந்து ஆராய்ச்சி மாநாடு ஆரம்பநாள் (31.07.2015) நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் நிகழ்த்திய உரை.**

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடும் காலமிது. அதனால்தான் போலும் இதனை ஒரு இந்து ஆராய்ச்சி மா்நாடாக ஆக்கித் தந்துள்ளார்கள் எமது மாமன்ற அலுவலர்கள்.



இந்து ஆராய்ச்சி மாநாட்டில் இந்து ஒளி முதற் பிரதியினை சத்தியவித்தகர் க. வி. விக்கினேஸ்வரன் வெளியிட்டு வைக்கிறார்.

பாரம்பரிய இந்து தர்மப்படி மனித வாழ்க்கையானது நான்கு கட்டங்களூடாகச் செல்வதாகக் கூறுவார்கள். அவற்றை ஆசிரமங்கள் என்பார்கள். பிரமச்சரிய ஆசிரமம், கிரகஸ்த ஆசிரமம், வானப்பிரஸ்த ஆசிரமம், சந்நியாச ஆசிரமங்களே அவை.

மனித உயிர்களின் வாழ்கால எதிர் பார்ப்பு கூடியுள்ள இந்தக் காலகட்டத்தில் பிரமச்சரிய வாழ்க்கை என்பது பிறப்புத் தொடக்கம் சுமார் இருபது வயது வரை என்று எடுத்துக்கொள்ளலாம். கிரகஸ்தனின் இரசிப்பும் ருசிப்பும் மிக்க மணவாழ்க்கைக் காலத்தின் நீட்சி நாற்பது வயது வரை நீடிக்கும் என்று வைத்துக்கொள்ளலாம். வாழ்க்கைக் கணக்குகளைப் பார்த்துக் கையளிக்க வேண்டியதைக் கையளித்து, தன்னை ஓய்வுக்குத் தயார்படுத்தும் வானப்பிரஸ்த காலத்தை அறுபது வயது வரை நீடிப்பதாகக் கூறலாம். அரசாங்கம் கூட அறுபதில் அலுவலர்கள் தம் அகத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று சட்டம் வகுத்துள்ளது. ஆகவே சந்நியாச ஆசிரமம் என்று அழைக்கப்படும் நான்காவது கட்டத்திற்குள் வருங் காலமே அறுபதாவது வயது.

அப்பொழுது என்ன நடக்கின்றது என்று பார்த்தோமானால் வாழ்க்கையை இரசித்து, ருசித்து மேலும் வாழ்க்கையில் அடிபட்டு இடிபட்டு வந்த நாங்கள் அதுவரை காலமும் எங்களைப் பற்றி ஆராய நேரமில்லாமல் இருந்து விடுகின்றோம். நாம் யார்? நாம் எதற்காகப் பிறந்தோம்? நாம் எதை நோக்கிச் செல்கின்றோம்? எமது தூர கால நோக்கம் என்ன? என்று அப்பொழுதுதான் யோசிக்கத் தொடங்குகின்றோம். எம்மைப் பற்றி ஆராயத் தொடங்கும் காலமே சந்நியாச காலம். அகில இலங்கை இந்து மாமன்றம் இப்பொழுது சந்நியாச காலத்தை அடைந்துள்ளது என்று அடையாளம் கண்டு போலும் இந்த மாநாட்டை இந்து ஆராய்ச்சி மாநாடாக ஆக்கித் தந்துள்ளார்கள். எம்மைப் பற்றி ஆராய வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதைக் கூறாமல் கூறியுள்ளார்கள் எமது அகில இலங்கை இந்து மாமன்றத்தினர்.

அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் எம்மைப் பற்றி நாம் ஆராய வேண்டிய காலத்தை நாம் எட்டியுள்ளோம் என்றே கூறவேண்டும். அதாவது இதுவரை காலமும் எமது நாட்டின் சரித்திரம் தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காகத் தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் பிறழ்வாகவும் தவறாகவும் எழுதப்பட்டு உண்மைக்குப் புறம்பான சரித்திர செய்திகள் எமது மாணவ சமுதாயத்திற்குக் கூறப்பட்டு வந்துள்ளன. உண்மை என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து உலகிற்குக் கூறுங்காலம் தற்போது உதித்துள்ளது. நாமாகக் கூறினால் எமக்குப் புலிப்பட்டமும் தீவிரவாதப் பட்டமும் சூட்டி விடுவார்கள். விரைவில் சர்வதேச சரித்திர வல்லுநர் குழுவொன்று இலங்கையின் தமிழ் மக்கள் பற்றியும் மற்றும் இலங்கையில் இந்து மதம் பற்றியும் ஆராய்ந்து ஆதார பூர்வமான வெளியீடொன்றினைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. உள்ளூர் சரித்திராசிரியர்கள் உண்மையை உள்ளவாறு கூறப் பயப்படுகின்றனர் அல்லது வேண்டுமென்றே பிறழ்வாகக் கூறத் தலைப்படுகின்றனர். இன்று பலவிதமான அகழ்வுகளும் கல்வெட்டுக்களும் உண்மையை உலகறியச் செய்யத் துடித்துக்கொண்டிருக்கின்றன.

பௌத்தம் இலங்கைக்கு வரமுன் இங்கு வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் பேசிய மொழி என்ன? அவர்களின் பாரம்பரியம் என்ன என்பவை சம்பந்தமாகச் சர்வதேச சரித்திர நிபுணர் குழுவொன்று ஆதாரபூர்வமான வெளியீடொன்றைக் கொண்டு வந்தால் இன்று இந்த நாட்டில் நிலைபெற்றிருக்குந் தவறான முடிவுகள் யாவற்றையுந் தூக்கி எறிய வேண்டியிருக்கும்.

அப்பேர்ப்பட்ட குழுவொன்றை நியமிக்க எமது புலம்பெயர்ந்த தமிழ்-இந்து சகோதர சகோதரிகள் முன்வரவேண்டும். முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. இன்று இராவணன் ஒரு சிங்களவர் என்று கூறுவார் கூட இந்நாட்டில் உள்ளார்கள். சிங்களமொழி எவ்வாறு, எப்போது உதித்தது, அந்த மொழியைப் பேசத் தொடங்கிய பின்னர்தான் அவர்கள் சிங்களவர் என்ற நாமத்தைப் பெற்றார்கள் என்பது பற்றியெல்லாம் எமது மக்கள் ஆராயாது இருந்து வருவதால்தான் பெரும்பான்மையினரின் அடக்கு முறை கட்டுக்கடங்காது செயல்படுகின்றது. உண்மையை உணர்ந்து உரைத்திட நாங்கள் பின்நிற்கக் கூடாது.

எனவே, ஆராய்ச்சி என்பது மிக மிக முக்கியமாக இன்றைய காலகட்டத்தில் தேவைப்படுகின்றது. அதை உணர்ந்து இம்மாநாட்டை இந்து ஆராய்ச்சி மாநாடாக உருவாக்கிய அனைவருக்கும் முதற்கண் எங்கள் நன்றிகள் உரித்தாகுக!

நாளைய தினம் சமகால அமர்வு மூன்றானது இலங்கை இந்து மத வரலாறும், தொல்லியலும் என்ற பொருள் பற்றி ஆராயப்போவதை நான் கவனித்தேன். இருக்கும் தற்போதைய சான்றுகளின் அடிப்படையில் இலங்கையின் பூர்வீகக் குடிகள் யார், அவர்கள் எங்கு வாழ்ந்தார்கள், அவர்களுக்குத் தென்னிந்திய மக்கட் கூட்டத்தினருக்கும் இடையில் இருந்த தொடர்பென்ன போன்ற விடயங்களையும் அந்த அமர்வில் ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். உண்மையை வெளிப்படுத்தாது ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் உயிர் வாழ்வோமானால் எமது வருங்காலச் சந்ததியினரே பாதிக்கப்படுவர். எம்முள் பலர் நாங்கள் பத்தாம் நூற்றாண்டில் சோழர் படையெடுத்து வந்தபோது இங்கு வந்தவர்கள் தானே என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு அம்மையார் என்னிடம் அவ்வாறே கேட்டார். நாம் பத்தாம் நூற்றாண்டில் வந்தவர்கள் தானே என்று கேட்டார். அவர் கருத்து தவறு என்பதை ஊரறிய உலகறிய நாங்கள் ஆராய்ந்து ஆதாரபூர்வமாகக் கூறவேண்டும். பத்தாம் நூற்றாண்டிலும் வந்தோம். அதற்கு முன் பல்லாயிர வருடகாலமும் நாங்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளோம் என்பதை உலகறியச் செய்ய வேண்டும்.

சரித்திரம் படித்த சான்றோர்கள் இங்கிருக்கும் போது இந்து மத வரலாறு பற்றியோ தொல்லியல் பற்றியோ பேச எனக்குக் கூச்சமாக இருக்கின்றது. எனினும் அவர்கள் எழுதி வைத்த நூல்கள்தான் எமது முடிவுகளுக்கு ஆணிவேர். எமது கருத்துக்களுக்குக் கருவூலம். ஆனால் நாங்கள் ஒன்றை இப்பொழுது பேராசிரியர்களிடம் கேள்விக்கிடமாக்க வேண்டும். இதுவரை காலமும் சற்றுத் தயங்கித் தயங்கிச் சொன்ன வார்த்தைகளைச் சற்றுத் திடமாக இனிக்கூறினால் என்ன என்பதுதான் என் கேள்வி. பேராசிரியர் இந்திரகுமார் அவர்கள் பத்தாம் நூற்றாண்டில் தமிழரின் நிரந்தரக் குடியிருப்புக்கள் இருந்தமைக்கு ஆதாரம் உண்டு என்று கூறப்போய் அதுவே தமிழர்கள் பத்தாம் நூற்றாண்டில் தான் இங்கு வந்து குடியேறினார்கள் என்று சில அரசியல்வாதிகளைக் கூச்சலிட வைத்தது. எமது சரித்திரம் பற்றி எழுதப் போதிய தடயங்கள், சான்றுகள் இல்லாதிருந்த காலம் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் இப்போது கிடைத்திருக்கும் பல்விதமான கல்வெட்டுக்களும் சான்றுகளும் உடனேயே வெளியிடப்பட்டு அவை கூறும் சரித்திரத்தை உலகறியச் செய்ய வேண்டும். அவற்றைப் பரிசீலிக்கத் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அவைகளும் உலகத்திற்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். பிறநாட்டு நல்லறிஞர்கள் எமக்கேற்பட்டிருக்கும் நிலையினை நன்கறிந்து வைத்திருக்கும் காலமிது. ஆகவே அவற்றைக் கூறுவதால் எமக்கு நன்மையே கிடைக்கும்.

அண்மையில் நான் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்குச் சென்றதில் இரண்டு விடயங்களைப் புரிந்துகொண்டேன். எமது உறவுகள் தமிழைப் புறக்கணிக்கவில்லை. தமிழர் பாரம்பரியத்தைப் புறக்கணிக்கவில்லை. இந்து மதத்தை மறக்கவில்லை. இந்து மதப் பாரம்பரியத்தை மறக்கவில்லை. மாறாகத் தமது வாரிசுகளுக்கும் தமிழ் உணர்வையும் இந்துமத உணர்வையும் தமிழில் பாண்டியத்தியத்தையும் இந்து மதத்தில் ஈடுபாட்டையும் புகுத்த, புகட்டப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அடுத்து தமிழர் தம் பாரம்பரியத்தை அல்லது இந்து மதப் பாரம்பரியத்தை ஆராய்ந்து உலகறியச் செய்ய, தாம் அதற்கு உற்ற துணையாக இருக்க, அவர்கள் ஆவலாக உள்ளார்கள். பிறநாட்டு நல்லறிஞர்களுக்கு எம் பாரம்பரியம் பற்றி புரிந்துணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். எனவேதான் எமது புலம்பெயர் உறவுகளின் உதவிகளுடன் சர்வதேச சரித்திர நிபுணர் குழு ஒன்று உருவாக்கப்பட்டு இதுவரை வெளிவந்திருக்கும் எமது சான்றுகள் பலவற்றையும் ஆராய்ந்து பார்த்து எமது வரலாறு பற்றிய ஆதாரபூர்வமான வெளியீடுகளைக் கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றேன்.

இன்றைய வெளிநாட்டு மக்கள் நான் சற்று முன்னர் கூறியது போன்று எமது நிலைபற்றி நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். இங்கு என்ன நடந்து வருகின்றது என்பது பற்றிய போதிய அறிவைக் கொண்டுள்ளார்கள். பிரசித்தி பெற்ற சரித்திரவியலாளர்கள் ஆராய்ந்து எமது வரலாறு பற்றி உரியவாறு ஆராய்ச்சிப் படைப்புக்களை உருவாக்கினார்கள் என்றால் இதுவரை அண்மைக் காலங்களில் உள்நாட்டில் மாற்றப்பட்டு பிறழ்வாகத் தரப்பட்டு வந்த சரித்திரத்தின் உண்மை பொய்மைகள் வெளிப்படுத்தப்படலாம்.

ஒருமுறை சார்க் நாடுகளின் சட்டக் கருத்தரங்கத்திற்கு நான் டாக்கா சென்றிருந்தேன். அப்போது ஒரு சிரேஷ்ட சிங்களச் சட்டத்தரணி பங்களாதேஷில் உள்ளவர்கள் யாவரும் எமது சிங்களவர்கள் போலக் காட்சி அளிக்கின்றார்கள் என்று கூறி நாங்கள் யாவரும் ஆரியர் என்றும் கூறினார். நான் உடனே, பார்த்தால் எல்லோருமே திராவிடர்கள் போலல்லவா காட்சி அளிக்கின்றீர்கள் என்று விளையாட்டாகக் கூறினேன். ஆனால் உண்மை அதுதான்.

வெளிநாடுகளின் உதவியின்றி, சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இன்றி எம்நாட்டின் அரசியல் அதிகார பீடந் தன்னை மாற்ற முன்வராது. ஆகவே எமது ஆராய்வுகள் வெறுமனே தமிழில் மட்டும் வெளிவந்து பயனில்லை. வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தாவது வெளிவரவேண்டும். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை; திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணங்கச் செய்தல் வேண்டும்" என்றான் பாரதி. ஆனால் இன்று நாமாக எதைப் படைத்தாலும் அதற்குப் புலிப்பட்டம் கட்டப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் வெளிநாட்டோர் உதவியுடன் திறமான புலமையை நாங்கள் உருவாக்க உழைக்க வேண்டும்.

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்கள் எழுதிய "தெமல பௌத்தயோ" அல்லது "தமிழ் பௌத்தர்கள்" என்ற நூலின் மறு பதிப்பை வரவிடாது பௌத்த பிக்குகளின் குழாம் ஒன்று தடுத்தது பற்றி உங்களுக்கு நினைவிருக்கலாம். அதாவது தமிழர்கள் பௌத்தர்களாகச் சிலகாலம் இருந்திருந்தால் அங்கிருக்கும் பௌத்த எச்சம் சிங்களவர்கள் இருந்தமையால் விட்டுச் செல்லப்பட்டது என்ற வாதம் அடிபட்டுப் போய்விடும் என்பதாலேயே அவ்வாறு அவர்கள் தடுத்தார்கள்.

அண்மையில் ஒருவர் வீட்டில் ஒரு நூலைக் காண நேர்ந்தது. இலங்கை சுற்றுலாத்துறையானது இந்திய மக்களைக் கவர்ந்திழுக்க சில காலத்திற்கு முன்னர் இராமாயண காலத்தையும் இன்றைய இலங்கையையும் பிணைக்கும் வண்ணம், இராமாயண கதாபாத்திரங்கள், நிகழ்வுகள் போன்றவற்றுடன் இங்குள்ள இடங்களும்

தலங்களும் இதர விடயங்களுஞ் சம்பந்தப்பட்டு இருந்ததை வெளிக்காட்டி பல வெளியீடுகளைப் பிரசுரித்தது. அவற்றுள் ஒன்றைத்தான் அவர் வீட்டில் மேல்வாரியாகப் பார்க்க நேர்ந்தது. முப்பதுக்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு இராமாயணக் காலத்துடன் சம்பந்தப்படுத்தி அந்நூல் வெளியிடப்பட்டிருந்ததைக் கண்டேன். இராமாயணம் கூறும் இலங்காபுரி எமது தற்போதைய இலங்கையோ என்பதில் பல கருத்து வேறுபாடுகள் இருப்பதை நானறிவேன். இராமாயணம் வெறும் கற்பனைக் கதையா? அல்லது உண்மையில் நடந்ததொன்றா? எனக் கேள்வி கூட கேட்கப்பட்டு வருவதை நான் அறிவேன். ஆனால் நான் கூறவருவது வேறு. மகாவம்சத்தில் அதன் ஆசிரியர் பௌத்தத்தை வளர்க்க ஒரு கற்பனைக் கதையைச் சொல்லப்போய் அக்கதையையே அடிப்படையாக வைத்து இன்று பெரும்பான்மை சமூகத்தினர் சரித்திரத்திற்கு ஒவ்வாத கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். மகாவம்சம் உண்மையில் நடந்தேறிய சம்பவங்களின் பதிவே என்ற விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அப்படியாயின் இராமாயணம் சம்பந்தமான ஆராய்வு எமக்கு எப்பேர்ப்பட்ட முடிவுகளைத் தரவல்லது என்ற கோணத்தில் இருந்து பார்க்குமாறு மதிப்பிற்குரிய எமது சரித்திர ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் மனதிலே வேரூன்றியிருக்கும் சில ஆழ்ந்த மதரீதியான எண்ணங்களை நாங்கள் மாற்ற முடியாது. உதாரணத்திற்கு புத்தர் பெருமான் அவர் காலத்தில் மூன்று முறை இலங்கை வந்தார் என்பதும் பல பிணக்குகளைத் தீர்த்து வைத்துச் சென்றார் என்பதும் எமது பௌத்த மக்கள் நம்பும் விடயங்கள். புத்த மதம் இலங்கைக்கு வர முன்னரே புத்தர் இங்கு வந்தார் என்றெல்லாம் கதைகள் கூறப்படுகின்றன. புத்தமதம் இலங்கைக்கு வராத காலத்திலேயே இங்கு வந்தவர் கௌதம புத்தர் தான் என்று எவ்வாறு மக்கள் அடையாளம் கண்டனர் என்பது போன்ற கேள்விகளை எவரும் எழுப்பியுள்ளதாகத் தெரியவில்லை. புத்தர் காலத்தில் புத்த பகவான் இலங்கை வந்திருந்தால் அவரின் புத்த மதம் மகிந்த தேரோவினால் பின்னைய காலத்தில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என்று கூறுவது பொருத்தமற்றதாக அமையும். ஏற்றுக்கொள்ளப்படமுடியாத இப்பேர்ப்பட்ட கருத்துக்கள் பல சிங்கள மக்களிடையே இன்று நிலவி வருகின்றன.

அதை எவரும் மாற்ற முடியாது. ஆனால் உண்மையை, உள்ள சான்றுகளின் அடிப்படையில், சர்வதேச நிபுணர்கள் வாயிலாக ஊரறியத் தெரிய வைத்தால் காலக் கிரமத்தில் அவ்வுண்மையை மக்கள் ஏற்க வேண்டி வரும். கட்டுக்கதைகளுக்கும் கருத்துள்ள வரலாற்றுக் கதைகளுக்கும் இடையிலான இடைவெளியைப் பொதுமக்கள் காலக்கிரமத்தில் புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது.

அண்மையில் நாங்கள் இனப்படுகொலைபற்றிய பிரேரணையை நிறைவேற்றியபோது "விக்னேஸ்வரனா இப்பேர்ப்பட்ட துவேஷம் நிறைந்த ஒரு பிரேரணையை நிறைவேற்றினான்?" என்று எனது சிங்கள நண்பர்கள் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். "சட்ட ரீதியாக இனப்படுகொலையை இவர்களால் நிரூபிக்க முடியாதே? அதுவும் 67 வருடகாலத்தை முன்வைத்து இப்பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. யாரைக் குற்றஞ் சாட்டுகிறார் இவர்?'' எந்த அரசாங்கத்தைக் குறிப்பிடுகின்றார்? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பினார்கள். அதற்கு நான் கூறிய பதில் - முதலில் உங்களைச் சிந்திக்க வைக்கவே இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தேன். நடந்தவற்றை நீங்கள் உணர்ந்து கொண்டால்தான் எமக்குள் நல்லிணக்கம் ஏற்படலாம். உண்மையைத் தெரிந்து கொண்டால்தான் நாங்கள் செய்த பிழைகளைக் கைவிட்டு நல்லிணக்கம் நோக்கி நடக்கலாம் என்றேன். அத்துடன் சட்டப்படி இனப்படுகொலையைப் பார்ப்பது ஒரு கோணம். யார் இனப்படுகொலையில் ஈடுபட்டார்கள், அது இனப்படுகொலையா? ஆதாரங்கள் உண்டா?, என்றெல்லாம் கேட்பது சட்டரீதியான கேள்விகள். நான் குறிப்பிடுவது சமூக ரீதியான விடயங்களை; எமக்கு நடந்ததை. இலங்கை பூராகவும் என் இளமைக்காலத்தில் பரந்து வாழ்ந்த தமிழ் மக்களை எவ்வாறு நீங்கள் அடித்துத் துரத்தித் தெற்கை உங்கள் சமூகத்தினர்களுக்கு மாத்திரம் என்று ஆக்கிவிட்டீர்களோ அதைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகின்றேன்'' என்று கூறினேன்.

எமது பிரேரணையை வெளிநாட்டுப் பிற இன மக்கள் வாசித்து அறிந்து இலங்கை நாட்டில் நடந்துள்ளதை அறிந்து வைத்திருக்கின்றார்கள். அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வெள்ளைக்காரர்கள் எமது நிலை பற்றி அறிந்து வைத்திருக்கும் அளவைக் கண்டு நான் பிரமித்து விட்டேன். எமக்கு நடந்தது ஒரு புறமிருக்க, எமது பாரம்பரியம் பற்றியும் அவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். ஆனால் சரித்திர ரீதியான ஏற்புடைய படைப்புக்களை வேண்டி நிற்கின்றார்கள். அதனை அவர்களுக்குக் கையளிப்பது உங்கள் பொறுப்பு என்று கூறவே எமது இனப்படுகொலை பற்றிய பிரேரணை பற்றி இங்கு பிரஸ்தாபிக்க வேண்டி வந்தது.

இன்று நாம் ஒரு வீழ்ந்த இனமாக எம்மை நாமே ஏமாற்றி வருகின்றோம். அதுபோல் வாழும் இனமாக பெரும்பான்மையினர் உலகிற்குத் தம்மைக் காட்டி வருகின்றார்கள். தேர்தலில் தேவையற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நாம் வீழ்ந்த இனத்தினர் அல்ல என்பதை எடுத்துக்காட்டவே சரித்திர ரீதியிலான வெளியீடுகள் விரைவில் வெளிவரவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தேன். நான் இங்கு அரசியல் பேசுவதாக எமது சகோதர சகோதரிகள் விசனப்படக் கூடாது. இந்நாட்டின் அரசியலுக்கு அடிப்படையாக அமைந்திருந்ததே எமது வரலாற்றுப் பிறழ்வுகளும் பிழைகளுந்தான்.

வடகிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையினராக இருந்த தமிழ்பேசும் மக்களை மற்றைய ஏழு மாகாணத்தின் மக்களுடன் சேர்த்துப் பார்த்து அவர்களைச் சிறுபான்மையினர் ஆக்கியதே அரசியல்தான். 1919 ஆம் ஆண்டில் பிரித்தானியர் எம்மை ஆண்ட போது அவர்கள் இன ரீதியாக எம்மை நெறிப்படுத்தி, இனங்களுக்கு வேண்டியவற்றைக் கையளிக்க ஆவன செய்தார்கள். இன ரீதியாக செயல்படுவது தவறு பிரதேச வாரியாகச் செயல்பட வேண்டும் என்று சிங்கள மக்கட் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். நாட்டைப் பிரதேசங்களாகப் பிரித்து அவற்றை அப்பிரதேச மக்களே ஆண்டு வரும் நிலை உருவாக வேண்டும் என்றார்கள். இதனை எமது வட மாகாண மக்கள் எதிர்த்திருந்தாலும் என் தாயாரின் உறவினரான சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள் இலங்கையை ஒரு ஒன்றிணைந்த, ஒருமித்த; ஐக்கியமுள்ள நாடாக மாற்றுவதென்றால் பிரதேச வாரியான தேர்வுக்கு நாம் இடம்கொடுக்க வேண்டும் என்று அடித்துக் கூறியதால் யாழ் மக்களின் தலைவர் கௌரவ சபாபதி அவர்கள் அவர் கோரிக்கைக்கு இடமளித்தார். அதிலிருந்து தான் எமது பிரச்சினைகள் உருவாகின. மிகச் சிறந்த மனிதர் சேர். பொன்னம்பலம் அருணாச்சலம்

அவர்கள். ஆனால் தன்னைச் சுற்றியிருந்த சிங்களத் தலைவர்களை அவரால் எடை போட முடியவில்லை.

1930 ஆம் ஆண்டுகளில் "சிங்களவர் மட்டும்" அமைச்சரவையையும் சிங்களத் தலைவர்கள் அமைத்தார்கள். 1956 இல் "சிங்களம் மட்டும்" சட்டத்தையும் கொண்டு வந்தார்கள். தமிழ் மக்களின் தரமுணர்ந்து அவர்களை ஓரம் கட்ட நினைத்திருந்த சிங்களத் தலைவர்களின் உள்ளெண்ணங்களை உணராது செயல்பட்டார் கௌரவமிக்க அருணாச்சலம் அவர்கள். அவரைப் போலவே பிழைவிட்டவர் இந்தியாவின் முன்னைய பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள். தாம் இருந்த மலையுச்சியில் இருந்து இறங்கி வரமுடியாத ஒரு நிலையில் அவர் இருந்தார். 1962 இல் சீனா இந்தியப் பிரதேசங்களை ஆக்கிரமித்த பின்னர் தான் அவருக்கு ஞானம் பிறந்தது. ஆகவே எமக்கு எதிரானவர்களின் மனோநிலையையுணர்ந்து செயலாற்ற வேண்டிய ஒரு நிலையில் நாம் உள்ளோம். அவர்களின் செயலாற்றலுக்கு அத்திவாரமாக அமைந்திருப்பது அவர்கள் சித்திரித்துள்ள கட்டுக்கதைகள். அவை கட்டுக்கதைகள் தான் என்பதை நாங்கள் சரித்திர ரீதியாக நிரூபித்தோமானால் அவர்களின் அத்திவாரமே உலக அரங்கில் ஆட்டங்கண்டுவிடும். அதற்கு அகிலதேச ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையானது தேவைப்படுகின்றது. அதனைப் பெறவே சர்வதேச ஆராய்ச்சிக் குழுவை நியமிக்குமாறு வேண்டி நிற்கின்றேன்.

அடுத்து எமது இந்து மாமன்றத்தின் ஆறு தசாப்த வரலாற்றை சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஆன்மீகப் பணிகள், அத்தியாவசிய சமூகப் பணிகள், அதற்கு மேல் கல்விப் பணிகள் என்று பல பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் எமது மாமன்றத்தினர். வெளியீடுகளை வெளியிட்டு வெற்றி கண்டு வந்துள்ளனர். கருத்துப் பொதிந்த "இந்து ஒளி" என்ன, சமயச் சிந்தனைகளை உள்ளடக்கிய உரைத்தொகுப்புக்கள் என்ன, இந்து மக்களுக்கான கையேடு என்ன, தெய்வத் திருமகள் பற்றிய படைப்புக்கள் என்ன, இவ்வாறான பலவித வெளியீடுகளை இதுவரை காலமும் வெளியிட்டு வெற்றிகண்டுள்ளார்கள் மாமன்றத்தினர்.

ஒரு சில விடயங்களில் அவர்களின் ஆர்வம் இருக்கும் அளவுக்கு இதுவரை ஆன விடயங்கள் அவ்வளவான திருப்தியைத் தரவில்லை என்று அங்கலாய்த்துள்ளார்கள் அவர்கள். அவற்றைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். சிவதொண்டர் அணிகள் சிறப்புமிக்கதாய் உருவாகாது சற்றுத் தொய்ந்து தளர்ந்து தொடர்வதாய் கூறப்பட்டுள்ளது. சைவவித்தகர் பயிற்சியில் போதிய ஈடுபாட்டை எமது இளைய சமுதாயம் காட்ட முற்படவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். நடைமுறையில் உள்ள ஆலயப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்க்க ஆரம்பிக்கப்பட்ட நடுத்தீர்ப்பு மையம் போதிய ஆர்வத்தை உண்டாக்கியதாகத் தெரியவில்லை என்று குறைபட்டுள்ளார்கள் எமது மன்ற அலுவலர்கள்.

இவற்றிலும் வெற்றிகாண வைப்பது எம் எல்லோரதும் கடமையாகும். வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் பலவிதப் பொதுப்பணிகள் கவனிப்பாரைக் காணக் காத்து நிற்கின்றன. கிராமங்கள் தோறும் ஆக்கபூர்வ காரியங்களை சிரமதான அடிப்டையில் முன் எடுத்து முடித்துக்கொடுக்க மாட்டார்களா எம் இளைஞர்கள் யுவதிகள் என்று கிராம மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள். சில சிவதொண்டர் அணிகள் கிராமங்களின் சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்த முன்வரமாட்டார்களா என்பதை எமது மாமன்றத்தினர் கேட்டறிய வேண்டும். எமது விவசாயத் திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம் போன்றவற்றுடன் இணைந்து சுற்றுச் சுற்றாடலைச் சுத்தப்படுத்தும் கைங்கரியத்தில் ஈடுபடலாம். மரங்கள் நடலாம். வேண்டுமெனில் அவர்களின் அன்றாட தேவைகளுக்கு ஏற்றாற் போல் பொதுமக்களிடம் இருந்து பெற்று ஒரு நிதியத்தை உருவாக்கி அவர்களுக்கு சிறப்புப் படி வழங்கவும் ஆவன செய்யலாம். சிவதொண்டர் அணிகள் சைவ ஆலயங்களின் சுற்றுப் புறத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியவற்றைச் செய்யலாம். திருநாவுக்கரசு நாயனாரின் உளவாரப் பணி அதுவாகத்தான் இருந்தது. வளமான கட்டுப்பாடும் வருமானமும் வழங்கப்பட்டால் எமது இளைஞர்கள் யுவதிகள் இப்பேர்ப்பட்ட கிராம எழுச்சித் திட்டங்களில் தம்மை இணைத்துக்கொள்ள முன் வருவார்கள் என்று நம்புகின்றேன். நிரந்தர வேலைக்காகக் காத்து நிற்கும் பலர் கூட இருக்கின்றார்கள். கிராம எழுச்சியையும், அழகுபடுத்தலையும், சமூக சேவையையும் இணைத்து ஒரு தொண்டினை ஆற்றவும் அதன் பால் சில பொருளாதார நன்மைகளைப் பெறவும் நாம் உதவி செய்தால் சிவதொண்டர் அணியினர் இடையே போதிய ஒரு உத்வேகத்தை உண்டு பண்ணலாம் என்று நான் நம்புகின்றேன். இவ்வாறான சேவைகள் தற்போது விஞ்ஞான பூர்வமாக விரிவடைந்து ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன. சர்வோதயம் போன்ற சேவை அமைப்புக்கள் இவைபற்றி கருத்தரங்குகளைக் கூட நடாத்தி வருகின்றன. எமது சிவதொண்டர் அணிகள் போதிய பயிற்சிகள் பெற வேண்டும். தம்மால் வடமாகாணத்தில் இருக்கும் கிராமங்கள் வளர்ச்சி அடைய முடியும், வளம் பெற முடியும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் எழவேண்டும். இதற்கான ஒரு சிறிய அலுவலகத்தைத் திறந்து சிவதொண்டர் அணிகளின் சேவைகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வர எமது மாமன்றம் ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து சைவ வித்தகர்களாகப் பாடம் பெறுபவர்கள் சைவ ஆராய்ச்சியிலும் ஈடுபட முன்வருவார்களா? என்பதை நாம் கேட்டறிய வேண்டும். சைவத்தைப் படிக்கும் அதேநேரம் எமது ஆலயங்கள் பற்றியும் அவற்றின் பாரம்பரியம் பற்றியும் போர்க்காலப் பாதிப்புக்கள் பற்றியும் அறிந்து இந்து மாமன்றத்திற்கு எடுத்தியம்ப முன்வருவார்களா? என்று அறிந்துகொள்ள வேண்டும். வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஆலயங்கள் பற்றிய ஆராய்ச்சியில் அத்தகையவர்கள் இறங்க நாம் ஆவன செய்ய வேண்டும்.

கடைசியாக நடுத்தீர்ப்பு மையங்கள் பற்றி ஒருசில வார்த்தைகள். நான் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றியபோது கண்டுகொண்ட ஒரு காரியந்தான் கோயில்களை எவ்வாறு சட்ட பூர்வமாகக் கொள்ளை அடிப்பது என்பதை. பல கோயில்களின் பிணக்குகள் எம்முன் நாளாந்தம் வந்து சென்றன. சிறிய சிறிய விடயங்களுக்குக் கூட பெரிய பெரிய சட்டத்தரணிகள் ஈடுபடுத்தப்பட்டனர். என்ன நடக்கின்றது என்று ஆராய்ந்து பார்த்ததில் தர்மகர்த்தாக்கள் நீதிமன்றம் வர ஆவலாக இருந்தார்கள் என்பதைக் கண்டு திடுக்குற்றேன். தர்மகர்த்தா ஒருவருக்கு வழக்கொன்று இருந்தால் கோயில் சொத்துக்களே அவருக்கு அனுசரணை வழங்க வேண்டியிருந்தது. சட்டத்தரணிகளுக்கென்று கோயில் பணத்தைப் பெற்று தர்மகர்த்தாக்களும் சட்டத்தரணிகளும் பங்கிட்டுக் கொண்டார்கள். சட்ட பூர்வக் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தார்கள். இதனால்தான் கோயில் வழக்குகளை சமாதானமாகத் தீர்ப்பதென்றாலும் சட்டத்தரணிகள் அதற்கு இடமளிக்காது வழக்குகளைக் கொண்டு நடத்தவே விருப்பப்பட்டார்கள்.

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# ஈழத்தில் புராணபடனமும் திருமுறை மரபும்

ஈழத்தில் பாடல் பெற்ற சிவத்தலங்களாகத் திருக் கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமும் இலங்குகின்றன. தேவாரத் திருமுறை அருளிய சுந்தரர், சம்பந்தர் 0

திருப்பதிகங்கள், திருகோணமலைத் திருப்பதிகம், திருக்கேதீச்சரத் திருப்பதிகம் என்றுள்ளன. அவை பன்னிரு திருமுறைகளுள் அடங்குவன. அட்டவீரட்டான வரலாறு கூறும் வீரட்டத் தலங்கள் தமிழ் நாட்டிலே (பரத கண்டத்திலே) உள்ளன.

“உலகில் சிவத்தலங்கள் 7742 உள்ளன. அவற்றுள் 3000 உத்தமம். அவையுள் 1000 மிக மேன்மையானது. இவைகளில் சிறந்தது 700. இவைகளில் தலைசிறந்தது 108. அதில் மிகமுக்கியமானது 34. அவைகளுள் மிகச்சிறந்தவை சோணைசலம், கேதார், கோகா்ணம், விருத்தாச்சலம், காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், ஸ்ரீவிரஞ்சயம், மந்தரமலை, கைலாசம், திருவண்ணாமலை, வைத்தீஸ்வரன் கோவில், மதுரை, சீர்காழி, தக்ஷண கோகா்ணம், மயூரம், காசி, திருவாவடுதுறை, சிதம்பரம், ஆடகேச்சரம், ஆடநாதன், காளஹஸ்தி போன்றவையாம்”.

தமிழகத்தோடும், பரத கண்டத்தோடும் மொழி, பண்பாடு, வணிகம், சமயம், கலாசாரம், வரலாறு, கோயில் வழிபாட்டு மரபு, இசை, நடனம், கலைகள், திருமுறை மரபு, ஆதீன மரபு, பல்கலைக்கழக மரபு, உயர்கல்வி இணைப்பு, திருமணக்கலப்பு, ஆய்வியல் உறவு என்பன கொண்டமைவது ஈழம். ஈழத்துத் தொடர்பிலே இங்கு விஜயம் செய்யும் தமிழக அறிஞர்கள், ஞானிகள், அரசியலாளர்கள், கல்விமான்கள், ஆதீனத்தர், தமிழகத்தை விட இலங்கையாகிய ஈழத்திலேயே குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே சைவமும், தமிழும் ஓங்கி வளர்வதாய்ப் புகழ்ந்துரைப்பது வழக்கம்.

***பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்***
(மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா, இலங்கை.)

பௌத்த சமயத்தினருக்கு பௌத்த சமயச்சொத்து பற்றிய கட்டளைச் சட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இந்து ஆலய பரிபாலனம் பற்றிய ஒரு சட்டம் உருவானால் இந்து ஆலயப் பிணக்குகளைத் தீர்க்கும் வழிமுறைகளையும் அவற்றுள் உள்ளேற்கலாம் என்று நம்புகின்றேன். அதுபற்றி இந்து மாமன்றம் கரிசனை எடுக்க வேண்டும்.

ஆலய பரிபாலனம் பற்றிக் குறிப்பாக எதனையும் அடுத்த சில நாட்களின் நிகழ்ச்சி நிரல் குறிப்பிடவில்லை என்று காண்கின்றேன். எனினும் அது பற்றிய அல்லது அதற்கு அண்மைத்தான விடயங்கள் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் வரும்போது இந்துமத ஆலய பரிபாலனத்தை உள்ளடக்கிய ஒரு சட்டத்தை உருவாக்குவது பற்றி எமது பேரறிஞர்கள் ஆராய்ந்து தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளலாம். பலவிதமான சிக்கல்கள் ஆலய பரிபாலனத்தில் இருப்பதை நான் அறிவேன். உதாரணத்திற்கு கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு குடிக்கு ஒரு சிறப்பம்சம் இருப்பதையும் கோயில் பாரம்பரியம் இருப்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். வேற்றிடங்களிலோ வேறு மாகாணங்களிலோ நடைமுறையில் இருக்கும் ஆலயப் பரிபாலன முறைகளை அங்குள்ள எம் மக்களுக்கு நாம் அறிமுகப்படுத்தும்போது அந்தந்த இடங்களின் தனித்துவ பாரம்பரியங்களையும் கருத்திற்கு எடுக்க வேண்டியிருக்கும்.

இன்று சமய அறிவு படைத்த பலவிதமான பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களை உள்ளடக்கிய குழுவொன்று ஆலய பரிபாலனம் பற்றிய ஒரு சட்டநகலைத் தயாரிக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கலாம். அதன் பின்னர் அதனைச் சட்டமாக்க முனையலாம்.

நடுத்தீர்ப்பு மையம் என்று கூறி விட்டு சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்று கூறுகின்றேனே என்று நீங்கள் மயக்கமடையக்கூடாது. சட்டத்தில் கட்டாயம் ஒன்றிருந்தால்தான் நடுத்தீர்ப்பு மையங்கள் நடைமுறைப் படுத்தப்படுவன. தன்னிச்சையான ஒரு நடவடிக்கை என்றிருக்கும் போது எவரையும் கட்டாயப்படுத்தி நடுத்தீர்ப்பு மையங்கள் முன் அவர்களைக் கொண்டுவர முடியாது. அதனால் தான் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றேன்.

இதுவரை காலமும் நடந்து வந்த தமது பாதையில் தாம் பெற்ற அனுபவங்களை அகில இலங்கை இந்து மாமன்றம் கவனத்திற்கு எடுத்து இனிவரப்போகும் காலத்தில் முதிர்ச்சியுடனும் தீர்க்க தரிசனத்துடனும் எமது இந்து மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் வழிகளில் பயணஞ் செய்ய வாழ்த்துகின்றேன்.

எமது வருங்காலம் வளமாக இருக்கப் போகின்றது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான். அறுபது முடிந்து அனுபவங்கள் அதிகம் பெற்று அதி முன்னேற்றப் பாதையில் உங்கள் மாமன்றம் வெற்றியுடன் பயணிக்க எனது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக! வளமுடன் யாவரும் வாழ வாழ்த்தி என் சிற்றுரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....

## ஈழத்துத் தலபுராண வரலாற்றில் தட்சிண கைலாச புராணம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தட்சிண கைலாசபுராணம் மிக முக்கியமான தல புராணமாக அமைந்துள்ளது. தலபுராணத்துக்கே உரிய பல பண்புகளைக் கொண்டிருக்கின்ற அதேவேளை புதிய பல அம்சங்களையும் கொண்டமைந்துள்ளது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலும் இப்புராணம் மிகுந்த முக்கியத்துவத்துக்கு உரியது. இலக்கிய வளத்திலும், வரலாற்று அம்சங்களை வெளிக்கொணர்வதிலும், பிராந்திய வாழ்வியல் கோலங்களை வெளிப்படுத்துவதிலும் தட்சிண கைலாசபுராணம் சிறப்பிடம் பெறுகின்றது.


*பெருமாள் சரவணகுமார்*
(விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)


# நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும்


**யா**ழ் குடாநாட்டின் நல்லூர் பிரதேசம் வரலாற்றுப் பெருமையும் ஆன்மீகச் சிறப்பும் கொண்டது. பண்டைய தமிழ் மன்னர்களது யாழ்ப்பாணத்து ஆட்சிக் காலத்தின் போது நல்லூர் இராசதானியாக விளங்கியது. பின்னாளில் சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த வளர்த்த ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர் பெருமக்கள், ஞானிகள் என்போர் பிறந்து வாழ்ந்து சிறப்பித்த இடமாக நல்லூர் இருப்பதால் உயர்நிலை பெறுகிறது. யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரைக்கு மூலவரான கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமி நல்லூர். இவரை ஞானகுருவாகக் கொண்ட செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். இவரது சீடரான யோகர் சுவாமிகளும் நல்லைக் கந்தனின் திருவருள் பெற்றவர். இத்தகைய ஞானபரம்பரைக்கும் நல்லூருக்கும் இடையிலான தொடர்பு மேன்மையானது. இந்த வகையில் தனித்துவமிக்க நல்லூரிலே நாவலர் பெருமானின் நினைவாக மணிமண்டபம், கலாசார மண்டபம் என்பன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், துர்க்காதேவி மணிமண்டபம், அகில இலங்கை இந்து மாமன்றம், இலங்கை சின்மயா மிஷன், திவ்ய ஜீவன சங்கம் உட்பட பல சமய கலாசார மன்றங்கள் என்பன நல்லூருக்கு நற்சிறப்பை ஏற்படுத்துகின்றன.

நல்லை நகரிலே இந்து ஆலயங்கள் பல இருந்தாலும் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு ஒரு தனித்துவமுண்டு. வரலாற்றுச் சிறப்பு மட்டுமல்ல இலங்கையின் கந்த கோட்டங்களுள் முதன்மை பெற்றும் விளங்குகிறது. நல்லைக் கந்தனின் மகோற்சவ காலத்தில் நல்லூர் மட்டுமல்ல யாழ் குடாநாடே புனிதம் பெற்று தெய்வீகப் பக்திக் கோலமாகக் காட்சி தரும் சிறப்பைக் காணலாம்.

நல்லூர் இராசதானி காலத்தில் முக்கிய ஆலயமாக நல்லூர் கந்தசுவாமி கோயில் திகழ்ந்தது என்பது வரலாற்றுப் பதிவு. அக்காலத்தில் நாற்றிசைக் கோயில்களாக வெயிலுகந்த பிள்ளையார் கோயில் வீரமாகாளி அம்மன் கோயில் சட்டநாதர் கோயில் கைலாசநாதர் கோயில் என்பன அமைந்திருந்ததை சுட்டிக்காட்டும் வரலாற்று ஆய்வாளர்கள் இந்த ஆலயங்கள் இப்போது பிற்காலத்திற்குரிய கலைமரபில் அமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் தோற்றம் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புடையதாய் இருப்பதால் ஏனைய ஆலயங்களுக்கு இல்லாத பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் இக்கோயில்களுக்கு உண்டு என்பதையும் எடுத்துச் சொல்கிறார்கள்.

நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா ஆழ அமாவாசையைத் தொடர்ந்து வரும் சஷ்டித் திதியில் ஆரம்பமாவது வழக்கம். அந்தவகையில் இவ்வருட மகோற்சவம் ஆகஸ்ட் 19 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. பத்தாம் நாளாகிய ஆகஸ்ட் 28 ஆம் திகதியன்று மஞ்சத் திருவிழாவும், 16 ஆம் நாளாகிய செப்டெம்பர் 3 ஆம் திகதியன்று அருணகிரிநாதர் உற்சவமும், 17 ஆம் நாளாகிய 4 ஆம் திகதியன்று கார்த்திகை உற்சவமும் 20 ஆம் நாளாகிய 7 ஆம் திகதியன்று கைலாச வாகன உற்சவமும், 21 ஆம் நாளாகிய 8 ஆம் திகதியன்று காலை கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், மாலை வேல் விமானம் உற்சவமும், 22 ஆம் நாளாகிய 9 ஆம் திகதியன்று காலை தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), மாலை ஒரு முகத் திருவிழாவும், 23 ஆம் நாளாகிய 10 ஆம் திகதியன்று சப்பரத் திருவிழாவும், 24 ஆம் நாளாகிய 11 ஆம் திகதியன்று இரதோற்சவமும், 25 ஆம் நாளாகிய 12 ஆம் திகதியன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறுவதுடன், மறுநாள் 13 ஆம் திகதியன்று நடைபெறும் பூங்காவன உற்சவத்துடன் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறுகிறது.

**பத்தொன்பது ஆண்டுகள் நிறைவாக மலரும் இந்து ஒளி – ஆன்மீக இதழை நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழாக அருள்மிகு முருகப் பெருமானின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து வணங்கி நிற்கின்றோம்.**



# திருவருட்பொலிவு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

சரித்திரப் பிரசித்தியும் திருவருட் பொலிவும் அழகுச் செழிப்பும் ஆன்மிகச் சூழலும், அன்பர் திருக்கூட்டமும், தூய்மைச் சிறப்பும், ஆலய பரிபாலனச் சீர்மையும், நித்திய நைமித்தியக் கிரியைகளில் நேர முகாமைத்துவ ஒழுங்கும், கந்தபுராண கலாசாரம் பேணப்படுவதில் உறுதியும், அடியார்களின் ஒழுங்கும் ஒத்துழைப்பும், சிவாச்சாரியர்களின் ஆன்மிகச்சேவை உணர்வும் குருத்துவச் சிறப்பும், தேரடி ஞானியரின் மகிமையும், கந்தன் கருணையும் நிரம்பப் பெற்ற சிறப்பினையுடையது நல்லைக் கந்தன் ஆலயம்.

"யாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்களிலே நல்ல ஊர் நல்லூர். அது தலைசிறந்ததொரு புண்ணிய சேஷத்திரம். இந்தத் திவ்விய சேஷத்திரத்திலே சித்தியெய்திய மகான் ஒருவரின் ஆத்மீக அலை, ஈழநாடு முழுவதிலும், பாரத நாட்டிலும், அப்பாலேயும் பரவியிருப்பது பிரசித்தம். இங்கே முருகனின் திருவருள் வெள்ளம் பிரவாகிக்கின்றது. வருடந்தோறும் எண்ணிறந்தவர்கள் அகமும் புறமுந் துயராய் உய்திதலைக் கூடுகின்றார்கள்." இவ்வாறு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டிருப்பது, நல்லூரின் தல விசேடத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இங்கு கூறப்பட்டுள்ள மகான், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்தையும் தமிழையும் உயிர்ப்பித்து வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார் என்பது தெளிவு.

*"எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்*
*இடர்களெல்லாம் போமே"* என்றும்,
*"சார்ந்தவர்க்குச் சாகா வரங்கொடுக்கும் நல்லூரை*
*வீழ்ந்து எழுந்து கும்பிடுவாய் விரைந்து"*

என்றும் கூறி எம்மையெல்லாம் கூவி அழைக்கிறார், சிவயோகர் சுவாமிகள்.

நல்லைக்கந்தன், அழகுக் கந்தனாக, அலங்காரக் கந்தனாக நல்லூரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்றான்.

நல்லூர் ஆலயத்தை வலம் வந்து நாளும் மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் துதிப்போர்க்குப் பழ வினைகளின் பந்திப்பு, புது வினைகளின் சந்திப்பு, பற்றுகள் ஈய்ந்த வெந்திப்பு, பல்லாற்றாலும் நேர்ந்த மந்திப்பு அனைத்தும் நீங்கப் பெற்றுவிடும். வாழ்வில் எஞ்ஞான்றும் தித்திப்பு, இனிமை, அழகு, ஒழுங்கு மிளிரும்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாறு பற்றிப் பல்வேறு கருத்துகள், ஒன்றிற்கொன்று முரணான வகையில், காணப்படுகின்றன. நல்லூர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கியமையும் அக்காலத்திலேயே அங்கு கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டு இருந்தமையும், யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்த மன்னர்கள், கோவிலை நன்கு பரிபாலித்து வந்தமையும் பற்றிய செய்திகளை யாழ்ப்பாணப் பண்டைய வரலாற்றைக் கூறும் கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை நூல்களும், பிற்கால வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புகளும் எடுத்துக் கூறுகின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தொன்மைச் சிறப்பினைக் கொண்டது நல்லூர்க் கந்தசுவாமி கோயில். யாழ்ப்பாண தமிழ் மன்னர்கள் காலத்தில் அழகிய பெருங் கோவிலாகப் பொலிவுடன் விளங்கிய இவ்வாலயம், பின்னர் ஐரோப்பிய அந்நியரின் ஆக்கிரமிப்பால் அழிவுற்று, பின் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், தற்போதைய ஆலயம் மீளவும் கட்டி எழுப்பப்பட்டது. ற

"யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பன்னிருவர்க்கு மேற்பட்டவர்கள். அவர்களுள் ஒருவனான தமிழரசனின் மந்திரி, புவனேகபாகு, அவர் பிராமணர், கங்காதரக் குருக்கள் என்பது அவரியற் பெயர். அவர் கி.பி. 950 - இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்." இவ்வாறு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, "நாவலரும் புராணபடனமும்", என்னும் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

*"இலக்கிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்டதெல்லை*
*அலர்பொவி மாலை மார்ப னாம்புவனேகவாகு*
*நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்த நல்லைக்*
*குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே".*

'கைலாயமாலை', என்னும் நூலில் இடம்பெற்றுள்ள இச்செய்யுள் அவரது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புவனேவாகு, திரிசங்கபோதி எனவும் அழைக்கப்பட்டான் என்பது ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச் சரித்திரம்", என்னும் நூலில் விசுவநாத சாஸ்திரியார் சம்பவக்குறிப்பு எனும் கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்துக் காட்டிய பின்வரும் செய்யுளிலிருந்து தெரிய வருகிறது.

*"இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபத்து நான்கி*
*னலர்திரி சங்க போதி யாம்புவனேக வாகு*
*நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து*
*குலவிய கந்தனார்க்குக் கோயிலொன் றமைப்பித்தானே."*

இதே புவனேகவாகுதான், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டியத்தில் குறிப்பிடப்படுபவன் என்பது அறிஞர் பலரின் கருத்து.

சோழப் பேரரசு இலங்கையில் நிலவிய பத்தாம் நூற்றாண்டில் கி.பி. 948-50 ஆம் ஆண்டளவில், சோழ மன்னனின் பிரதிநிதியாக இங்கு அவனால் அனுப்பப்பட்ட, அம்மன்னனின் அமைச்சர் புவனேகவாகு என்பவனால், நல்லூரில் குருக்கள் வளவு என்னும் காணியில் கந்தனுக்குப் பெருங்கோயில் அமைக்கப்பட்டது என்னும் செய்தியை ஒரு சாரார் தெரிவித்துள்ளனர்.

கி.பி. 1248 ஆம் ஆண்டு, யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தியான சிங்கையாரியரின்

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடும் அது சார்ந்த சடங்கு முறைகளும் – ஓர் ஆய்வு

கண்ணகி வழிபாடானது கிழக்கிலங்கை மக்களின் வாழ்வில் பெரும் பங்களிப்பை நல்கி வந்துள்ளது. கண்ணகியை கற்புக்கரசியாக, பத்தினிப் பெண்ணாக போற்றி வந்த இப்பிரதேச மக்கள் ஒழுக்கம் நிறைந்த நன் மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர். குறிப்பாக இப்பிரதேச கிராமிய மக்கள் மானத்தை பெரிதெனக் கருதி ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் தன்னை கண்ணகியாகவே கருதி வாழ்ந்து வந்துள்ளனர். கண்ணகி அம்மனை தங்கள் குலதெய்வமாகக் கருதிய இவர்கள் தங்கள் குறைகளை அம்மனிடம் முறையிட்டு அதற்குரிய பயன்களையும் பெற்று கணவனுடன் கருத்தொருமித்து வாழ்ந்து வந்துள்ளனர்.

ஆயினும் இன்றைய காலகட்டத்தில் அந்நம்பிக்கைகள் அனைத்தும் பொய்யாகி விட்டதென்றே கூறலாம். ஏனெனில் இன்றைய சமூகம் பல்வேறு துறைகளில் மேம்பாடு கண்டு கல்வி, பொருளாதாரம், அரசியல், வாணிபம் ஆகியவற்றால் பல கிராமிய சமூகங்களில் இவைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவர்களிடையே கண்ணகி வழிபாடு, பாரம்பரிய பெருமைகள், விழுமியங்கள், கலை, கலாசார மரபுகள், தெய்வநம்பிக்கைகள் என்பன பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட போலி வாழ்க்கையினால் அழிக்கப்பட்டுவிட்டன. ஆயினும் கிழக்கிலங்கையில் சில கிராமங்களில் பாரம்பரிய மரபுகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன என்றால் அது அம்மன் அருளாகவே நோக்கலாம்.

*பொன்னுத்துரை பூலோகநாதன்*
(M.A,) M.Phil Read,University of peradeniya).
முன்னாள் உதவி விரிவுரையாளரும், வருகை
விரிவுரையாளரும் (மெய்யியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்)

முதன் மந்திரியான புவனேகவாகு என்பவனே நல்லூரில் குருக்கள் வளவு என்னும் பெயருடைய நிலத்தில் கந்தனுக்குக் கோயில் அமைத்தான் என்ற கருத்தும் உள்ளது.

செண்பகப் பெருமாள் என்பவன், கோட்டை இராச்சியத்தின் மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகன். சப்புமால்குமாரய என்றும் அவன் அழைக்கப்பட்டான். இக் காலப்பகுதியில் - கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் - கனகசூரிய சிங்கையாரியன் என்னும் தமிழ் மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்து வந்தான். கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு தனது வளர்ப்பு மகன் செண்பகப் பெருமாள் தலைமையில் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றுமாறு படையொன்றை அனுப்பினான்.

செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்து, மாடமாளிகைகளை அழித்து, கந்தசுவாமி கோயிலையும் தரைமட்டமாக்கி, அரசைக் கைப்பற்றி, கோட்டைக்கு மீண்டான். யாழ்ப்பாண அரசன் கனகசூரியன் தன் குடும்பத்தாருடன் இந்தியாவிற்குச் சென்று திருக்கோவிலூரில் மறைந்து வாழ்ந்தான்.

பராக்கிரமபாகு, செண்பகப் பெருமாளை யாழ்ப்பாண மன்னனாக நியமித்து, அரசாட்சி செய்யுமாறு பணித்தான். நல்லூரிலே கி.பி. 1450 ஆம் ஆண்டளவில், ஒரு புதிய நகரைக் கட்டியெழுப்பிய செண்பகப் பெருமாள், சிறீ சங்கபோதி புவனேகவாகு என்னும் நாமம் பூண்டு, பதினேழு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை அரசு செய்து வந்தான். தனது படையெடுப்பினால் அழிக்கப்பட்ட கந்தசுவாமி கோயிலை, தான் செய்த தவறினை உணர்ந்தவனாய், அதற்குப் பரிகாரமாக மீளவும் கட்டியெழுப்பினான் என்று கூறப்படுகின்றது. இக்கோயில் முத்திரைச் சந்திக்கு அருகாமையில் தற்போது கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள நிலத்தில் அமைக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக குவைறோஸ் பாதிரியாரின் THE TEMPORAL AND SPIRITUAL CONQUEST OF CEYLON என்னும் நூலும், பால்டேயஸ் பாதிரியாரின் A TRUE AND EXACT DESCRIPTION OF GREAT ISLAND, CEYLON என்ற நூலும் உள்ளன.

கி.பி 1467 இல் கோட்டையை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு இறந்தான். அவனுக்குப் பின் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திலிருந்து கோட்டைக்குச் சென்று, ஆறாம் புவனேகவாகு எனும் பெயருடன் கோட்டை அரசனானான். அவ்வேளை யாழ்ப்பாணத்தை ஆள்வதற்கு விசயபாகு என்பவனை நியமித்தான். அவனின் ஆட்சி காலத்தில் இந்தியாவிலுள்ள திருக்கோவிலூரில் மறைந்து வாழ்ந்து கொண்டிருந்த கனகசூரியன் பெரும் படையுடன், யாழ்ப்பாணம் மீண்டும் வந்து விசயபாகுடன் போரிட்டு அவனை வென்று, மீண்டும் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகி நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தான். பல குளங்களை அமைத்து நீர் வளம் பெருக்கினான். நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்து, அழகும் அருளும் மிளிரப் பரிபாலனஞ் செய்து வந்தான். இராச வீதிகளும், அரண்மனைகளும், வளமனை வீதிகளும், பல்வேறு தொழிலாளர் இருப்பிடங்களும் பூங்காக்களும் அமைத்து நல்லூரை, நல்ல ஊராக அழகு கொழிக்கச் செய்தான்.

கி.பி. 1478 இல் கனகசூரியனுக்குப் பின், அவனின் மகன் சிங்கைப் பரராசசேகரன் யாழ்ப்பாண அரசனானான். அவன் நல்லைக் கந்தன் ஆலயத்துக்குத் திருக்குளம் அமைத்து, வட இந்தியா யமுனை நதியிலிருந்து புனித

நீர் கொண்டு வந்து, பெய்து, யமுனா ஏரி என அதற்குப் பெயரிட்டான். யமுனாரி என்ற பெயரில், சங்கிலித்தோப்பில் இன்றும் அங்கு காணப்படுகிறது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு நாற்திசையிலும் நான்கு திருக்கோயில்களைக் கட்டுவித்து, நல்லூர்த் தலைநகரை முன்னையிலும் அழகும் தெய்வீகமும் கமழ, விளங்க வைத்த பெருமைக்குரிய வன் சிங்கைப் பரராஜசேகரன் ஆவான். கந்தசுவாமி கோயில் நடுவில் அமைய கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தையும், தெற்கே கைலாயநாதர் கோயிலையும், மேற்கே வீரமாகாளி அம்மன் ஆலயத்தையும், வடபாலில் சட்டைநாதர் கோயிலையும் கட்டுவித்து நல்லூரை அணிசெய்தான். இவ்வாறு முதலியார் இராசநாயகம் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு ஆரியச்சக்கரவர்த்திகள் நல்லூரிலிருந்து அரசு செலுத்திய காலத்தில் முடியுடை வேந்தரும், மந்திரி பிரதானிகளும் மக்களும் பயபக்தியோடு சென்று சிரந்தாழ்த்தி வணங்கி வழிபாடு செய்யும் திருத்தலமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திகழ்ந்தது. யாழ்ப்பாண இராசதானி மன்னர்கள், தமிழையும் சைவத்தையும் கண்களைப் பாதுகாப்பது போலப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். கந்தன் ஆலயத்தின் பரிபாலனத்திலும், திருப்பணிகளிலும், பராமரிப்பிலும், நித்திய நைமித்தியங்களிலும் பெருஞ் சிரத்தை காட்டி வந்தனர். நல்லைக் கந்தன் அருளால் மன்னரும் மக்களும் சீரும் சிறப்பும் பெற்று வளமாகவும் நல்ல வண்ணமும் வாழ்ந்தனர். ஆய கலைகளும் ஆன்மிகமும் தமிழும் தழைத்து ஓங்கின. கந்தபுராண கலாசாரம் பல்கிப் பெருகியது.

கி.பி 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கடைசித் தமிழ்மன்னன் சங்கிலி என்பவன் போர்த்துக்கீசரால் தோற்கடிக்கப்பட்டு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கீசர் வசமானது. 1621 ஆம் ஆண்டில் போர்த்துகீசத் தளபதி பிலிப் த ஒலிவேரா என்பவனின் கட்டளைக்கிணங்க நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இடித்து முற்றாக அழிக்கப்பட்டது. அவ்வாறே ஏனைய சைவக்கோயில்களும் அழிக்கப்பட்டன. போர்த்துக்கீசர் தமது மதத்தைப் பரப்பும் நோக்கத்துடனேயே இத்தகைய அழிவு வேலைகளில் ஈடுபட்டனர்.

கி.பி. 1658 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் எனப்படும் டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இவர்கள் புரட்டஸ்தாந்து கிறீஸ்தவ மதத்தை சுதேசிகளிடம் பரப்புவதிலும் தேவாலயங்களை நிறுவுவதிலும் அதிக சிரத்தை செலுத்தினர். அரச உத்தியோகங்கள், பட்டம், பதவிகளை வழங்கிச் சுதேசிகளை மதமாற்றம் செய்தனர். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்னர் இருந்த இடத்திலே கிறிஸ்தவ தேவாலயம் அமைத்தனர். கோயில் இடிக்கப்பட்டு எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டே, ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டினார்கள் எனச் சரித்திரம் கூறுகிறது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் சைவசமயம் இன்னல்களுக்குள்ளாகியது. சமய வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. எனினும், பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அது சற்று தளர்த்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் சிறாப்பர் ஆகக் கடமையாற்றிய தொன் ஜுவான் இரகுநாதமாப்பாண முதலியார், பதவிகாரணமாகத் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, கி.பி 1734 ஆம் ஆண்டளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டியெழுப்புவதற்குரிய உத்தரவைப் பெற்றார். கோயில் முன்னர் அமைந்திருந்த யமுனாரிக்கு அயலில் உள்ள இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டுவிட்டதால், பிறிதோரிடத்தில், கந்தனுக்குக் கோயில் அமைக்கப்பட்டது. தொடக்கத்தில் மடாலயம் ஆக விளங்கியது. இந்த மடத்தில் வேல் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. கந்தபுராணம் படித்துப் பயன்சொல்லும் மடம் ஆகவே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. கோபுரம், தூபி, பெரிய கட்டடங்கள் இன்றியே, மடாலயம் ஆக அமைத்து அமைதியாக வழிபாடு செய்து வந்தனர். “நல்லூர்க் கந்தசுவாமி கோயில், குருக்கள் வளவு என்னுங் காணியில் கட்டப்பெற்றுள்ளது. தமிழ் மன்னன் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதம அமைச்சர் புவனேசவாகரினால் கி.பி 884 ஆம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது. இதனை இரகுநாதமாப்பாண முதலியார் கி.பி 1734 இல் மீண்டும் கல்லினாலும் செங்கற்களினாலும் கட்டினார். ஓட்டினால் வேயப்பெற்றது.” இவ்வாறு முதலியார் குல சபாநாதன், தமது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றிய நூலில் குறிப்பிடுகிறார்.

இரகுநாதமாப்பாண முதலியாரின் பணிகளுக்கு, கிருஷ்ணய்யர் சுப்பையர் என்ற பிராமணக் குருக்கள் உதவியாக இருந்தார் என்ற செய்தியும் அறியப்படுகிறது. அவரே முதற் பூசகராக இருந்தார். என்றும் கூறப்படுகிறது.

இரகுநாத மாப்பாண முதலியார் வம்சத்தினரே பரம்பரை அறங்காவலர்களாக, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச் சீராகவும் சிறப்பாகவும் பரிபாலனம் செய்து வருகின்றனர். 1899 ஆம் இல் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்பெற்றது. 1902 ஆம் ஆண்டு மூலஸ்தானத்தளம், மற்றும் அர்த்த மண்டபம் கருங்கற் திருப்பணியாக நிறைவேறின. 1909 ஆண்டில் சுற்றுப் பிரகார மண்டபங்கள் கட்டப்பெற்றன. சுற்றுமதில்களும் அமைக்கப்பெற்றன. தொடர்ந்து காலத்துக்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு அழகுக்கு அழகு செய்யப்பட்டது. 1964 இல் வசந்தமண்டபம் புனரமைக்கப்பட்டது.

நித்திய நைமித்தியக் கிரியைகள், பூசைகள், விழாக்கள் என்பனவற்றை விதிப்படியும் காலநேரந் தவறாமலும் நடத்தப்படுகின்ற நடைமுறையில் கண்ணுங் கருத்துமாக அறங்காவலர்களும் அந்தணப் பெருமக்களும் சிரத்தை காட்டினர். படிப் படியாக ஆண்டுதோறும் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1964ம் ஆண்டு புதிய தேரினைக் கலை அழகு மிளிரச் செய்வித்தமை அற்புத நிகழ்வாகும். உயர்திரு ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் காலத்தில் இது நிறைவேற்றப்பட்டது. இன்னும் பல திருப்பணிகள் இவர் காலத்தில் நடைபெற்றன. 1964 இல் அவர் இறைவனடி சேர்ந்தார். அவருக்குப் பின்னர் அவருடைய சகோதரர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார், 1964 முதல் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அறங்காவலராக, வியத்தகு முறையில் கடமையாற்றி வருகிறார்.

**[திரு. வை. சோமசேகரன் அவர்களால் தொகுக்கப்பட்ட ஈழத்து ஆலயங்கள் - யாழ் மாவட்டத் திருத்தலங்கள் : பாகம் 1 நூலிலிருந்து - மாமன்ற வெளியீடு]**

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

## மட்டக்களப்புத் தேசம் – அதன் வரலாற்றுப் பின்னணியும் தனித்துவமான இந்துப் பண்பாடும்

இத்தேசம் தரைவழி ஊடாட்டங்களைப் பேணியபோதும், மற்ற எந்தப் பிராந்தியத் தமிழரையும் விட, முஸ்லீம்கள், மலைநாட்டுச் சிங்களவருடன் தொடர்புகளைப் பேணும் அதிக வாய்ப்பும், கடல் வழியே தமிழக, கேரளத் தொடர்புகள் தொடரவும், மட்டக்களப்பின் தனித்துவமான புவியியலமைப்பே வழிகோலிய தெனலாம். எனவே, ஈழவள நாட்டுக்குள்ளேயே பண்பாட்டுப் பல்வகைமையும் அதேவேளை தனித்துவமும் கொண்டதோர் தமிழ்ச் சமூகம், அங்கே நிலை பெறலாயிற்று.

**விவேகானந்தராஜா துலாஞ்சனன்**
(விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)

# திருமுருகாற்றுப்படை சொல்லும் ஆறுபடைவீடு சிறப்புகள்

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமான் வரலாறு பற்றி முதன் முதலாக தமிழில் படைக்கப் பெற்ற இலக்கியம் 'திருமுருகாற்றுப் படை' ஆகும். தமிழ்ப் புலவரான நக்கீரர், முருகனின் அருள் பெற்று இயற்றிய சங்க இலக்கியமான இதில், முருகப் பெருமான் கோவில் கொண்டுள்ள ஆறு படை வீடுகளைப் பற்றி தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

### திருப்பரங்குன்றம்

'முதல் படை வீடு' என்ற பெருமையை இது பெறுகின்றது. சூரபத்மனை அழித்து, தேவர்களைப் பாதுகாத்தார் முருகப் பெருமான். அவருக்கு தன் மகள் தேவசேனாவை மணம் முடிக்க விரும்பினான் இந்திரன். முருகப் பெருமான் - தேவசேனா திருமணம் நிகழ்ந்த திருத்தலமே முதலாம் படை வீடாகிய திருப்பரங்குன்றம். திருப்பரங்குன்றத்தில் மலையைக் குடைந்து கர்ப்பக்கிரகம் அமைக்கப் பெற்றுள்ளது. இங்கு தான் ஈசனை நோக்கி முருகன் தவம் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

### திருச்செந்தூர்

சூர பத்மனை முருகப் பெருமான் அழித்த திருத்தலமே இரண்டாம் படை வீடான திருச்செந்தூர். இங்கு ஆண்டு தோறும் கந்த சஷ்டி விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஊமையாக இருந்த குமர குருபரர், செந்திலாண்டவர் அருளால் பேசும் சக்தி பெற்று பாடும் திறனும் பெற்றது இங்குதான். டச்சு கொள்ளையர்களை நடுநடுங்க வைத்து, அவர்களையும் தன்னை வணங்க வைத்த தனி ஆற்றல் படைத்தவர் திருச்செந்தூர் முருகன் என்றொரு கர்ண பரம்பரைக் கதையும் உண்டு.

### பழநி

இங்கு நவ பாஷனங்களால் உருவாக்கப்பட்ட ஞானப் பழமாக முருகப் பெருமான் விளங்குகின்றார். பழநி முருகனின் அழகை காணக் கண் கோடி வேண்டும் என்பார்கள். கிரிவலம் இங்கே பௌர்ணமி நாளில் நடைபெறுகிறது. சண்முகன் ஆண்டி கோலம் கண்டதும் இங்கேதான். மூன்றாம் படை வீடான பழநியில் ஆண்டுதோறும் நிகழும் பங்குனி உத்தரப் பெருவிழாவின் போது பல்வேறு காவடிகள் சுமந்து பாத யாத்திரையாக பக்தர்கள் வருகின்றனர். இங்கு திருத்தேர் விழா, திருக்கல்யாண விழா, கந்த சஷ்டி விழா, ஆடிக் கிருத்திகை விழா ஆகியவையும் மிகச் சிறப்பாக நடக்கின்றன.

### சுவாமிமலை

இந்த நான்காம் படை வீடான சுவாமி மலையில்தான் தந்தை சிவபெருமானுக்கே தனயன் சண்முகன் உபதேசம் செய்த திருவிளையாடல் நிகழ்ந்தது. இந்தத் திருத்தலத்தைத் திருமுருகாற்றுப் படையும், சிலப்பதிகாரமும் 'திரு ஏரகம்' என்று குறிப்பிடுகின்றன. தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் அருகிலுள்ள சுவாமி மலையில் ஆடிக் கிருத்திகை விழா, கந்த சஷ்டி விழா, வைகாசி விசாகப் பெருவிழா, பங்குனி உத்திரப் பெருவிழா ஆகியவை மிகவும் சிறப்பாக நடக்கின்றன.

### திருத்தணி

சூரனை அழித்து சினம் அடங்கி அமைதி காண முருகப் பெருமான் திருக்கோவில் கொண்ட ஐந்தாம் படை வீடுதான் திருத்தணி. குறவர் குலப் பெண்ணான வள்ளியை முருகன் மணம்புரிந்த திருத்தலம் என்ற தனிச் சிறப்பும் திருத்தணிக்கு உண்டு. ஆடிக் கிருத்திகை விழா மிகவும் சிறப்பாக இங்கு நடக்கிறது.

### பழமுதிர்ச் சோலை

ஆறாம் படைவீடான இங்குதான் முருகன் சிறுவனாய் வந்து ஔவையாரை சோதித்த திருவிளையாடல் நிகழ்ந்தது. அந்த நாவல் மரத்தின் கிளை மரம் இன்றும் சோலைமலை உச்சியில் காணப்படுகிறதாம். அருணகிரிநாதர் இத்தலம் மீது திருப்புகழ் பாடியுள்ளார். விஷ்ணு கோயிலான அழகர் கோவில் இதற்கு அண்மையில் அமைந்துள்ளது. 'அழகர் மலை' எனவும் இது அழைக்கப்படுகிறது. மதுரையிலிருந்து 15கிலோ மீட்டர் தொலைவில் இந்த திருத்தலம் அமைந்துள்ளது.

(நன்றி:-இணையம்)



PUBLIC LIBRARY JAFFNA

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

## ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சியில் மடங்கள்

சைவசமய மடங்களின் தோற்ற வரலாறு, மடங்களின் கட்டிட நிர்மாண முறைமை, சைவசமய வளர்ச்சி வரலாற்றிலே மடங்களின் பங்களிப்பு, சைவ சித்தாந்த நெறிக்கமைய இயங்கிய மடங்கள், சைவத் துறவிகளின் வாழ்விடமாகச் சைவ மடங்கள் இயங்கியமை, சைவ சமயக் கடவுளர் பற்றிய கொள்கைகளை விவாதிக்குமிடமாக அமைந்தமை. சித்தாந்த சாஸ்திரங்கள், திருமுறைகள், குருபூசைகள், திருவடி வழிபாடுகளைச் சைவ சமய மடங்கள் முன்னெடுத்தமை, வழிப்போக்கர்களுக்கான ஆதுலர்சாலைகளாகப் பயன்பட்டமை, கால் நடைகள், மிருகங்களின் நீர் வேட்கை, உடல் வேட்கைகளை நீக்க ஆவுரோஞ்சிக்கல், நீர்த்தொட்டிகளை அமைத்துப் புண்ணிய கருமங்களை ஆற்றுதல், பொழுதுபோக்குமிடம், ஆறுதலளிக்கும் மடங்கள், உலக விவகாரங்கள் புதினங்களைக் கூடிக் கதைக்கும் இடம், பிரயாணத்தின் போது களைப்பாறுமிடம், உறங்கிச் செல்லும் இடம், பொதிகளை இறக்கி வைத்து ஆறிச் செல்லும் நிலையங்களாகத் தொழிற்பட்டமை, உறங்கியும் தங்கியும் செல்லுமிடங்களானமை, வயது முதிர்ந்தோருக்கான சங்கமம் நிகழும் இடமாக அமைந்தமை, தத்துவ சாத்திரப் போதனைகள் இடம்பெற்று அறிவு நிலையங்களாகவும் அனுபவப்பகிர்வுப் பீடமாகவும் தொழிற்பட்டமை என்பன இவ்வாய்விலே அடங்குவனவாம்.

*கலாபூஷணம் தம்பு துரைராஜா*
கொழும்பு.

# அலங்காரக் கந்தனாகப் போற்றப்படும்

# நல்லைக் குமரன்

நல்லையம்பதியில் எழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமான் அலங்காரக் கந்தனாகப் போற்றப்படுகிறார்.

மகோற்சவ காலங்களில் முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக வெவ்வேறு அலங்காரங்களுடன் வீதியுலா வரும் காட்சி பக்திபூர்வமானது. முருகப் பெருமானுக்குரிய சாத்துப்படியும் வீதியுலாவரும் வாகனமும் விதம்விதமான சோடனை அலங்கரிப்பில் அமைந்திருக்கும். சில முக்கிய உற்சவங்களின் போது வீதியுலா வரும் முருகப் பெருமானின் அலங்காரத்துடன் இணைந்த வகையிலான நிறங்களிலான வஸ்திரங்களையே மகோற்சவத்தை நடத்திவைக்கும். குருமார்களும் அணிந்திருப்பார்கள்.இந்த வகையில் சிறப்பான சாத்துப்படியும் சோடனைகளும் அமைந்திருப்பது காரணமாக இங்கு எழுந்தருளியிருக்கும் குமரக் கடவுள் அலங்காரக்கந்தனாக போற்றி வழிபாடு செய்யப்படுகின்றார்.



இதற்கும் மேலாக நல்லைக் கந்தன் ஆலயமும் அலங்காரச் சிறப்பினையும் ஓர் அழகுப்பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குகின்றது. முருகு என்றாலே அழகு. எல்லாமே அழகாக நேர்த்தியாக செம்மையாக நன்மையாக இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தை உலகிற்கு உணர்த்துவதுடன் உலகினை அழகு செய்வதற்கு தோன்றியவன் முருகன். அழகன் முருகனின் அருட் பொலிவும் தெய்வ சாந்நித்தியமும் நல்லூரின் அழகுப் பாரம்பரியத்துக்கு காரணமாக இருக்கின்றன. அத்துடன் ஆலயத்திலும் அதன் சூழலிலும் நிலவுகின்ற தூய்மை, ஆலய நித்திய நைமித்திய பூசை ஆராதனைகளில் நேரந்தவறாமை, ஆலய முகாமைத்துவச் சிறப்பு அர்ச்சகர்கள் தொண்டர்கள் வழிபடுவோர் ஆகியோரின் ஒத்துழைப்பு ஒழுங்குமுறைகள் என்பன அழகுக்கு அழகு செய்வனவாக அமைகின்றன. இவற்றால் தான் ஓர் அழகுப் பாரம்பரியம் நல்லைப்பதியில் நிலையூன்றியுள்ள அலங்காரக்கந்தனின் சிறப்புக்கு அணிசெய்வதாக இருப்பதை குறிப்பிடலாம்.

# நல்லைக் கந்தன் திருவூஞ்சல்



### காப்பு

திருமேவு மணிமார்பத் தவனும் வேதச்
செங்கமலத் தயனாலுந் தேடற் கெட்டாப்
பெருமானுந் துயர்தவிர்த்தே அடிமை கொண்ட
பேராளன் சீராளன் பிறப்பில் லாதான்
பொருசூரன் உடல்பிளந்து நல்லை மேவும்
புலவனுக்கே ஊஞ்சலிசை போற்றிச் சொல்ல
ஒருகோட்டுத் தழைசெவியக் களிற்றுப் பிள்ளை
உபயமல ரடியகத்தே யுன்னல் செய்வாம்.

### ஊஞ்சல்

நிரஞ்சனமாஞ் சத்திசிவங் கால்க ளாக
நிகரில்பரா பரமணியேநல் விட்ட மாக
பரந்தகலை ஞானமா கமங்கள் சாத்திரம்
பன்னுபுரா ணங்கள்முறு கிளைய தாக
அரந்தையகல் நால்வேதங் கயிற தாக
அழகொழுகு பொற்பலகை குடிலைய தாக
நரந்தநிறை அட்டதிக்குக் கமழுந் நல்லை
நகர்மேவு கந்தரே யாடீ ரூஞ்சல்!

அம்பரம்பீ தாம்பரம்நல் விதான மாக
அலருடுக்கள் நவமணியின் மாலை யாக
செம்பதும நாயகனும் மதியத் தேவுந்
திருமிகுத்த கண்ணாடியின் னிறைய தாக
நம்புசுடர் ஞானமே விளக்க மாக
நாதவிந்து மங்கலவா லாத்தி யாக
உம்பரெல்லாந் துதிபேசிப் பாடி யாட
உயருநல்லை நற்கந்தரே யாடீ ரூஞ்சல்!

முக்குணமுங் கவிகையே யாகி யோங்க
மொழியுமறம் பொருளின்பம் வீடே நான்கும்
பக்கமொடு சாமரையின் பந்தி யாகப்
பகர்மோட்ச மொளித் தீப மாக
மிக்கவன்பு மலராலே அயனும் மாலும்
வேண்டுவரம் பெறுவதற்கே பூசை செய்ய
நக்கனரன் புதல்வரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

கனக முடியாறும் பிரபை வீச
நல்லகட் செவியானும் கிருபையை நாட்ட
பனகமணிக் குண்டலமீ ராறுந் திவ்ய
பானுவொளி தனிக்கிரணம் பரிந்து வீச
புனையுமணிக் கலனாட முறுவ றோன்றப்
புதுமதிய முகமாறும் பொதிதல் செய்ய
அநககுரு பரமுதல்வா ஆடீ ரூஞ்சல்
அழகுநல்லைக் கந்தரே யாடீ ரூஞ்சல்!

அந்தமிலா நீலமணி மயிலு மாட
அழகியபொற் சதங்கைகலின் கலினென் றாட
செந்திருவார் பரிபுரங்கள் தானு மாடச்
செம்பொளியி னுடையசைந்து சிறப்பா யாட
எந்தனகத் திருந்தருளும் பாத மாட
எவ்வுயிர்க்குந் தானவனா யிருந்தே யாட
நந்தலிலாப் பரம்பொருளே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

பன்னிருகை பொலிந்தாடச் சூரன் மார்பைப்
பகிர்ந்தவயில் வெகுபராக் கிரமத் தாடச்
சொன்னபல வாயுதமுந் துலங்கி யாடச்
சுந்தரமாம் பொற்புரிநூல் மார்பி லாட
சென்னிறச்சூட் டுச்சேவற் கொடியு மாடத்
தெளிவுறுபொற் கங்கணங்கள் சீரா யாட
நன்னதிசே யானவரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

கள்ளார்ந்த கடம்பமலர் மாலை யாடக்
கதிகெழுவு ரத்னமணிக் கவச மாட
உள்ளார்ந்த வரைஞானுங் கச்சு மாட
உறுநர்துயர் தீர்த்திருந்த வுடைவா ளாட
எள்ளார்ந்த தெய்வவடி வான மாத
ரிருபேரு மிருபக்கத் திருந்தே யாட
நள்ளாற்று வேலவரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

தாயாயெவ் வுயிர்க்குந் தானாய் நின்று
தண்ணளியைப் புரிபவரே யாடீ ரூஞ்சல்
மாயோன்றன் மருகனே யாடீ ரூஞ்சல்
வானவர்சே னாபதியே யாடீ ரூஞ்சல்
சேயேசட்சமய பராபரரே யாடீ ரூஞ்சல்
தேவாதி தேவரே யாடீ ரூஞ்சல்
நாயேனைத் தொண்டுகொண்டா யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

திரிபுவன கர்த்தாவே யாடீ ரூஞ்சல்
சிவஞான போதகரே யாடீ ரூஞ்சல்
வறுமைதவிர்த் தாள்பவரே யாடீ ரூஞ்சல்
வரையெறிந்த சேவகரே யாடீ ரூஞ்சல்
அறிவகத்தே ஆக்கியவா யாடீ ரூஞ்சல்
அடியாரை யஞ்சலென்பா யாடீ ரூஞ்சல்
நறியமணங் கமழ்புயனே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

### வாழி

அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி
அழகியநல் லைச்சனங்கள் வாழி வாழி
பொன்புரளு மஞ்ஞைகுக் குடமும் வாழி
புகழ்தெய்வ குஞ்சரியும் குறமின் வாழி
துன்புதவிர் வீரவேல் வாழி வாழி
சொல்லுமற்று மாயுதங்கள் வாழி வாழி
நன்குதரும் நல்லைநகர்க் கந்தர் வாழி
நாதாந்த வேலவரெந் நாளும் வாழி!

(திருவூஞ்சல் பாடல்கள் சேனாதிராய முதலியார்
அவர்களால் இயற்றப்பட்டது)

# கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும் நாமங்களும்

**கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா**
முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இந்து சமய வரலாற்று மரபிலே முருகனை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்து வரும் சமய பண்பாட்டு மரபு கௌமாரம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இப்பிரிவிலே முருகனே உயர் தெய்வமாகப் போற்றப்பட்டு அவருக்குரிய அனைத்து வழிபாட்டு அம்சங்களும் சிறப்பாகவும் தனியாகவும் சமய இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறப்பட்டுள்ளவற்றை தனித்து நோக்குகின்றபோது முருகனின் பல்வேறு வடிவங்களும் அவற்றுக்குரிய நாமங்களையும் சிறப்பாகக் காணமுடிகின்றது.

## வழிபாடு

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பரவுவது வழிபாடு. வழிபாட்டிற்குரிய முதல் அங்கமாகத் திகழ்வது இறைவன் திருவுருவம். இப்படியன், இந்நிறத்தன் என்று எழுதிக் காட்டொணா இறைவனை நம் முன்னோர் எப்படியெல்லாம் கண்டு மகிழ்ந்து வணங்கி நமக்கும் காட்டிச் சென்றுள்ளனர் என்பதை நினைக்கும்போது வியப்பாகவே உள்ளது. இறைவன் தனது பெருங்கருணையால் வேண்டுவார்க்கு வேண்டும் வடிவங்களில் திருக்காட்சி தந்தருளியதோடு, அக்கோலங்களில் தன்னை வழிபடுவோர்க்கு [illegible] அருளைச் சொரிகின்றான். இதுவே இந்து சமயத்தின் தனிச் சிறப்பும் மாண்பும் ஆகும்.

## 'ஸ்கந்த' சொல் விளக்கம்

இவ்வுலகுக்கு எந்நாளும் அருள் புரிவதற்காக வெளிப்பட்ட ஒரு மின்னல் சக்தியே முருகன். 'ஸ்கந்த' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'வெளிப்படுதல்' என்று பொருள். மேகத்திலிருந்து மின்னல் வெளிப்படுதல் போன்று சிவஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு பொறிகள், ஆறுமுகசுவாமியாக 'ஸ்கந்தன்' எனப்பெயர் கொண்டது.

ஆகவே சிவசக்தி ஜோதியில் ஜனித்த பேரொளிப் பிழம்பாக முருகன் திகழ்கின்றான். அவன் பராக்கிரமசாலி. பேரருட் சக்தி வடிவினன். ஞான பலமும் முருகனுக்கே அதிகம் என்று காட்டவே சிவபெருமானும் முருகவேளிடம் உபதேசம் பெற்றுக்கொண்டார்.

தீப்பொறியாகத் தோன்றி, வானிலிருந்து வாயுவால் சுமந்து வரப்பெற்று கங்கையில் விடப்பெற்று, சரவணப் பொய்கையில் வளர்ந்த முருகன் தீ, வான், வாயு, நீர், பூமி என்னும் ஐம்பூதத் தொடர்புடையவனாகத் திகழ்கின்றான். நெருப்பையும் எரிக்கும் ஞானக்கினியாக முருகன் விளங்குகின்றான்.

## முருகனின் மூன்று சக்திகள்



சிவபெருமானின் ஐந்து முகத்தோடு சக்தியின் முகமும் (சித்சக்தியாகிய ஆறாவதறிவுக்குப் பொருளாவது அதோ முகம்) சேர்ந்து ஆறுமுகமாயிற்று. முருகனிடத்தில் மூன்று சக்திகள் உள்ளன. அவை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பனவாகும்.

இச்சாசக்தியின் வடிவமே வள்ளியம்மை. இவர் கரிய நிறம் உடையவர்; முருகனின் வலப்பாகத்தில் வீற்றிருப்பார்; கையில் தாமரை ஏந்தியிருப்பார்; போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் இறைவன் தன்மையாதலின், உலகில் இல்வாழ்க்கை நடத்தற் பொருட்டு முருகன் வள்ளியம்மையாரொடு தன் ஒரு திருமுகத்தாற் பேசி, மகிழ்ந்து அமர்ந்திருக்கின்றான். கிரியாசக்தியாகிய தெய்வானையம்மை செந்நிறம் வாய்ந்தவர்; முருகனின் இடப்பால் வீற்றிருப்பவர். கருங்குவளை மலரைக் கையில் ஏந்தியிருப்பவர்.

முருகனிடம் அமைந்த மூன்றாவது சக்தி ஞானசக்தி. அதுவே வேலாயுதமாக விளங்குகின்றது. வெல்லும் தன்மையுடையது வேல்; எல்லாவற்றையும் வெல்வது அறிவாற்றல். அறிவு ஆழமும், கூர்மையும் உடையது. "சக்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்" என்பது சிவஞானசித்தியார் வாக்கு. ஞானமே அஞ்ஞானத்தை வெல்லவல்லது.

## முருகனுக்கு மூன்று மயில்கள்

முருகன் என்றவுடன் அவனது மயிலும் சேவலும் நம் கண் முன் நிற்கின்றன. முருகனுக்கு மூன்று மயில்வாகனம் இருந்தது. இந்திரனும் மயிலாக முருகனைத் தாங்கினான். சூரன் அழிந்த பின் அவனது ஒரு பாதி மயிலாகியது. மயில் தனது அழகால் யாவரையும் மயக்கவல்லது, எனவே அதனை மாயை என்பர். சேவல் ஊர்த்துவ மாயை, மயில் அதோ மாயை. சேவல் நாத தத்துவம் எனில் மயில் விந்து தத்துவம். நாதம் ஒலி வடிவினது, விந்து ஒளி வடிவினது. விந்து தத்துவம் ஆகிய மயில்

கண் கவரும் ஒளியுடையதாய்ப் பலவகை நிறங்களைக் கொண்டு திகழ்தல் காணலாம். தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றம் ஓங்காரம் போல் ஒளிர்தல் பற்றியே "ஓங்காரத்துள்ளே முருகன் உருவங்கண்டு தூங்குதல் வேண்டும்" என்று கந்த புராணம் கூறுகின்றது. சேவல் அறியாமை இருளைப் போக்கி மெய்யறிவாகிய ஒளியைப் பரப்பும் முருகனின் கொடியாகி விளங்குவது பொருத்தமே. வைகறையில் சேவல் கூவுதல், ஓங்கார மந்திரத்தை ஒலி வடிவால் உலகுக்கு உணர்த்துவதாகும். முருகப் பெருமான் சேவற் கொடி ஏந்தி நம்மையெல்லாம் சிவஞானப் பேரொளியைத் துய்க்கச் செய்தருளுகின்றார்.

## பல்வேறு வடிவங்கள்

முருகனுடைய பல்வேறு வடிவங்கள் பற்றியும் கோயில்கள் பற்றியும் பண்டைய வடமொழிப் புராண நூல்களிலும் ஆகமங்களிலும் விரிவாகக் காட்டப் பெற்றுள்ளன.

குப்தர் காலத்தைச் சேர்ந்த "பிரஹத் ஸம்ஹிதை" என்னும் நூல் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) முருகனை இளைஞனாக மயில் மீது அமர்ந்த கோலத்தில் கையில் வேலுடன் விளங்குமாறு அமைக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

"விஷ்ணு தருமோத்தரம்" என்ற நூலில் முருகவேள் ஆறுமுகங்களுடனும் இடக்கையில் வெற்றிக் கொடியும் வேலும் கொண்டவனாகவும் காட்டப்படுகின்றது.

"சமரங்கன சூத்திரதாரம்" என்ற நூலில் முருகன் அழகிய இளம் பிள்ளையாக ஒரு முகம் அல்லது ஆறுமுகங்கள் கொண்டவனாகக் காட்டப்படுகின்றார்.

சிவபுராணத்தில் முருகவேள் நான்கு கரங்கள் கொண்டவராகக் காட்டப் பெறுகின்றார். "குமார தந்திரம்" என்ற நூலில் முருகப் பெருமானுக்குத் திருக்கோயில் அமைக்கும் விதம் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

"தியானரத்னாவளி" என்ற நூலில் முருகன் வடிவங்களை மூன்று வகையாகக் காணலாம். அவர் சாத்துவிக வடிவம் ஏற்கும் போது ஒரு முகமும், இரு கரங்களும் கொண்டு திகழ்கின்றார். அவரது கரங்களில் சக்தி ஆயுதமும் தாமரையும் திகழ்கின்றன. அவரது இராஜஸ வடிவத்தில் ஒரு முகமும், நான்கு கரங்களும் முறையே வஜ்ரம், சக்தி, அபய வரதம் என்ற நிலையில் அமைகின்றன. தாமச வடிவத்தில் ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் கொண்டு காட்சியளிக்கின்றார். சக்தி, வஜ்ரம், வாள், திரிசூலம், பாசம், தனுசு, சக்கரம், கேடயம், குக்குடம், அங்குசம் ஆகிய ஆயுதங்களுடன் இரு கரங்கள் அபய வரதமாகத் திகழ்கின்றன.

"சனத்குமார பிரச்ன குமாரதந்திரம்" என்ற நூலில் முருகனது பதினாறு வடிவங்கள் ஞானசக்திதரன், ஸ்கந்தன், அக்னிஜாதா, சௌரபேயன், காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன், குமாரன், சண்முகன், தாரகாரி, சேனாபதி, குகன், பிரம்மசாரி, சிவதேசிகன், கிரௌஞ்சதாரி, சிகிவாகனர் எனக் காட்டப்படுகின்றன.

பேரறிஞர் டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் குமாரதந்திரம் என்ற நூலில் மற்றொரு வகையான பதினாறு வடிவங்களை சக்திதரன், ஸ்கந்தன், தேவசேனாதிபதி, சுப்ரமணியன், கஜவாகனன், சரவணபவன், கார்த்திகேயன், குமாரன், சண்முகன், தாரகாரி, சேனானி, பிரம்மசாஸ்தா, வள்ளி கல்யாணசுந்தரர், பாலசுவாமி, கிரௌஞ்சபேதனர், சிகிவாகனர் என குறிப்பிட்டுள்ளார்.

மைசூர் கிருஷ்ணராஜா என்பவர் தொகுத்த "ஸ்ரீதத்வ நிதி" என்ற நூலில் பதினேழு வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் சனத்குமார ப்ரச்ன குமாரதந்திரம் என்ற சிற்ப நூலில் கூறப்பட்ட பதினாறு வடிவங்களுடன் வேலாயுத சுப்ரமண்யர் என்ற வடிவமும் சேர்ந்துள்ளது.

## திருப்புகழில் முருகன்

அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானைப் பாடியுள்ள பாங்கில் காணும்போது, முருகவேளின் வடிவங்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்துக் குறிப்பிடலாம்

**குழந்தை வடிவங்கள்:-** பாலசுப்ரமண்யன், காங்கேயன், கார்த்திகேயன், குழந்தைவேலன், சரவணபவன், ஸ்கந்தன்.

**பிரமசாரி வடிவங்கள்:-** தேசிக சுப்ரமண்யன், குருபரன், ஞானசக்திதரன்.

**தவ வடிவம்:-** யோகாசார்ய மூர்த்தி.

**பராக்ரம வடிவங்கள்:-** அஜாரூடர், பிரம்மசாஸ்தா, வில்லேந்திய வேலன், கஜாரூடர், சேனாதிபதி, சிகிவாகனர், தாரகாரி, கிரௌஞ்சபேதனர், சகலகலாவல்லப மூர்த்தி, வராஹோன்மத்த பங்கமூர்த்தி.

**தேவியருடன் கூடிய வடிவங்கள்:-** தேவசேனாதிபதி, வள்ளி கல்யாணமூர்த்தி, சண்முகர், குமாரர்.

**பிற வடிவங்கள்:-** குகன், ஹ்ருதயகமல மூர்த்தி(இதயத் தாமரையில் விளங்குபவர்), சிவனை வழிபடும் முருகன், சதாசிவ மூர்த்தி, யாகரட்சகமூர்த்தி (யாகம் வேள்வியைக் காப்பவர்), விசுவரூப மூர்த்தி, நடனமூர்த்தி, அகத்தியருக்கு உபதேசம்.

**தலமூர்த்திகள்:-** சிதம்பரம் வடிவங்கள், காஞ்சி குமர வடிவங்கள், சீர்காழி திருஞானசம்பந்த முருகன், திருச்செந்தூர் வடிவங்கள் (அலை வாயுகந்த பெருமாள் குமாரவிடங்கர்), திருத்தணிகை வடிவங்கள், திருப்பழநி வடிவங்கள், திருவருணை வடிவங்கள் என்று திருப்புகழில் அருணகிரிநாதர் முருகனது வடிவங்களைப் போற்றுகின்றார்.

## முருகனது ஏனைய வடிவங்கள்

முருகனது ஏனைய வடிவங்களுள் ஒன்றான ஞானசக்திதரன் என்பது ஞானசக்தியை தரித்தவன் என்று பொருள்தரும். திருத்தணிகை மூலவர் ஞானசக்திதரர் வடிவமாகும்.

முருகன் "ஸ்கந்தன்" என்று வடமொழியிலும், "கந்தன்" என்று தமிழிலும் போற்றப் பெறுகின்றான். முருகன், ஸ்கந்தன் என்ற சொல்லுக்கு வெளிப்படுபவன் என்று பொருள். சுவாமிமலையில் சுவாமிநாதப் பெருமான் கந்தசுவாமி வடிவமாக காட்சியளிக்கிறார்.

நின்ற கோலத்தில் ஒரு முகமும் இரு கரங்களும் கொண்டவர் கந்தசுவாமி. வலக்கரத்தில் தண்டாயுதமும் இடக்கரம் குளங்கத்திலும் (இடுப்பில் ஊன்றியவாறு) உருத்திராக்கம், மணிவடம் அணிந்து கோவணதாரியாக விளங்குகிறார் என்று குமாரதந்திரம் காட்டுகிறது.

தணிகைப் புராணத்தில் கூறப்படும் கந்தன் திருவுருவம் பழநி தண்டாயுதபாணியையே உறுதிப்படுத்தும். கந்தன் என்னும் சொல் அரும்பெரும் சொல். கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, கந்தபுராணம், கந்தசஷ்டி என்பவை இதனை வலியுறுத்தும். கொங்குநாட்டில் பல திருக்கோயில்களில் கந்தசுவாமி திருவுருவமே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. சர்வகாரியங்களும் சித்திபெற ஸ்கந்த மூர்த்தியை வழிபடுதல் வேண்டும்.

தேவசேனாதிபதி என்பது தேவயானையின் கணவன் என்று பொருள்படும். இப்பெயர் தேவசேனையுடன் விளங்கும் முருகனைக் காட்டுகின்றது. தேவேந்திரன் மகளாக ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தேவயானையைத் திருப்பரங்குன்றத்தில் முருகவேள் திருமணம் செய்து கொண்டதைக் கந்தபுராணம் விரித்துக் கூறுகின்றது.

வேதத்துக்கும் வேதியர்களுக்கும் முதல்வர் என்னும் பொருள் கொண்ட முருகவேள் திருப்பெயரே சுப்ரமணியர் என்பதாகும். ஒரு முகமும் இருகரங்களும் கொண்ட இவ்வடிவத்தில் முருகவேள் தனது வலக்கையால் அபயமுத்திரை காட்டி, இடக்கையை இடுப்பில் வைத்தவராய்த் திகழ்கிறார். மற்றொரு குறிப்பில், ஒருமுகமும், நான்கு கைகளும் முறையே கோழி, தாமரை, அபயவரத முத்திரையுடன் தோள்களில் கேயூரமும் மார்பில் மாலைகளும் கொண்டு திகழ்கிறார். தணிகைப்புராணம் காட்டும் சுப்பிரமணியர் திருவுருவம் ஒருமுகமும், இரு கரங்களும் கொண்டு அமைகிறது. ஆனந்தத்தையே சொருப லட்சணமாக உடைய சுப்பிரமணிய மூர்த்தியை வழிபட, வினைகள் நீங்கி ஆனந்தப்பேறு பெறலாம்.

களிற்றூர்திப் பெருமான் என்பது முருகவேள் யானையை வாகனமாகக் கொண்டு எழுந்தருளிய கோலமாகும். கஜாரூடர், கஜவாகனர் என்றும் அழைக்கப்பெறுவார். களிற்றூர்திப் பெருமானின் திருவுருவ அமைப்பினைத் தணிகைப்புராணம், குக்குடம் (கோழி), வாள், வேல் ஆகியவற்றுடன் ஒரு கரம் வரதமுத்திரையிலும் உள்ளதாகக் காட்டுகிறது. கஜவாகனப் பெருமானை வழிபடத் துன்பங்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும்.

சரவணபவன் என்பது முருகனின் மற்றுமொரு கோலம். சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாகி நாணற்புல் நிறைந்த சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் வீற்றிருந்தன.

குமாரதந்திரம் 'ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு, சக்தி, மணி, கோழிக்கொடி, தாமரைமலர், கோழி, பாசம், தண்டம், உளி, அம்பு, வில் ஆகியவற்றுடன் அபய வரதமாகவும் மஞ்சள் வர்ண மேனியாய்த் திகழ்கிறார் என்றுரைக்கும்.

ஸ்ரீதத்வநிதி, ஒரு முகமும், ஆறு கரங்களும் கொண்ட சரவணபவன் சிங்கத்தின் மீது எழுந்தருளியுள்ளதாகக் குறிப்பிடுகிறது. திருப்போரூரில் சரவணபவன் ஒரு முகம் நான்கு கரங்களுடன் சிம்ம வாகனத்தில் காட்சியளிக்கிறார். ஆறுமுகம், பன்னிரு கரங்கள் கொண்ட சரவணபவன் வடிவைத் தணிகைப்புராணமும் குறிப்பிடுகின்றது. மங்கலம், ஒளி, கொடை, சத்துவம், வீரம் ஆகிய பேறுகளை இம்மூர்த்தியை வழிபடப்பெற்று இன்புறலாம்.

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்றதால் கார்த்திகேயன் என்று போற்றப்பெறும் முருகன், வட இந்தியாவில் பெரும்பாலும் இப்பெயரிலேயே அழைக்கப் பெறுகின்றான். ஆறுமுகங்களும் ஆறு கரங்களும் கொண்ட கார்த்திகேயன் வடிவத்தில் சக்தி, வாள், குலிசம் (வச்சிரம்), கேடயம் ஆகிய ஆயுதங்களுடன் இரு கரங்கள் அபய வரதமாகவும், ஏழு ஞாயிறு வண்ணமுடன் விளங்குவதாகவும் குமாரதந்திரம் கூறுகிறது. தணிகை புராணமும் இவ்வடிவத்தையே கார்த்திகேயனாகக் காட்டுகிறது.

சுவாமி என்ற சொல்லும் குமரன் என்ற சொல்லும் முருகனையே குறிப்பன. குமரன் என்ற சொல்லுக்கு மலப்பிணியை அழிப்பவன் என்று பொருள். ஆணவமலம் நீக்கம் பெற இப்பெருமானை வணங்குதல் வேண்டும்.

முருகவேள் அடியார்களுக்கு அஞ்சுமுகம் (இடுக்கண்) தோன்றும் போதெல்லாம் தமது ஆறுமுகம் கொண்டு ஆறுதல் தந்தருள் புரிகின்றான். இறைமைக் குணங்கள் ஆறு. ஞானம், ஐசுவரியம், திரு, வீரியம் வைராக்கியம், புகழ் என்ற ஆறும் அவரது முகங்களாகத் திகழ்கின்றன. ஆறுமுகப் பெருமான் தமது வலப்பக்கத்தில் வள்ளியம்மையாரையும், இடப்பக்கத்தில் தெய்வானையம்மையாரையும் மயில்மீது இவர்ந்தோ உடனிருக்கவோ அமைந்த கோலம் இவ்வடிவம். ஆறுமுகப் பெருமான் பன்னிரு கரங்களிலும் கொண்ட ஆயுதங்கள் ஆறு வகைகளில் வேறுபடுகின்றன. நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலும், குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவிலும், அருணகிரிநாதர் திருப்புகழிலும் ஆறுமுகச் சிறப்பு அருமையாக கூறப்பட்டுள்ளது.

தமது ஞானவேலால் முருகவேள் தாரகனை அழித்து, மாயையை வென்று அருள்புரிந்த கோலமே தாரகாரி. குமாரதந்திரம் இவ்வடிவை ஆறுமுகம், பன்னிரு கரங்களுடனுன் காட்டுகிறது. இம்மூர்த்தியை வழிபட்டு உலக மாயையிலிருந்து விடுபடலாம். சூரபதுமனை வெற்றி கொள்ளத் தேவர் படைகளுக்குத் தலைமையேற்ற முருகன், சேனாதிபதியான கோலத்தில் ஆறுமுகமும் பன்னிரு கரங்களுடன் திகழ்கிறார். போரிலும் பந்தயத்திலும் வெற்றிபெற இம்மூர்த்தியை வழிபடுதல் அவசியம்.

படைப்புத் தொழில் செய்யும் நான்முகன் (பிரம்மன்) கொண்ட செருக்கை அடக்கி முருகன் தானே பிரமனது படைப்புத் தொழிலை மேற்கொண்ட கோலமே பிரம்மசாஸ்தா (பிரம்மனைத் தண்டித்தவர்) எனப்படும். குமாரதந்திரம் இக்கோலம் ஒரு முகம், நான்கு கரங்கள் கொண்டதாகக் குறிப்பிடுகிறது. பிரம்மசாஸ்தா வடிவத்தை வழிபாடு செய்வோர் பிரம்ம வித்தைகள் கைவரப்பெற்றுச் சகலகலாவல்லவனாக, அறிவாளனாகத் திகழலாம்.

முருகப் பெருமானது திருப்பெயர்களுள் "வள்ளிக் கணவன்", "வள்ளி மணாளன்", "வள்ளிக்காந்தன்" ஆகியவை மிகச் சிறப்பானவை. உலகில் இல்வாழ்க்கை இனிது நடத்தற் பொருட்டே, முருகன் வள்ளியம்மையை மணந்து கொண்டு அவளுடன் இனிதுறப் பேசி

நகையமர்ந்தருள்கின்றான் என்று ஞான நூல்கள் கூறும். இவ்வடிவை வள்ளி கல்யாண சுந்தரர், வள்ளி மணாளர் என்று குமாரதந்திரம் குறிப்பிடுகிறது. பிரம்ம சாஸ்தா கோலத்தில் வலப்புறம் வள்ளியுடன் காட்சியளிக்கும் அமைப்பே வள்ளி கல்யாணசுந்தரர் வடிவமாகும்.

வள்ளி கல்யாண மூர்த்தியை வழிபடத் திருமணங்கள் உரிய காலத்தில் நடைபெறும். தடைப்பட்ட திருமணங்கள் முதலான தொல்லைகள் நீங்கி இன்ப மயமான இல்வாழ்வுப் பேறு கிட்டும்.

அழகும் இளமையும் கொண்ட அற்புதமான வடிவமே பாலசுவாமி. இவ்வடிவில் ஒரு முகமும் இரு கரங்களும் கொண்டு, வலக்கையில் தாமரை மலரும் இடக்கை குறங்கத்திலும் (இடுப்பிலும்) உள்ளன. திருவடிகளில் தண்டைகள் அணிந்து காட்சியளிக்கும் இக்கோலத்தைத் தணிகைப் புராணமும் குமாரதந்திரமும் எடுத்துரைக்கின்றன. பாலசுவாமியை வழிபட உடற்குறைகள் நீங்கி அழகான உடலமைப்பும், வனப்பும், தேக சௌக்கியமும் ஏற்படும்.

கிரௌஞ்சம் மலையாகத் திகழ்ந்த தாரகாசுரனை அழித்த வடிவம் கிரௌஞ்சபேதனர். இவ்வடிவை குமாரதந்திரம் ஆறுமுகமும் எட்டுக் கரங்களும் கொண்டவராகக் காட்டுகின்றது. மனத்தில் சஞ்சலங்கள், துன்பங்கள் நீங்கவும் இடர்களை வெல்லவும் இம்மூர்த்தியை வழிபட வேண்டும்.

மயில் மீது வந்து நமது மையல் நீக்கி அருளும் மாமுருகன் திருக்கோலமே சிகிவாகனர் (மயில் ஊர்திப் பெருமாள்) வடிவமாகும். ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு மயிலில் அமர்ந்து திகழ்கிறார். மயிலூர்திப் பெருமானை மறவாமல் வணங்குவோர் அனைத்தையும் பெற்று இன்ப வாழ்வு பெறுவர்.

'ஒரு முகம் மந்திரவிதியின் மரபுவளர் அந்தணர் வேள்வி ஓர்க்கும்பே' என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் போற்றியவாறு தெய்வீக யாகாக்கினியை வளர்ப்பதற்கு அக்கினியைப் போன்று இரண்டு முகங்களும், எட்டுக் கரங்களும் கொண்டுள்ள வடிவமே அக்னிஜாதர் என்றழைக்கப்படுகிறது.

ஸ்ரீதத்துவநிதியில் குறிக்கப்பெறும் சௌரபேய சுப்ரமண்யர் வடிவம், நான்கு முகங்களும், எட்டுத் திருக்கரங்களும் கொண்டு கரங்களில் முறையே சக்தி, தாமரை, மலர், மலரம்பு, வஜ்ரம், கரும்பு, வில், சூலம் ஆகியவை ஏந்தியும் இரு கரங்கள் அபயவரதமாகவும், வலக்கால் பூமியிலும், இடக்கால் சிறிது வளைந்தும் காணப்படுகிறது.

மகர (மீன்) வாகனத்தின் மீது காட்சியளிக்கும் காங்கேய சுப்ரமண்யர் அமைப்பில் ஒரு முகமும், நான்கு கரங்களில் முறையே சேவற்கொடி, அரணிக்கட்டை, பரசு (கோடலி), பூரணகும்பம் ஆகியவை ஏந்தியும் கரண்ட மகுடமும், நீலோற்பவ மாலையும் அணிந்து திகழ்வதாக ஸ்ரீதத்வநிதி குறிப்பிடுகிறது.

அடியார்களின் இதயக் குகையில் விளங்கும் முருகன் குகசுப்ரமண்யர் வடிவில் ஒரு முகமும் வஜ்ரம், சூலம் இரு கரங்களிலும் அபயவரதமாக இரு கரங்களும் இரத்ன கிரீடம் அணிந்து இடது புறம் தேவியுடன் கல்யாணக் கோலத்தில், வெள்ளையாடை உடுத்திக் காட்சியளிப்பதாகவும், பிரம்சாரி வடிவில் முருகவேள் ஒரு முகமும், வலக்கையில் தண்டாயுதமும், இடக்கையில் வஜ்ரசக்தியும், தலையில் குடுமியும் இடையில் முஞ்சிப் புல்லாலான அரைஞாணும் கொண்டு தாமரை மலர்மீது எழுந்தருளுவதாகவும் ஸ்ரீதத்வநிதி குறிப்பிடுகின்றது.

சிவகுருவாகத் திகழும் தேசிக சுப்ரமண்யர் வடிவம் ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்டு இரு கரங்களில் சக்தி ஆயுதமும், அட்சமாலை சின்முத்திரை மற்றும் அபய வரதமாகவும் காட்சியளிக்க, எதிரில் சிவபிரான் மாணவராக நிற்க, அவருக்குப் பிரணவ உபதேசம் செய்வார்.

இராமபிரானுக்கு 'கோதண்டம்' போல முருகப் பெருமானும் வில்லேந்திய வடிவை 'சம்ஹாரமூர்த்தி' என்று சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. சூரபத்மன் மகன் இரண்யாசுரனை அழிப்பதற்கு முருகன் கொண்ட கோலம் 'இரண்யாசுர சம்ஹாரமூர்த்தி' என்பதாகும். இவ்வடிவைத் திருவிடைக்கழி முருகன் கோயிலில் கண்டு தரிசிக்கலாம்.

சுவாமிமலைத் திருக்கோயிலில் பங்குனி மாதத்தில் நடைபெறும் 'வேடரூபக்காட்சி' விழாவில் முருகன் வேடனாகத் தோன்றி வள்ளியை மணக்கும் வடிவம் அற்புதமான வடிவமாகும். சேலம் மாவட்டம் பேளுக்குறிச்சி பழநியாண்டவர் கோயில் மூலவடிவம் வேட வடிவமே. தலையில் கொண்டையுடன் வலக்கையில் வேலும் இடக்கையில் சேவலும் கொண்ட அழகான வடிவம் இது.

அஜாரூடர் என்றழைக்கப்படும் வடிவில், முருகன் ஆட்டு வாகனத்தில் காட்சியளிப்பார். கந்தபுராணத்தில் கூறப்படும் செய்தியின்படி, இவ்வடிவைத் திருப்போரூர் கந்தசாமி கோயிலில் அபூர்வமாகக் காணலாம். திருச்செந்தூர்த் திருக்கோயில் கந்தசஷ்டிப் பெருவிழாவில் ஆட்டுவாகனத்தில் முருகவேள் பவனி வருவதைக் கண்டு இன்புறலாம்.

தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருளமுதை வழங்கக் கையில் அமுத கலசத்தை ஏந்தியிருக்கும் அற்புதக் கோலம் கோடிக்கரை குழகர் கோயிலில் காணக்கிடைக்கிறது. ஒரு முகமும் ஆறு கரங்களும் கொண்ட இவ்வரிய அமைப்பானது மயில்மீது அமர்ந்து இரு புறமும் தேவியர் புடைசூழக் காட்சிதருகிறார்.

## முருகனின் மேலும் சில வடிவங்களும் அவையமைந்த இடங்களும்.

கோவை மாவட்டம் அவிநாசியிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் இரும்பறை என்ற ஊரின் அருகில் நெடிதுயர்ந்த மலையின் மேல் முருகன் ஐந்து முகம் எட்டுக் கரங்கள் கொண்டு அற்புதமாகக் காட்சியளிக்கிறார். இம்மலைக் கோயில் ஒதிமலை என்ற பெயரில் 1800 படிகளுக்கு மேல் உள்ளது. இவ்வடிவை கிரௌஞ்சபேதனர் என்ற வடிவமாகக் கொள்ளலாம்.

சிதம்பரம் சபாநாயகர் கோயில் மேலக் கோபுரவாயிலில் உள்ள வெற்றிவேற் பெருமாள் ஆறுமுகங்களும்

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் கால ஆகமம் சாராத வழிபாட்டு மரபுகள் – வையாபாடல், கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

கவிராஜவரோதயனால் பாடப்பட்ட கோணேசர் கல்வெட்டு, இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது. முதற்பிரிவு, குளக்கோட்டன் திருகோணமலையில் கோவிலும் குளமும் கட்டுவித்த செய்தியினை விரிவாக எடுத்துக் கூற இரண்டாம் பிரிவு கயபாகு மன்னன் ஆற்றிய பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. குளக்கோட்டன் இந்தியாவிலிருந்து குடிகளை அழைத்து வந்து குடியமர்த்தியது, கோயில் நிர்வாகம், கோவிலை நிர்வாகம் செய்யும் முறைகள், சட்டதிட்டங்கள், கோவிலுக்களித்த திரவியங்கள், வன்னியர்கள், அவர்கள் குடியேறிய இடங்கள் ஆகியவை பற்றிக் கூறுகின்றது.

இந்நூல்களில் காட்டுவிநாயகர், வீரபத்திரன், காளி, ஐயனார், சடாமுனி, நாச்சிமார், சாத்தன், எழில்முனி, வதனமார், வைரவர், சந்திக்காவலர்கள், மங்கலர், பூதகணங்கள், நீலாசோதயன், பத்தினி, தேவுருக்கள் (அண்ணமார்) ஆகிய தெய்வங்களினை வையா பாடலிலும் கோணேசர் கல்வெட்டிலும் காணமுடிகின்றது. தவிர, இராமலிங்கம், அரன்மகவு, கன்னி பாலகன், சித்திரவேலவர், குமரேசன், சந்திரசேகரர் ஆகிய தெய்வங்களும் இவ்விரு நூல்களிலும் இடம்பெறுகின்றன.

காட்டு விநாயகர் வழிபாடு ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் மிக முக்கியமான வழிபாட்டு முறையாகக் காணப்பட்டுள்ளது. காட்டுவிநாயகர் வையாபாடல், கோணேசர் கல்வெட்டு ஆகிய இவ்விரு நூல்களிலும் காணப்படும் முக்கிய தெய்வமாகும். இபமுகன் எனவும், காட்டு விநாயகர் எனவும், கணபதி எனவும், ஐங்கரன் எனவும் பல்வேறு பெயர்களால் இவ்விரு நூல்களிலும் இவர் வழங்கப்படுகின்றார்.

வையாபாடல்,

*"வணங்கி னோர்கள் தமைப்பார்த்து*
*வாழ்வீரெஞ் ஞான்றும் மென்றே*
*யிணங்கு தேவ வாத்தியங்கள்*
*இயம்ப அஞ்சலீ ரென்று*
*கணங்கள் முதல்வன் காட்டுவிநா*
*யகமூர்த் தியொன்றைக் கரத்திலீந்து*
*குணங்களுடையீர் குல தெய்வம்*
*கொண்டு செல்லீரென வுரைத்தார்"*

என இந்தியாவின் கும்பகோணப் பகுதியிலிருந்து காட்டு விநாயக மூர்த்தி சிலை வன்னிப்பிரதேச ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்ட செய்தியினைக் கூறும். அத்துடன் அங்கிருந்து தென்னிலங்கைக்கு பரராச மன்னனால், சிவலிங்கத்துடன் ஐங்கரன், குமரேசன் ஆகிய தெய்வங்களும், பூசை செய்வதற்கென நால்வருண மறைக்கிழவர்களும் அனுப்பி வைக்கப்பட்ட செய்தியையும் குறிப்பிடும்.

***செல்வி ஹரோசனா ஜெயசீலன்***
ஆசிரியர், அலுத்வத்தை, திகனை.

பத்துக்கரங்களும் கொண்டு ஓர் கரத்தால் வேலினை ஏவிய நிலையில் காண்போரைப் பிரமிக்கச் செய்யும் கோலமாகக் காணப்படுகிறார்.

திருப்பரங்குன்றத்தில் தூண் சிற்பமாக அமைந்துள்ள தேவசேனைத் திருமேனிக்கோலம் கண்டு இன்புறத்தக்கது. முருகன் தேவயானையின் வலக்கரம் பற்றியிருக்க அருகில் தேவேந்திரன் பெருமையுடன் தாரைவார்க்க, இன்பத்தை அளிக்கும் காட்சியில் தெய்வானையம்மை தலையைச் சற்றுச் சாய்த்து ஓரக்கண்ணால் கந்தனைக் கண்டு களிப்பதையும், ஆலம்பூர்க் காட்சிச் சாலையில் தேவசேனையை அணைத்த நிலையில் அரிய கலைப்படைப்பையும், வழுவூரில் கௌரி கந்தனைக் கையில் ஏந்தி மகிழும் அழகையும் காணலாம்.

திருக்கடவூரில் பரிவுடன் கௌரி கொஞ்சும் கடம்பனையும், பல்லவனீச்சரம் கோயிலில் தாயினருகில் அமர்ந்து தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே வரும் முருகன் அழகையும் காணமுடிகிறது.

திருவாரூரில் நீலோற்பவாம்பிகை திருக்கோயிலில் அம்பிகைக்கு அருகில் சேடி, முருகனை அழைத்துவர அவன் நடந்து வரும் அழகைச் சிற்பி கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்.

கழுகுமலையில் ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்டு மயிலில் காட்சியளிப்பதும், குன்றக்குடி, திண்ணியம் கோயில்களில் முருகன், வள்ளி, தேவயானை தனித்தனியே மயில்வாகனத்தில் காட்சியளிப்பதும் அரிய கலைப்படைப்பாகும்.

சென்னையில் திருமயிலையில் முருகன் மயில் வாகனத்திலும், வள்ளி, தேவயானை இருவரும் தனித்தனியே யானைவாகனத்திலும் அமர்ந்துள்ள அதிசயமான கோலத்தை ஒப்பற்றதாக சொன்னால் மிகையாகாது.

முழுதும் அழகிய குமரனைப் பலவித கவின்மிகு கோலங்களிலும் வடிவங்களிலும் கண்டு வழிபட்டு இன்புறுவோமாக!

# நல்லைக் கந்தனை வந்தனை செய்வோம்

**கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

நல்லூர் - நல்ல ஊர். யாழ் நகருக்கோர் அருள் அணியாக அமைகின்றது நல்லூர். நல்லூரின் பெருமை, சொல்லும் தரமன்று. நல்லைக் கந்தன் அருள் காற்றில் கலந்து அருள் மணம் வீசும் நல்லூர். கோயிற் கண்டாமணி அவ்வப்போது எழுப்பும் நாத ஓசை நகரெங்கும் ஒலிக்கும் நல்லூர். வட பால் சித்தர்களான செல்லப்பா சுவாமிகளும், யோகர் சுவாமிகளும் அருள் உலாவந்த நல்லூர் ஆலய வீதியின் மண்ணும் அருள் மணக்கும் நல்லூர்.



*சார்ந்தவர்க்குச் சாகாவரம் கொடுக்கும் நல்லூரை*
*வீழ்ந்தெழுந்து கும்பிடுவாய் விரைந்து*

என யோகர் சுவாமிகளைப் பாடவைத்த நல்லூர். அந்நியவரிடமிருந்து, சைவத்தையும், தமிழையும் கட்டிக்காத்த நாவலர் பெருமான் வாழ்ந்து நற்பணி ஆற்றிய நல்ல ஊர் நல்லூர்.

இத்தகைய சிறப்புக்கள் ஏராளம் கொண்ட நல்லையம்பதியின் மகுடமாக விளங்குவது அங்கு அருள் ஒளி பரப்பி நிற்கும் நல்லைக் கந்தன் ஆலயத்தின் மணிக்கோபுரமும் வைரவப் பெருமானின் ஆலய முன்றலில் தண்ணிழல் பரப்பி நிற்கும் பசுமை நிறைந்த வேப்ப மரமும் ஆகும். எம் மனக்கண்முன் தோன்றி நிற்கும் இவை முருக பக்தர்களைத் தம்பால் ஈர்க்கும்.

இவை மாத்திரமா? உற்சவ காலத்திலே மஞ்சள் ஒளி வீசி வீதியிலே பவனி வரும் மஞ்சரதமும், அசையும் தங்கக் கோபுரம் போல் தங்க ஒளி வீசி வரும் தங்க ரதமும், வீணைக் கொடியோன் கைலைமலையைப் பெயர்க்க முயன்ற அரிய காட்சியைச் சித்தரிக்கும் கைலாய வாகனமும், கண்ணைக் கவரும் கார்த்திகேயனின் பூஞ்சப்பறமும், தேர் உற்சவத்தின் முதல்நாள் பரந்து உயர்ந்து வீதியை நிறைத்து அசைந்து வரும் பெருஞ் சப்பறமும், இரதோற்சவத்தின் போது சின்னஞ் சிறு மணிகள் அசைந்தாடி ஒலிக்க அதன் வண்ணத் திருத்தொங்கல்கள் காற்றில் அசைய இனிய நாதஸ்வர ஓசை காற்றில் மிதந்துவர, கொடி, குடை, ஆலவட்டம் முன்செல்ல காவடி சுமப்போரும், கற்பூரச்சட்டி எடுப்போருமாக முருகனடியார்கள் பின்செல்ல, ஐயனுக்குப் பாமாலை சூட்டும் முகமாக பஜனைக் கோஷ்டியினர் ஒரு புறமும், கந்தப்பெருமானை நெஞ்சில் சுமந்த வண்ணம் அடி அளிக்கும் பெண்ணடியார்களும் அவர்களைத் தொடர்ந்து அங்கப்பிரதட்சணம் செய்யும் ஆணடியார்களும் என பக்திமிகு காட்சியின் வர்ணனை வார்த்தைகளில் அடங்காதவையாகும்.

இவ்வாலய வருடாந்த உற்சவம் ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இரதோற்சவதத்தைத் தொடர்ந்து தீர்த்தோற்சவம் இடம்பெற்று மறுநாள் திருமணத் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவோடு இனிது நிறைவு பெறுகின்றது. மறுநாள் வைரவப் பெருமான் முன்றிலில் வைரவ மடையும் கோலாகலமாக எண்ணற்ற அடியார் மத்தியில் இடம்பெறுதல் மரபு.


இவ்விடத்தில் இரதோற்சவம் என்றழைக்கப்பெறும் தேர்த்திருவிழாவின் தத்துவத்தை நோக்குவோம். புராண வரலாற்றின்படி ஒரு காலத்தில் சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், நான் மறைகளை குதிரைகளாகவும், மேரு மலையை வில்லாகவும், விஷ்ணுபகவானை அம்பாகவும், பிரம்மாவை சாரதியாகவும், பிரணவத்தைச் சவுக்காகவும் கொண்டு எம்பெருமான் எழுந்தருளி தன் புன்முறுவல் ஒன்றாலேயே முப்புரங்களை எரித்தருளிய "திரிபுர சம்ஹாரத்தை" மும்மலங்களைக் கெடுத்தொழிக்கும் உண்மையை இந்த இரதோற்சவம் உணர்த்தி நிற்கின்றது.

தேர்த்திருவிழாவின் முடிவில் ஆறுமுகப் பெருமான் ஆலயத்துள் திரும்பும் காட்சி பசுமையாகவும் ரம்மியமாகவும் அமைந்திருக்கும். யாவும் பச்சை மயமாக காட்சிதரும் ஆறுமுகப்பெருமானுக்குச் சாற்றப்படும் பச்சைப்பட்டு பட்டொளி வீசும்.

திருத்தொங்கல் திருக்குடை, திருமாலைகள், திருவாசி, திருச்சின்னங்கள் அத்தனையும் பச்சை வண்ணமாக பசுமை ஒளி வீசி நிற்கும். இப்பச்சை சாற்றும் வைபவம் ஒரு தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. அதாவது சகல ஆன்மாக்களுக்கும் சர்வானுக்கிரகம் செய்பவர் தானே என்பதையும் சகல ஆன்மாக்களும், சகல நன்மைகளையும் பெற்றுய்ய வேண்டும் என்னும் உண்மையும் இப்பச்சை சாற்றும் வைபவம் காட்டி நிற்கின்றது.

இவ்வாலய உற்சவத்தின் பூங்காவனத் திருவிழா நிறைவு நிகழ்வாக, ஆலய நந்தவனத்தில் திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று முத்துக்குமார சுவாமி, வள்ளி தெய்வயானை சமேதராய் மணவாளக் கோலம் பூண்டு வீதி உலா வரும் காட்சி அற்புதமானது.

நல்லைக் கந்தன் ஆலயம் என்றதும் எம் மனக் கண்முன் தோன்றுவன ஆலயத்தின் வனப்புறு கோபுரங்களும் அமைதியான இடமுமாகும். இக்காட்சி நல்லூரை கைலாயமாக்கி விடும் என்று சொன்னால் மிகையாகாது. இம்மங்கல விழாவோடு நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவம் இனிது நிறைவு பெறும்.



# நல்லைக் கந்தன் தேரடியில் ஞான உபதேசம் பெற்ற யோகர் சுவாமிகள்

நல்லைக் கந்தன் ஆலயத்தின் தேரடிக்கு ஒரு தனித்துவ சிறப்புண்டு. ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அது மதிக்கப்படுகின்றது. நல்லூர் தேரடிச் சித்தர் என சைவப் பெருமக்களால் போற்றப்பட்டவர் செல்லப்பா சுவாமிகள். இவரிடமிருந்து இதே தேரடியில் ஞான உபதேசம் பெற்றுக் கொண்டவர்தான் யோகர் சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளை தனது குருவாக ஏற்றுக் கொண்ட இவர், பின்னாளில் ஓர் உன்னத ஞானியாக, ஆன்மீகப் பேரொளியாகத் திகழ்ந்தவர். இதற்கும் மேலாக ஒரு சீடர் பரம்பரை உருவாவதற்கு வழிகாட்டியாகவிருந்த மகான் என்றும் சொல்லலாம்.

யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன்மீது அளவில்லாத பக்தி கொண்டிருந்தவர். கந்தன்மீது பல பாடல்களைப் பாடியிருக்கிறார். நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் இவ்வேளையில் கந்தன் புகழ்கூறும் யோகர் சுவாமிகளின் பாடல்களை இந்தப் பக்கத்தில் வெளியிடுவது பொருத்தமாக இருக்கும்.

### நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே!
இரவு பகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி – கிளியே!
நல்லூரான் தஞ்ச மெடி.

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்கா மெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்தி டெடி.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோக நாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

### நல்லூரான் காட்சி கொடுப்பான்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் – நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி!

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் – ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது!

### நல்லூர் வீதியில்

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

**அனுபல்லவி**

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு.
(எந்நாளும்)

**சரணம்**

வேதாந்த சித்தாந்தம் கற்றதனால் என்ன
வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.
(எந்நாளும்)

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
மத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே.
(எந்நாளும்)

### நல்லூர் முருகன்

**பல்லவி**

நல்லையில் வாசா ஞானப் பிரகாசா.

**அனுபல்லவி**

நல்ல தெய்வானை வள்ளியம்மை சமேதா
நராசுரர் பணி ஞானபண்டி தாபரா
(நல்லை)

**சரணம்**

நான் உன்னை நம்பினேன் நல்குரவுபிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து அளவாய்
தேனுந்து வேங்கையாய் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகளே முருகனே கிருபாகரா
(நல்லை)

# கந்தபுராணம் தோன்றிய வரலாறு

கந்தபுராணம் தோற்றிய காலம் 12–ஆம் நூற்றாண்டு என்று சொல்வார்கள். இந்தப் புராணத்தைப் பற்றி ஓர் அழகான வரலாறு உண்டு. முருகப்பெருமானுடைய திருவருளை முன்னிட்டுக் கச்சியப்ப சிவாசாரியார் இதைப் பாட வேண்டுமென்று எண்ணினார் அவருடைய தந்தையார் காளத்தியப்ப சிவாசாரியார். காஞ்சிபுரத்தில் பல பேர்கள், "முருகப்பெருமானிடத்தில் இணையில்லாத பக்தியுடைய நீங்களே கந்த புராணத்தைத் தமிழில் பாட வேண்டும்" என்று அவரை வற்புறுத்தினார்கள். ஆண்டவன் திருவருள் கூட்டுவித்தாலன்றிப் பாட இயலாது என்று அவர் எண்ணினார். 'இதை எப்படிப் பாடுவது?' என்று நினைத்துக் கொண்டிருந்த போது, 'திகட சக்கரம்' என்ற தொடர் அசரீரியாகக் கிடைத்தது. அதைக் கேட்டு, இறைவன் திருவருள் பாலித்தான் என்று ஆனந்தம் கொண்டு அதையே தொடக்கமாக வைத்துப் பாடலானார். எல்லாவற்றையும் பாடி முடித்த பிறகு அரங்கேற்றம் நடத்த ஏற்பாடு ஆயிற்று.

ஒரு நூலை இயற்றிய பிறகு பல புலவர்கள் வீற்றிருக்கிற சபையில் அதனை அரங்கேற்றம்செய்வது அந்தக்காலத்து வழக்கம். மாபெரும் புலவரும், சிறந்த இலக்கணத்தை இயற்றியவருமான தொல்காப்பியர் அதங்கோட்டு ஆசான் அவையில் தம் இலக்கண நூலை அரங்கேற்றினார் என்று தெரிய வருகிறது. பழங்காலத்தில் எவ்வளவு பெரிய புலவர்களாக இருந்தாலும் தம்முடைய நூலைப் புலவர்கள் கூடியுள்ள சபையில் அரங்கேற்றம் செய்வது என்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இந்தக் காலத்தில் இந்த வரையறை போய்விட்டது. ஒரு பாட்டைப் பாடி, இந்தப் பாட்டைப் போல வேறுயார் பாடுவார்கள் என்று தாமே எல்லோரிடமும் பிரசாரம் பண்ணுகிற பழக்கம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. கந்தபுராணம் காஞ்சிபுரத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் குமரகோட்டத்தில் அரங்கேற்றம் ஆயிற்று. அரங்கேற்றம் நடந்த மண்டபம் அக் கோயிலில் தனியாக இருக்கிறது.

கச்சியப்ப சிவாசாரியார் குமரகோட்டத்தில் அர்ச்சகராக இருந்தவர். அவர் அங்கே கந்தபுராணத்தை அரங்கேற்றம் செய்த போது அவரிடத்துப் பொறாமையுள்ள ஒருவர் முதல் பாட்டைச் சொல்லும் போதே தடை கூறினார்.

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று தொடங்குகிறது விநாயகர் காப்புப் பாடல். திகட சக்கரம் என்பதை, திகழ் தசக்கரம் என்று பிரித்துப் பொருள் கூறினார் சிவாசாரியார். "ஏகரத்தின் முன் தகரம் வந்தால் டகரமாவதற்கு விதி இருக்கிறது. ழகரத்தின் முன் தகரம் வந்தால் டகரமாவதற்கு எங்கே விதி இருக்கிறது?" என்று அந்தப் பொறாமைக்காரர் கேட்டார். "இந்தப் பாட்டில் அவ்வாறு வந்தது தவறு" என்று சொன்னார். அப்போது சிறிது மயங்கிய கச்சியப்ப சிவாசாரியார், "நாளைக்கு அதற்கு விடை சொல்கிறேன்" என்று சொல்லி முடித்து விட்டார். ஆண்டவனையே நினைத்து அன்று படுத்திருந்தார். "எம்பெருமானே, நீதானே அடியெடுத்துக் கொடுத்தாய்? நீ எடுத்துக் கொடுத்த தொடரிலேயே தவறு இருக்கிறது என்று ஒருவர் சொல்கிறார், இது நியாந்தானா?" என்று வருந்தினார். அப்போது, "நாளைய தினம் நாம் வருகிறோம். நீ கவலைப்படாதே" என்று கனவில் இறைவன் அனுக்கிரகம் செய்தான்.

மறுநாள் சபை கூடியது. அப்போது ஒரு புலவர் வேடத்தில் முருகன் வந்தான். திகழ் தசக்கரம் என்பது திகட சக்கரம் என்று ஆவதற்குரிய இலக்கணம் இது என்று வீரசோழியத்தில் உள்ள ஒரு சூத்திரத்தை எடுத்துக் காட்டினார் வந்த புலவர். வீரசோழியத்தில் அதற்கு இலக்கண விதி இருக்கிறது. அந்த நூலில் சந்திப் படலத்தில் பதினைந்தாவது சூத்திரத்தில், "எண்ணிரண்டாய்த் தோன்றுடல் பின்னர்த் தகாரம் வரின் இரண்டும் தொடர்பால், ஆன்ற ஐந்தாம் உடல் ஆம்; முன்பில் ஒன்றுக்கு அழிவுமுண்டோ" என்று வருகிறது. ழகரம், ளகரம் இரண்டின் முன்னும் தகரம் வந்தால் டகரம் ஆகும் என்று அந்தச் சூத்திரம் சொல்கிறது. இதனைக் கேட்டவுடன் பொறாமைக்காரர் வாய் அடங்கினார். இந்தச் செய்தியைத் திருப்புகழில் அருணகிரிநாதர்,

*"மருவு புலவனார் கவிக்குளேசிறு*
*வழுவ தறைமகா சபைக்குளேகியே*
*வகைய பெயராதா இலக்கணாவிதி மொழிவோனே."*

என்றும்,

*"முற்பட்ட இலக்கண நூலிடை*
*தப்புற்ற கவிக்கென வேஅவை*
*முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே."*

என்றும் பாடுகிறார்.

அந்தக் காலத்தில் எல்லோருமே கச்சியப்ப சிவாசாரியாரைப் பாராட்டி இந்தக் காப்பியத்தைத் தெய்வ சம்பந்தம் உடையது என்று போற்றினார்கள். இதற்கு ஒரு சிறப்புப் பாயிரம் இருக்கிறது; "உச்சித மாஞ்சிவ வேதியன்" என்று தொடங்கும் அது, "காளத்தி ஓங்குமைந்தன் கச்சியப்பன்" என்று கச்சியப்ப சிவாசாரியாரைச் சொல்கிறது.

பழங்காலத்தில் பாற்கடலைத் தேவர்கள் கடைந்தபோது அதிலிருந்து திருமகள் எழுந்தாள்; சந்திரன் தோன்றினான்; அமுதம் உண்டாயிற்று. அதைப் போலக் கச்சியப்ப சிவாசாரியார் பாடியுள்ள கந்தபுராணத்திலிருந்து கல்வியாகிய சந்திரனும், வெண்தாமரை மேவும் சரசுவதியும், கேட்கின்ற செவிக்கும் பாடுகின்ற நாவுக்கும் இன்பம் தரும் அமிழ்தமும் எழுந்தன என்று அந்தச் சிறப்புப் பாயிரம் சொல்கிறது.

*"உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி ஓங்குமைந்தன்*
*கச்சியப் பன்செய்த கந்தபுராணக் கலைக்கடலில்*
*மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னும்*
*இச்செவி நாவினுக் கின்பாம் அமுதும் எழுந்தனவே."*

(சிவவேதியன் – ஆதிசைவர். இன்பாம் அமுதும் – இன்பமாகிய அமிர்தமும்)

யாழ்ப்பாணத்தில் இராமாயணத்தை விடக் கந்த புராணத்திற்குச் சிறப்பு அதிகமாக இருக்கிறது. கந்தசஷ்டியின் போது கந்தபுராணப் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள். அதற்குப் பயன் சொல்வது என்ற ஒரு முறை இருக்கிறது. ஒவ்வொரு பாட்டின் சாரத்தையும் சொல்லிக்கொண்டு வருவார்கள். யாழ்ப்பாணத்திலே தோன்றி, சைவ சமயத்தை நிலை நாட்டிய ஆறுமுகநாவலர் இந்த முறையை ஆரம்பித்தார். நான் யாழ்ப்பாணத்திற்குப் பலமுறை சென்று வந்தவன். ஆகவே இந்த முறையை நான் கேட்டிருக்கிறேன்.

**- கி. வா. ஜகந்நாதன்**

(நன்றி : கந்தவேள் கதையமுதம்)

## சைவ வரலாற்றில் தனது இருப்பை நிலைநிறுத்திய

# நல்லை நகர் நாவலர்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்



இந்நாட்டில் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திச் சைவ உலகில் என்றுமே மறக்கப்படமுடியாத வகையில் தன் இருப்பை நிலைநிறுத்தியமையால் சைவ உலகில் வணக்கத்துக்குரியவராக விளங்குபவர் நல்லைநகர் நாவலர். நல்லை நகரின் சிறப்புக்கும் வணக்கத்துக்கும் பல விடயங்கள் காணப்படுகின்றபோதும் சைவ உலகில் ஞானிகளினதும் சித்தர்களினதும் அருட்கடாட்சமும் கந்தனின் கருணைப் பிரவாகமும் கொண்டு தனித்துவமான இடத்தைப் பெறுவது நல்லூர் கந்தசுவாமி கோயில். இது போன்று தனித்துவமான இடத்தைப் பெறுபவர் நாவலர் பெருமான். நாவலர் செல்வவளமும் செல்வாக்கும் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். பன்மொழிப் புலமையாளர். தமிழ் மொழிப் புலமையில் தனக்கு நிகரற்றவராகத் திகழ்ந்தவர். வடமொழியில் வல்லவர். ஆங்கிலமொழியிலும் திறமை பெற்றவர். இத்தகைய சிறந்த புலமைமிக்க நாவலர் சைவசமயத்தை வளர்ப்பதற்காகத் தன் ஆங்கில வடமொழி தமிழ்ப் புலமை அனைத்தையும் பயன்படுத்தியவர். குறிப்பாக சைவசமய நிலைபேற்றிக்கும் அதன் வளர்ச்சிக்கும் அயராது தொண்டு செய்தவரே நாவலர் பெருமான். சைவர்கள் முறையான சைவவாழ்வைப் பேணும் வகையில் அந்த ஒரு உயர் லட்சியத்திற்காக பெருந்தொண்டாற்றிய கருமயோகியே நாவலர். மேன்மை கொள் சைவநீதி விளங்க வேண்டி மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களாலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உத்தமோத்தம ஊழியக்காரனாகத் திகழ்பவர் இவர்.

19 ஆம் நூற்றாண்டிலே சைவத்தமிழ் மக்களிடையே ஏற்பட்ட மறுமலர்ச்சி தனித்துவமானது. அதன் காரண கர்த்தாவாக விளங்குபவர் நல்லூர் தந்த நாவலரே. 19 ஆம் நூற்றாண்டு உலக வரலாற்றில் கல்வியின் பயனான சிந்தனை வளர்ச்சியால் பல மாற்றங்கள் ஏற்பட்ட காலம். அத்தகைய நிலைக்கு ஈடுசெய்யும் வகையில் உலக வரலாற்றிலும் மனித வரலாற்றிலும் பல சீர்திருத்தங்கள் மறுமலர்ச்சிகள் ஏற்பட்டன. எனவே இத்தகைய காலகட்டத்தில் உலகப் போக்கை சரியான சிந்தனையின் மூலம் முறையாகப் புரிந்து உலக ஓட்டத்திற்கும் கால மாற்றத்திற்கும் ஏற்ப சைவ மறுமலர்ச்சிப் பாதைக்கு முன்னோடியாகவும் மறுமலர்ச்சிக்கான செயல்வீரராகவும் நின்று இறக்கும் வரையும் தன்னையே சைவநீதியின் பாற்பட்ட உன்னத வாழ்வைச் சைவர்கள் வாழ்ந்து மனிதப் பிறவியின் பயனை அடைய வேண்டும் என்று தன்னையே சைவத்துக்கு ஆகுதியாக்கிய உத்தமப் பெருந்தகையே நாவலர். எனவேதான் வரலாற்றில் மறக்கப்பட முடியாதவராக வணக்கத்துக்குரியவராக அவர் விளங்குகின்றார்.

மேட்டுக்குடி மக்களிடம் சிறைப்பட்டிருந்த சைவப் பண்பாட்டு விழுமியங்களைக் கூறும் தோத்திர சாத்திர நூல்களைச் சாதாரண அறிவுடைய சைவமக்களும் இலகுவாகப் புரிந்து வாழ்வில் கடைப்பிடிக்கும் வண்ணம் பலவழிகளில் பாரிய தொண்டைச் செய்தார். அவ்வகையிலேயே அவருடைய உரை எழுதும் முயற்சி, பதிப்பு முயற்சி புராணபடனம் பிரசங்கம் செய்தல், கண்டன நூல்களை எழுதுதல் என்பன விளங்குகின்றன. சாதாரண அறிவுள்ள மக்கள் விளங்கிக் கொள்ள முடியாத கவிதை வடிவிற் காணப்பட்ட சமய உண்மைகளை எளிய இனிய உரைவடிவில் வெளியிட்டுப் பேருதவி புரிந்த பெருந்தகை. ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்த நூல்களைச் சைவ உலகு அறிய பதிப்பு முயற்சியில் ஈடுபட்டுப் பெரும் பணியாற்றியவர். ஒருசிலரால் மேற்கொள்ளப்பட்டு வந்த இறைமாட்சிமையையும் அப்பரம்பொருளின் கருணைத்திறத்தையும் கூறும் புராணக் கதைகளை புராணபடனம் மூலம் கற்றோரும் மற்றோரும் அறிந்து பயன்பெற புராணபடன முறைமையைச் செழுமைப்படுத்தியவர். கிறிஸ்தவ மதத்தினர் கிறிஸ்துவின் இறைமாட்சிமையையும் கருணைத் திறத்தையும் எடுத்துக் கூறும் வகையிற் பேணிவந்த பிரசங்க முறையை சைவசமய மரபுக்குட்படுத்தி சைவ உலகுக்கு பிரசங்கிகளைத் தோற்றுவித்து அப்பரம்பரை இறையருளை மக்கள் உணருவதற்கான ஒரு உத்தியாக உருவாக்கிய முதற் சைவப்பிரசங்கியும் பிரசங்கக் கலையின் முன்னோடியுமாக விளங்கும் மறுமலர்ச்சியாளர் நாவலரே.

மேலும் அரசியலில் சைவத்தமிழ் மக்களுக்குரிய உரிமைக்காகவும் முயற்சிகளை மேற்கொண்டவர். நாவலர் ஒரு யுக புருஷராக உலக மறுமலர்ச்சிக்கு நிகராக சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தி மேன்மை கொள் சைவநீதி வையத்தில் தழைக்கப் பாடுபட்ட திருத்தொண்டர். பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் தம் பக்தி இயக்கச் செயற்பாட்டினால் சைவத்தை மறுமலர்ச்சி அடையச் செய்தமை போன்று 19ஆம் நூற்றாண்டு காலத்திலே நாவலர் சைவத்தை மறுமலர்ச்சி பெறத் தொண்டாற்றினார். இவ்வகையில் அவர் சைவர்களிடையே காணப்பட்ட சைவத்துக்கு விரோதமான செயல்களைக் கண்டித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் சைவ சமுதாயத்தை சீர்திருத்தி மறுமலர்ச்சி பெறவைக்கும் முயற்சியாக சமகால சமய, சமூக சூழ்நிலைகளைத் தமது பிரசுரங்களிலும் வியாக்கியானங்களிலும் அவ்வப்போது எடுத்துக் கூறி உள்ளார். அப்பிரசுரங்களில் அன்றைய பார்ப்பன் கோயிலார் சைவக்குருமார் முதலானோரின் கையாலாகாத் தன்மைகளை வெளிப்படுத்தி உள்ளார்.

சைவசமயிகள் சைவச் சூழலில் கற்பதற்கு சைவப் பாடசாலைகளை நிறுவியும், சைவாசிரிய பாடசாலைகள் உருவாவதற்கான முயற்சிகளை மேற்கொண்டும், முதியோர் கல்வியினை வளர்க்க முற்பட்டும், இதற்கான கல்விக் கொள்கைகளை திட்டமிட்டு உருவாக்கியும் 19 ஆம் நூற்றாண்டு உலகக் கல்விக் கொள்கைக்குப் பொருந்தும் வகையில் சைவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து சைவ ஆங்கில பாடசாலைகளை நிறுவுவதற்கு முயற்சிகளை ஆரம்பித்தும் செயற்பட்ட பெருந்தகையாளர். 19ஆம் நூற்றாண்டில் சைவம் மறுமலர்ச்சி பெற யுக புருஷராகச் செயற்பட்டு தன் இருப்பைச் சைவ வரலாற்றில் நிலைநிறுத்திய பெருமை நாவலருக்கே உண்டு.

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# ஈழத்து இந்துப் பண்பாடும் ஆடற்கலையும்

சிவானுபவம் எங்கே பிறக்கின்றதோ அங்கே தான் கலைகள் மகிழ்கின்றன என்று கொள்ளப்படின் நம் முன்னோர்கள் கலைகளுக்குப் புனிதமான தெய்வீகத் தோற்றம் கற்பித்துள்ளனர். நாட்டியக் கலையானது. ஆத்மஞானம், சிவானந்தம் என்பவற்றை மக்களுக்கு அளித்து மனதில் சாந்தத்தைக் கொடுப்பதுடன் இந்து பண்பாடு விளக்கும் முத்தி நெறிக்கு வழி காட்டுவனவாகவும் விளங்குகின்றன. மேலும் உருவமாகவும் அருவமாகவும் நின்று ஆண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் இயக்கும் பரம்பொருளில் ஆடற் தத்துவத்தைப் புலப்படுத்தி நிற்கும் கலை வடிவமே நடனம். ஆடற்கலையின் ஊடாக காலம் கடந்து தத்துவப் பொருளைக் காணமுடிகின்றது. இக்கலை நிலைபேறுடைய தெய்வவடிவம். இது எக்காலத்திற்கும் பொருந்தும் ஓசை ஒழுங்குடைய சந்தத்திற்கமைய இறைவன் அசைந்தாடும் பொழுது அண்ட சராசரங்கள் அனைத்தும் இயங்குகின்றன. இக்கலையை பொறுத்தவரை சமயமும் தத்துவமும் பிரித்துப் பார்க்க முடியாதெனவாகவே கருதப்படுகின்றன. இவ்விரண்டும் கலந்து நீக்கமற நிற்கும் தெய்வீக கலையே நடனம். இந்நிலையில் சமயமும் தத்துவமும் இணைந்து இந்து சமய விளக்கத்தை நினைவிற்குக் கொண்டு வரும் வடிவமாக நடராஜர் விக்கிரகம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் விளக்கி நிற்பதுடன் இறைவனின் அவ் ஆட்டத்தினாலேயே இவ் உலகமும் உயிர்களும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற தத்துவப் பொருளையும் விளக்கி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையிலே "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ" என்ற வாக்கியத்திற்கிணங்க அவன் ஆடுகின்றான் என்னும் சிவனின் தத்துவத்தையும் ஆடலையும் கூறுகிறாரே திருமூலர்.

**கலையும் வழிபாடும் கோவில் பண்பாட்டில் இரண்டறக் கலந்து மேன்மையடைந்துள்ளன என குறிப்பிடல் மிகையாகாது. இந்துக்களை பொறுத்தவரையில் தெய்வீகத்தையும் தெய்வீகத்தில் கலையையும் இணைத்து வழிபட்டவர்கள் ஆவார்கள். மேலும் சிவாகம வழிபாட்டினால் ஆலயங்களில் இசைக் கலை, பண்ணிசை, வாத்திய இசை, நடனக்கலை, ஆகிய கலைகளும் காலம் தோறும் சிறப்படைகின்றன. இவற்றுள் கிரியை முறைகளும் ஒரு கலையாகவே திருக்கோயில்களில் வளர்ச்சி பெற்றன.**

***திருமதி அ. கிருபைராஜா***

**B.F.A (Hon), M.A, M.Phil.**

நடனத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

# நல்லூரும் நாவலரும்

உலகம் ஒழுங்கு கெட்டு இருந்த காலத்தில், முருகப் பெருமான் உலகத்தை ஒழுங்காக்கி அழகு செய்ய வேண்டி, அங்கு வந்து உதித்தனன் என்கிறது கந்தபுராணம். பத்தொன்பதாம் நூற்றாண்டில், நம் நாட்டிலும் தென்னாட்டிலும், சைவமும் தமிழும் நலிந்து, அழிவின் விளிம்பில் இருந்தபோது சைவமும் தமிழும் மீண்டும் தழைக்கவும் அவற்றை விருத்தி செய்யும் பொருட்டும் நல்லைக் கந்தன், ஆறுமுகநாவலர் நல்லூரில் உதிக்கத், திருவருள் பாலித்தருளினார். அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவத்தையும் தமிழையும் சைவத் தமிழ்க் கல்வி, கலாசாரம், பண்பாட்டுக் கூறுகளையும் மீட்டெடுத்து அவற்றை விருத்திசெய்வதற்குத் தமது உடல், பொருள், உத்தியோக வாழ்வு, ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைப்பையும், நித்திய நைமித்தியங்களையும் மற்றும் நடைமுறைகளையும் சிவாகமங்களுக்கும் குமாரதந்திரத்திற்கும் அமைவாகக் கொண்டுவர வேண்டுமென நாவலர் பெருமான் பெரிதும் முயன்றார். கோயில்களில் மிருக பலியிடுதல், தேவதாசிகள் நடனமாடுதல், வாணவேடிக்கைகள் போன்ற கேளிக்கைகள், களியாட்டங்கள் என்பன ஆகம விதிகளுக்கு முரணானவை என்பதால் அவற்றை நாவலர் எதிர்த்துக் கண்டனங்கள் தெரிவித்து வந்தார். பன்னிரு திருமுறைகளை ஓதல், புராணபடனம் செய்தல், பஜனை, சமயப் பிரசங்கம், கூட்டுப் பிரார்த்தனை, பண்ணிசை, சைவாசாரம், ஒழுக்கம், திருத்தொண்டு செய்தல் என்பவற்றையே நாவலர் பெருமான் ஊக்குவித்தார். கந்தபுராண கலாசாரம் நாவலர் பெருமானின் பெருமுயற்சியால் நல்லூரிலே ஊற்றெடுத்து உலகெங்கும் மேன்மை கொள் சைவ நீதியாகப் பரவி வருகிறது. நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு அருகாமையில் நாவலருக்கு மணிமண்டபம் அமைத்து ஆங்கு நாவலர் சிலையை நிறுவி, அவரை நினைந்து, மதித்து வணக்கம் செலுத்தி வருவது போற்றுதற்குரியதாகும்.

**- கலாநிதி கு. சோமசுந்தரம்**

**[திரு. வை. சோமசேகரன் அவர்களால் தொகுக்கப்பட்ட ஈழத்து ஆலயங்கள் யாழ் மாவட்டத் திருத்தலங்கள் - பாகம் 1 நூலிலிருந்து - மாமன்ற வெளியீடு]**

# இறைபணி நிற்கும் இந்து மக்களின் உச்ச நிறுவனம்

**கந்தையா நீலகண்டன்**
தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்

எல்லாம் வல்ல எம்பெருமானின் அருளால் இந்நாட்டு இந்து நிறுவனங்களின் ஒன்றியமாக, இந்து மக்களின் உச்ச நிறுவனமாக, இந்து மக்களின் குரலாக ஆறு தசாப்தங்களாக அகில இலங்கை இந்து மாமன்றம் "இறைபணி நிற்க" என்ற அதன் இலட்சியத்துக்கமைய பணியாற்றிய வரலாற்றுடன் அறுபதாண்டு நிறைவைக் கண்டுள்ளது.

எனக்கு முன் மாமன்றத்தைத் தலைமை தாங்கிய (1). பிரபல சிவில் சேவை அதிகாரியும் உயர்ஸ்தானிகருமான அமரர் சி. குமாரசாமி அவர்கள், (2). பிரபல சிவில் சேவை அதிகாரியும் அமைச்சரும் திருக்கேதீச்சர திருப்பணிக்குத் தன்னையே அர்ப்பணித்த அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள், (3). என் தந்தையின் கல்லூரித் தோழனாக வளர்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர் அமரர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள், (4). சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக புகழ்பெற்ற அமரர் எஸ். சோமசுந்தரம் அவர்கள், (5). என்னை ஒரு சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வித்து வைத்த உயர் நீதிமன்ற நீதியரசர் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்கள், (6). கொழும்பில் மாமன்றத்திற்கு காணியைப் பெற பெரும் பாடுபட்ட அமரர் ஆ. சின்னத்தம்பி அவர்கள், (7). எழும்பாத மாமன்றத் தலைமையகக் கட்டடத்தைக் கட்டியெழுப்புவதை ஆரம்பித்த பெருமைக்குரிய அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள், (8). இரு தசாப்தங்களாக மாமன்ற வரலாற்றை மாற்றி நான் பொதுச் செயலாளராக இருந்த பெரும் பகுதியில் என்னை வழிநடத்தி, தன் தலைமையை என்னிடம் ஒப்படைத்த மனிதநேய மாமணி இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்கள் போன்ற பெருமக்களை, எண்ணிப் பார்க்கும் போது சிறியேனுக்கு இந்த ஆசனத்தில் மாமன்றத்தின் அறுபதாவது நிறைவு காலத்தில் அமரத் தகுதி போதாது என்ற பதட்டமே எனக்கு ஏற்படுகின்றது. ஆனால் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் சகோதரர்கள், எங்களுக்கு வழிகாட்டும் ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள், நல்லூர் ஆதீன முதல்வர் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் உட்பட்ட குருமார்கள் ஆலய அறங்காவலர்கள் மனிதநேய மாமணி கயிலாசபிள்ளை உட்பட்ட பெரியோர்கள் தரும் ஊக்கமும் ஆதரவும் மற்றும் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் இந்து மக்கள் எங்களுக்குத் தொடர்ந்து தரும் நல்வாழ்த்துக்களும் இறைபணி நின்று எமது கடமைகளை நிறைவேற்ற உதவுகின்றன. சிறியேன் ஒரு தொண்டன் - சிவதொண்டர்களில் தொண்டன்.

மாமன்றம் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி செய்த வேளையிலும் யாழ் மண்ணில் பல கல்விமான்களை அழைத்து இந்து ஆராய்ச்சி மாநாட்டை 2005 இல் நடத்தினோம். சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், பேராசிரியர் பெருந்தகை அ.சண்முகதாஸ், யாழ் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி த. கமலநாதன் ஆகியோர் தந்த பக்கபலனை மறக்கமுடியாது. இன்று கலாநிதி கமலநாதன் வெளிநாடு சென்றுவிட்டதனால் ஏனைய இருவரும், அறுபதாவது ஆண்டையொட்டி நல்லூர் புண்ணிய பூமியில் (யூலை 31 முதல் நடக்கும்) இந்து ஆராய்ச்சி மாநாட்டை மாமன்றம் நடத்த எங்களுக்கு வழிகாட்டி அளப்பரிய பல உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றனர். இதற்கு உதவும் ஏனையோருக்கும் நன்றி.

இக்கட்டத்தில் எமது சேவைகள் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறி எமது உடன்பிறப்புகளுக்காக நாங்கள் ஆற்றும் பணிகளைத் தொடருவோம், என்ற உறுதி மொழியையும் தருகின்றோம்.

**ஆன்மீகப் பணிகள்**

எமது மக்களிடையே ஆன்மீக உணர்வையும் இறைபக்தியையும் வளர்த்து அவர்களை எமது சமய வழியில் வாழ வழிவகுக்கும் பல பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம் என்று திருப்தியுடன் கூற எங்களுக்கு இறையருள் கிடைத்திருக்கின்றது.

ஆலய வழிபாட்டை மையமாகக் கொண்ட எமது சமயத்தில் மக்களை ஆன்மீக வழிபாட்டில் இட்டுச் செல்வதில் தொடர்ந்தும் ஆலயங்கள் வகுக்கும் முக்கிய பங்கை எவரும் மறுக்கமுடியாது. இந்நாட்டில் அரச, இராணுவ ஆதரவுடன் அவிட்டுவிடப்பட்ட காழ்ப்புணர்வால் பல ஆலயங்கள் கடந்த மூன்று தசாப்தங்களில் அழிக்கப்பட்டன, பாதிக்கப்பட்டன. அவற்றில் பலவற்றைப் புனருத்தாரணம் செய்ய எமது மக்கள் நடவடிக்கை எடுத்தாலும் அரசு தன் பொறுப்பை நிறைவேற்றத்தவறி விட்டது. அதனைச் சுட்டிக்காட்டி அரசிடம் நிவாரணம் கோரி வந்திருக்கிறோம்.

**சமூகப் பணிகள்**

பல்வேறு வழிகளிலும், வேதனைகளாலும், சோதனைகளாலும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் வாடுகின்ற எமது உடன்பிறப்புக்களுக்கு உதவிகள் வழங்குவதில் மாமன்றம் கண்ணும் கருத்துமாக சேவையாற்றி வந்திருக்கிறது.

மக்கள் போரின் கொடுமையால் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் மாமன்றம் முன்னோடியாக இருந்தது. வடகிழக்கில் மக்கள் இடம் பெயர்ந்தபோது அவர்களைத் தேடி, நாடி உதவி செய்தோம்.

போரினால் வன்னியிலிருந்து தவித்து வெளியேறிய மக்கள், சிவாச்சாரியார்கள், வயோதிபர், தாய்மார், குழந்தைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தாமதியாது ஓடிச் சென்று கைகொடுத்து உதவினோம். இப்படியாகத் தொடர்ந்து இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் என எமது உடன் பிறப்புக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த வேளையெல்லாம் ஓடிச் சென்று அவர்களின் பசியைப் போக்க எம்மாலான உதவிகளை வழங்கினோம்.

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# இலங்கையின் வடக்கில் நாட்டார் பெண் தெய்வ வழிபாடு காணப்படும் பகுதிகள்

**துர்க்கா தேவி** - அளவெட்டி, தெல்லிப்பழை, புதுக்குடியிருப்பு, நுணாவில்

**கண்ணகி அம்மன்** - மண்டைதீவு, காரைநகர், புங்குடுதீவு, புற்குளம், வண்ணான்குளம், மூன்றுமுறிப்பு, வட்டுக்கோட்டை, அங்கணாக்கடவை, சண்டிலிப்பாய், மாதகல், ஏழாலை, கிளானை, பீடாரத்தனை, மயிலிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி, பருத்தித்துறை, நாகர்கோவில், வரணி, அல்வாய், புலோலியூர், ஆவாரங்கால்- புத்தூர், நீர்வேலி, கோப்பாய், முல்லைத்தீவு, முள்ளியவளை, சிலாவத்தை, கற்கிடங்கு, பனையாண்டான், அரியமடு, கொக்கிளாய், குமுளமுனை, ஓமந்தை, நிலாவெளி, புலோலி, சாவகச்சேரி, பூநகரி, கும்புறுபிட்டி, ஆனையிறவு

**பத்தினியம்மை** - ஈரளக்குளம், களுவன்கேணி, சம்புக்கழி

**முத்துமாரி அம்பாள்** - அச்சுவேலி, அல்வாய், அளவெட்டி, அனலைதீவு, உடப்பு, உடையார்கட்டு, கட்டுவன், கதிரவெளி, காரைநகர், காங்கேசன்துறை, கிளிவெட்டி, கீரிமலை, குரும்பசிட்டி, சித்தாண்டி, சாம்பல்தீவு, சுட்டிபுரம், நாவற்குடா, புங்குடுதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு, வட்டுக்கோட்டை, வல்லை, முல்லைத்தீவு, கோப்பாய், கொத்துக்குளம், புளியங்குளம், பழுகாமம், வழக்கம்பரை, தொல்புரம், ஸ்கந்தபுரம், சேற்றுக்கண்டி.

**பத்திரகாளி** - காளியம்பாள் - காளிகா தேவி

அச்சுவேலி, இருபாலை, திருநெல்வேலி, தும்பளை, சுழிபுரம், சங்கரத்தை, இணுவில், வண்ணார்பண்ணை, மல்லாகம், புங்கை, மானிப்பாய், இணுவில், கெருடாவில், புங்குடுதீவு, சரசாலை

**திரௌபதை அம்மன்** - பழுகாமம்

**நாச்சியம்மன்** - கிளான், நவாலி

இலங்கையின் வடபகுதியில் நம்பிக்கை சார்ந்து எழுந்த கிராமிய தெய்வ வழிபாட்டில் பெண்தெய்வங்களுக்கு சிறப்பானதொரு இடம் வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் இத்தெய்வ வழிபாடுகள் பண்டைக்காலம் முதலே காணப்பட்டிருத்தலை இலங்கையின் தொன்மையான வரலாறுகளை எடுத்துரைக்கின்ற மகாவம்சம், யாழ்ப்பாண வைபவ மாலை போன்ற நூல்களது அடிப்படையில் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இவ் ஆலயங்கள் முறையான ஆகம வழிபாட்டு முறைகள் தற்காலத்திற் பின்பற்றப்பட்டாலும் கூட பாரம்பரிய சடங்குமுறைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. தற்போது இவ் ஆலயங்கள் பிள்ளையார், முருகன், வைரவர், நடராஜர் போன்ற பரிவார தெய்வங்களுக்கும் சந்நிதிகள் அமைக்கப்பெற்று, இராஜகோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, மற்றைய ஆலயங்களைப் போன்று நித்திய, நைமித்திய, தேர்த் திருவிழாக்கள், அலங்கார உற்சவங்கள் நடாத்தப்பெறுகின்றது. சடங்குகளைப் போல பலவேறு கலை அம்சங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இவ்வகை சடங்குமுறைகள், அவற்றின் பின்னணி, கூத்து போன்ற கலைகள், அவை நிகழ்த்தப்படுகின்ற முறைகள் போன்ற பல்வேறு விடயங்களை முறையான விதத்தில் எழுத்துருவில் ஆவணங்களாக உருவாக்குதல் எதிர்காலத்தில் பிரதேசங்கள் சார்ந்த வரலாறுகள், தெய்வவழிபாடு சார்ந்த நம்பிக்கைகள் என்பவற்றை உணர்ந்து கொள்ள உதவும் சாதனங்களாக அமையும்.

***விவேகானந்தராஜா துலாஞ்சனன்***
விஞ்ஞான பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

மாமன்ற முகாமைப் பேரவையில் எடுத்துரைக்கப்பட்ட முன்மொழிவைத் தொடர்ந்து அன்றைய தலைவர் மனித நேயமாமணி இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை இலங்கையிலும் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளிலும் மனித நேய நிதியம் ஆரம்பித்து மாமன்ற சமூகப் பணிகளுக்கு நிதியுதவி பெற்று தந்தமையையும் மறக்கமுடியாது.

எமது உடன் பிறப்புக்களுக்காக எங்கள் இதயம் என்றும் துடித்துக் கொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டில் இதயத்தில் துவாரம் என்ற சோகமான சரித்திரத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஆறு வயதுச் சிறுமிக்கு கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் இருதயச் சத்திர சிகிச்சையை அவசர அவசரமாகச் செய்ய ஆவன செய்து அந்தச் சிறுமியின் உயிரைக் காப்பாற்றியது மாமன்ற வரலாற்றில் ஒரு மகா புண்ணியமான செயல்.

இப்படிப் பலப்பல மனிதநேயப் பணிகளை ஆற்றிக்கொண்டு அடுத்த தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கிறோம்.

### இந்து இளைஞர் சமுதாயம்

போர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புற்ற பிள்ளைகள் மற்றும் முதியோர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு மேலாக அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி 2009 ஆம் ஆண்டு வன்னியில் இருந்து அனாதரவாக வந்த 275 யாழ் பல்கலைக்கழக மாணவர்களை அரவணைத்து மனிதநேய நிதியம் மற்றும் லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் என்பவற்றுடன் இணைந்து அவர்களது கல்வி நடவடிக்கைக்காக மாதந்தோறும் நிதியுதவியளித்து வந்திருக்கின்றோம். இவ்வுதவியைப் பற்றி அன்றைய

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பகிரங்கமாகப் பாராட்டியதுடன், ரூபா இரண்டாயிரத்தை ஒரே நாளில் காணாத எம் பிள்ளைகளுக்கு இந்து மாமன்றம் ஒழுங்கு செய்துள்ள உதவி பேருதவியாகும் என்று குறிப்பிட்டமையையும் மறக்க முடியாது.

மேலும் யாழ் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கை களுக்காக கணினிகள் அன்பளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். கணனி மூலம் எங்கள் மாணவர்கள் சர்வதேச ரீதியில் வளரும் அறிவைப் பெறவேண்டும் என்பதே எமது விழைவு.

இன்றைய காலகட்டத்தில் ஆன்மீகப் பண்பாடுகளை மறந்து நவநாகரிக வாழ்க்கையால் கவரப்பட்டு மது மற்றும் போதைப் பொருட்களுக்கு ஆளாகும் எமது இளம் சமுதாயத்தைக் காப்பாற்றுவது எங்கள் எல்லோரினதும் தலையாய கடமையாகும். இதில் குறிப்பாக யாழ் கல்வி சமூகத்துடன் இணைந்து பணியாற்றவும் மாமன்றம் முன்வந்திருக்கிறது.

### கல்விப் பணிகள்

எமது மாமன்றத்தின் வரலாற்றில் சில மைல் கற்களை மாமன்றத்தின் கல்விப் பணிகள் பதித்திருக்கின்றன. மாமன்றக் கல்விக்குழு நாட்டின் பல பகுதிகளிலும் கல்விக் கருத்தரங்குகளை நடத்தி வந்ததுடன் இந்நாட்டு இந்து மன்றங்களின் பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு எடுத்துரைத்து மாமன்றம் குரல் எழுப்ப வழி செய்தது.

ஆண்டாண்டுதோறும் ஆயிரக்கணக்கான இலவச அப்பியாசப் புத்தகங்களை அச்சடித்து மாமன்றத்தால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் தேவையான மாணவர்களுக்கும் எங்களின் அனைத்து சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

### வெளியீடுகள்

மாமன்றம் இந்து மக்களின் சமய அறிவினை விருத்தி செய்ய வெளியீடுகள் மூலம் நல்லதொரு பணியை ஆற்றுகின்றது. 19 வருடங்களுக்கு மேல் "இந்து ஒளி" சஞ்சிகை ஒழுங்காக வெளிவந்து கொண்டிருக்கிறது. காலாண்டிதழாக சுடர்விட்ட இந்து ஒளி சமீபகாலத்தில் இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவருவதுடன் சில விசேட சிறப்புமலர்களும் வெளிவந்திருக்கின்றன.

அறுபது ஆண்டுகள் நிறைவு பெறும் இச்சமயத்திலும் குறைந்தது இரு தொகுதிகளைக் கொண்ட சிறப்பு மஞ்சரி ஒன்றையும் வெளியிட ஒழுங்குகள் செய்துவருகின்றோம். அந்த மஞ்சரியில் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் சுமார் எழுபது ஆய்வுக் கட்டுரைகளையும் பிரசுரிப்போம்.

இந்து மக்களுக்கு ஒரு கையேடு 2001 இல் தமிழில் முதலில் வெளியிடப்பட்டது. அதன் திருத்திய பதிப்பு 2006 இல் வந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமயநெறி வாழ்வுக்கு உதவ இக் கையேட்டை எமது சகோதர சகோதரிகளும் வாங்குவதால், பல மறுபதிப்புக்கள் அச்சிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருக்கும் எமது இளம் தலைமுறையினர் சிலரும் இந்நாட்டில் சர்வதேசப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களும் தமிழ்மொழியில் வாசிக்க முடியாது இருக்கும் துர்ப்பாக்கிய நிலை காரணமாக தமது சமயத்தை ஏன் திருமுறைகளைக் கூடப் படிக்கமுடியாது இருக்கின்றனர், இந்தப் பிரச்சினையைப் பலர் எமது கவனத்திற்கு கொண்டு வந்து இக்கையேட்டின் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிடுமாறு கேட்டிருந்தனர். இதற்கமைய ஆசிரியை திருமதி திலகா விஜயரத்தினம் அவர்களின் கடின முயற்சியால் கையேட்டின் அடிப்படையில் ஓர் ஆங்கில ஆக்கத்தைத் தயாரித்து அத்துடன் சிவபுராணம், அபிராமி அந்தாதி, கந்தசஷ்டி கவசம், திருப்பொற்சுண்ணம், திருவெம்பாவை, சகலகலாவல்லி மாலை ஆகியவற்றின் மொழிபெயர்ப்புக்களும் (Translations) Transliterations "A Compendium for Hindus" என்ற ஆங்கில மஞ்சரியை எமது வைரவிழா வெளியீடாக 06.03.2015 இல் வெளியிட்டோம். இந்த நூல் 4.4.2015 அன்று அவுஸ்திரேலியா சிட்னி முருகன் ஆலயத்திலும், 19.04.2015 இல் இலண்டனில் பிரித்தானிய இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் மாநாட்டிலும் வெளியிடப்பட்டது. சமீபத்தில் ஆன்மீகச்சுடர் தொண்டுநாதன் சுவாமிகளின் ஒழுங்கில் அமெரிக்காவில் சிக்காக்கோவிலும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

### சிவதொண்டர் அணியும் சைவவித்தகர் பயிற்சியும்

மாமன்றம் சிவதொண்டர் அணியை ஆரம்பித்து இதனை பல இடங்களிலும் இயங்க வைக்க முயற்சிகள் செய்து கொண்டுவருகிறது. இதற்கு எமது மக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் போதாது என்றே கூறவேண்டும்.

சிவதொண்டர் அணிப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறோம். இளைஞர்களுக்கு சால்வையும் யுவதிகளுக்கு கழுத்துப்பட்டிகளும் கொடுத்து வருகிறோம். திருக்கேதீச்சரத்தில் சிவதொண்டர் அணி இயங்கும் மகிமையைப் பார்க்கலாம். சிவதொண்டர் அணிகளை நிறுவி இயக்க சகல அங்கத்துவ சங்கங்களும் ஆலயக்குழுவும் முன்வரவேண்டும்.

சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கௌரவ இயக்குநராக நெறிப்படுத்தும் சைவவித்தகர் பயிற்சியை எமது யாழ் பணிமனையில் இருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பித்தோம். இந்த பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் அத்தாட்சியுடன் அவர்களுக்கு சான்றிதழ்கள் கொடுத்திருக்கிறோம். இந்தப் பயிற்சியை தொடர்வது முக்கியம். ஆனால் இதில் சேர எமது இளம் தலைமுறையினர் தயங்குவது வருந்தத்தக்கது.

### நடுத்தீர்ப்பு மையம்

எமது ஆலயப் பிரச்சினைகள் நீதிமன்றங்களுக்கு செல்லக்கூடாது. நடுத்தீர்ப்பு மையம் மூலம் சுமுகமாக சமய அறிவுமிக்க எம்மவரால் அப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என நடுத்தீர்ப்பு மையத்தை நிறுவி அதற்கான விதிகளை ஆக்கி இருக்கிறோம். இதனை எமது ஆலய நிர்வாகிகளும் ஆலயங்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### அங்கத்துவ சங்கங்கள்

எமது அங்கத்துவ சங்கங்கள் நாடளாவிய ரீதியில் பல மகத்தான சேவைகளைச் செய்து வருகின்றனர். அங்கத்துவ சங்கங்கள் உதவிகள் கோரிய வேளைகளில் அவற்றை ஆராய்ந்து முடியுமானவரை உதவி வருகிறோம்.

**கட்டடங்களும் உட்கட்டமைப்பு வசதிகளும்**

பல கட்டடங்களை அமைத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தும் நாடெல்லாம் எமது இந்து மக்கள் நலன் கருதி பல பணிகளைச் செய்துவருகிறோம்.

**இந்து மக்களின் குரலாக**

இந்த நாட்டின் இந்து மக்களின் குரலாகத் தொடர்ந்தும் ஒலித்து வருகின்றோம். அரச சார்பற்ற முறையில் எமது மக்களின் தேவைகளை அரசாங்கத்திற்கும் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் எடுத்துக் கூற மாமன்றம் என்றும் தயங்கவில்லை.

**யாழ் மண் சிவபூமியாக மிளிரவேண்டும்**

இந்த மேடையிலிருந்து உரையாற்றும்போது சிறியேன் ஒரு தலைவன் என்ற இறுமாப்புடன் எழுந்து நிற்கவில்லை. மாமன்றத்தின் சிவதொண்டர்களில் ஒருவனாக தொண்டர்களுக்கெல்லாம் தொண்டனாகவே கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன். வெளிநாட்டில் பிறந்தாலும் மூன்று வயதில் என்னை என் பெற்றோர்கள் இப்பூமிக்குக் கொண்டுவந்தார்கள். இங்கே அன்று நிலவிய கல்வித் தரத்தின் உயர்நிலை, ஆன்மீக வாழ்வின் சிறப்பு, பண்பாடுகள் நிறைந்த சமூகநிலை முதலியவையே அதற்குக் காரணம். இங்கே பாடசாலைகளில் கல்வி கற்று ஆலயங்களின் சூழலில் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வளர்ந்தவன். இன்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தொண்டில் இணையவும் இச்சிவபூமியில் கற்றவையும் இப்பூமி வாழ்வும் தான் வழிவகுத்தன. அன்று சோழகக்காற்றின் இன்பத்தை அனுபவித்தவன் இன்று பெரும் அரசியல் சூறாவளி அடிக்கும் சூழ்நிலையில் வந்திருக்கிறேன்.

யாழ் மண்ணில் நிலவும் பெருங்குறையை யாழ் மண்ணின் மைந்தன் என்ற உரிமையுடன் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அகங்காரம் எல்லோரின் தலையிலும் தலை தூக்கியாக்குகின்றது. அதற்கு இன்றைய அரசியலும் காரணமோ என்று கூடத் தோன்றுகின்றது. அரசியல் தலைவர்கள் அகங்காரத்தைத் துறந்து பண்புடன் சகோதர உணர்வுடன் வாழவேண்டும். அது இப்பூமிவாழ் மக்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

உண்மையான ஆன்மீக வாழ்வில் வளர்ந்தவர்களே எமது சமுதாயத்தை வழிநடத்த முன்வரவேண்டும். எனக்கே எல்லாம் தெரியும் நானே பெரிய மனிதன் என்ற அகங்காரக்கும்பல் மறையவேண்டும். எமது மக்களை குறிப்பாக இளைய சமுதாயத்தை போதைவஸ்து, மது மற்றும் துர்ப்பழக்கங்களிலிருந்து காப்பாற்றவேண்டும். அது எங்கள் தலையாய கடமை.

**எல்லோரும் ஒன்று திரள்வோமாக**

அறுபதாவது ஆண்டு பூர்த்தி சமயமும் வெறும் விழாக்கள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து இந்து மக்களுக்கு நன்மைதரும் வழியில் பல்கலைக்கழகம் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த கல்விமான்களின் ஆதரவுடன் யாழ். நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இந்து ஆராய்ச்சி மாநாடு நடத்துகின்றோம். எழுபதிற்குமேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன. இவற்றை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி எமது அறுபதாவது ஆண்டு நிறைவு மலர் தொகுப்பாக வெளியிட இருக்கின்றோம். இதேபாணியில் கிழக்கு மாகாணத்தில் ஓர் ஆராய்ச்சி மாநாட்டை டிசம்பரிலும், அடுத்த ஜனவரியில் கொழும்பில் சர்வதேச மட்டத்தில் ஒரு மாநாட்டையும் நடத்த இருக்கின்றோம்.

இந்நாட்டு தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினர் இந்து மக்கள். வடக்கு, கிழக்கு, மலையகம் வேறு பிரதேசம் என்ற வேறுபாடின்றி நாங்கள் எல்லோரும் ஒன்று திரள வேண்டும் இந்து மக்களும் எல்லோரும் மாமன்றத்துடன் இணைந்து செயலாற்ற வருமாறு நேசக்கரம் நீட்டி உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி நிறைவுசெய்கிறேன்.

**(யாழ்ப்பாணத்தில் நடந்த மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வின்போது, தலைமை வகித்த மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் ஆற்றிய உரை)**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**ஆலயங்கள்**

இன்று ஈழத்தில் மட்டுமல்ல ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த எமது மக்கள் வாழும் நாடுகளிலும் எமது சமயத்தையும் ஆன்மீக உணர்வையும் வாழ வைத்துக் கொண்டிருப்பவை ஆலயங்களே. எமது நாட்டில் ஆண்டாண்டு காலமாக கட்டப்பட்ட எமது இந்து ஆலயங்கள் பல அழிக்கப்பட்டிருக்கின்றன, சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. திருமந்திரத்தில் திருமூலர் சொன்ன புனித வரியினை உதாசீனப்படுத்தி எம்மை ஆளவந்த அரசுகள், அரசுகளின் ஆதரவுடன் இயங்கிய இராணுவப்படைகளும் இதற்கு பொறுப்பு. மீண்டும் மீண்டும் இடித்து இடித்து மாமன்றம் எடுத்துக்கூறியும் இத்தெய்வீகத் துரோகச் செயல்கள் எடுத்துச் செய்யப்பட்டன. அரசன் அன்று அறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். அழிந்த, சேதப்படுத்தப்பட்ட இன்னும் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய ஆலயங்கள் உடனடியாக புனருத்தாரணம் செய்யப்பட்டு ஒழுங்காகப் பூசைகள் நடத்த வழிவகுக்க வேண்டும். பெரும் கோபுரங்களை ஒரு சில செல்வந்தர்கள் தங்களின் பாரம்பரிய சொத்து என்ற வரிசையில் பலகோடிகள் செலவு செய்து கட்டுவதிலும் பார்க்க, சகல கிராமங்களிலும் ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு பூசைகள் நடத்தப்படவேண்டும். நான் சிறிய வயதில் தரிசித்த தில்லையம்பலம் கோவில் போன்றவையைக் குறிப்பிடலாம்.

**சிவாச்சாரியார்கள்**

ஆலயங்களில் பூசை செய்யப் போதிய சிவாச்சாரியார்கள் இல்லாதது ஒரு பெரும் குறை. இந்த மாநாட்டின் சில அமர்வுகளில் இந்தக் குறைபற்றி எடுத்துக்கூறப்பட்டது. சிவாச்சாரியார்கள் சமய அறிவும் கிரியா விதிகள் தெரிந்தவர்களாகவும் இருக்கவேண்டும் என்றும் பலர் வற்புறுத்தினர். இங்கு கௌரவிக்கப்பட இருக்கும் சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள் நடத்தும் இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் சிறப்பாக நடாத்தப்பட ஒரு காணியைப் பெற்றுத்தர மன்றத்திடம் வேண்டுகோள் தந்திருக்கிறார். அதனைச் சாதகமாக ஆதரித்து முகாமைப்

பேரவையின் அங்கீகாரத்தை கோரவிரும்புகிறேன். இக் குருகுலத்திற்கு வடமாகாண முதலமைச்சர் ஆதரவு தர ஒத்துக் கொண்டிருக்கிறார். இந்து கலாசார அமைச்சரும் உதவவேண்டும்.

சிவாச்சாரியர்களுக்கு போதிய வேதனம் கிடைப்பதில்லை என்ற குறைபாடும் பல இடங்களில் தெரிவிக்கப்படுகின்றன. அவர்களுக்குக் கிடைக்கும் காணிக்கைகள் போதாதா? என்று சிலர் கேட்கின்றனர். ஆனால் அப்படியான காணிக்கைகள் கணிசமான அளவில் கிடைப்பதும் அரிது. எனினும் நான் சொல்லும் ஒரு கருத்து, அந்தக் கருத்து பிரச்சனையை எழுப்பலாம். என்றாலும் மாமன்றத் தலைவராக அல்ல ஒரு தனிப்பட்ட முறையில் மனதில் படுவதை சொல்ல விரும்புகிறேன். சிவாச்சாரியர்கள் பூசகர்கள் முறைகளில் மாற்றம் செய்யக் கூடாதா? சைவாகம முறைப்படி புனித முறையில் வாழ்பவர்கள் அதுவும் துறவிகளாகி வாழ்ந்த யாராய் இருப்பவர்களைக் கொண்ட ஒரு சிவாச்சாரியார் பரம்பரை பிறக்க வழி வகுக்க கூடாது. இராமகிருஷ்ணமிஷன் துறவிகள் போன்று பூசகர் துறவிகள் உருவாக்கப்படக் கூடாது. லௌகீக வாழ்வில் சிவாச்சாரியர்கள் இருப்பதாலும் அவர்களின் குடும்பத் தேவைகளில் அவர்கள் கூடக் கவனம் செலுத்துவதாலும் நவீன வசதிகளையும் தம் குடும்பத்தினருக்கு கொடுக்கும் அவாவில் அவர்கள் தங்களுக்கு வருமானம் போதாது என்ற மனக்குறை ஏற்படுகிறது. ஆண்டவனுக்கு பூசை செய்வதிற்கு தேவையான மனப்பக்குவத்தை அது பாதிக்கவில்லையா? சிவாச்சாரியர்களும் ஆலய முகாமைத்துவ அறங் காவலர்களும் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீக பீடமும் மற்றும் சமய அறிஞர்களும் கல்விமான்களும் ஆராய்ந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதே எனது விருப்பமும் வேண்டுகோளுமாகும்

சிவாச்சாரியர்கள் குருகுலப் பயிற்சிநெறி மூலம் தங்கள் அறிவை வளர்க்க திட்டங்கள் தீட்டுங்கள். அந்தத் திட்டத்திற்கு நாங்கள் என்றும் ஆதரவு தருவோம்.

**மூடநம்பிக்கைகள்**

பலியிடல், பேய், பிசாசு என்ற பல மூடநம்பிக்கைகள் எமது மதத்தின் பெருமைக்கு இழிவை ஏற்படுத்துகின்றன.

பலியிடல் எமது மதத்திற்கு முரண்பட்டது என்பது இம்மாநாட்டின் அமர்வுகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டின. இப்படியான மூடநம்பிக்கைகளுக்கு சாவுமணி அடிக்கப்படவேண்டும்.

பலியிடல் சம்பந்தமாக எங்களுக்கு பெரும்பாலும் அத்தீயசெயல் நடக்க ஒரு சில நாட்களுக்கு முன் தான் தெரியவருகின்றது. கடைசிநேரத்தில் கண்டன அறிக்கைகளை விடுப்பதற்கும், நிறுத்துமாறு வேண்டுகோளை விடுக்கவும் போதிய அவகாசம் கிடைப்பதில்லை. யாழ் மண்ணில் அந்தக் கொடுமை அடுத்து நடக்கவிருந்தால் விபரங்களை நேரத்துடன் எங்களுக்கு அறியத் தாருங்கள், உடன் நடவடிக்கை எடுப்போம்.

**இந்து அறக்கட்டளைக் கூட்டம்**

இப்படியான சட்டம் ஒன்றை நிறைவேற்றுவது நல்லது என வடமாகாண முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அப்படியான நகல் ஒன்று திரு.கனகஈஸ்வரன் தலைமையில் நாங்கள் தயாரித்தோம். ஆனால் அதை மத்திய அரசுச் சட்டமாக உருவாக்கப்பட பொது மக்கள் விரும்பவில்லை. வடமாகாணசபைக்கு அப்படியான சட்டம் இயற்ற அதிகாரம் இருக்கிறதா? என்று ஆய்வு செய்து, முடியுமானால் வடமாகாண ஊடாக அதனை முன்னெடுப்பதற்கு வழிசெய்வோம்

**ஊடகம்**

ஊடகம் மக்களை இன்று வழிகாட்டும் ஒரு முக்கிய கருவியாகிவிட்டது. பகலும் இரவும் தொடர் நாடகங்களை ஒலிபரப்பி ஏதோ எமது சமுதாயத்தில் நடப்பது கற்பழிப்பும் கொலையும் என உணர்ச்சிகளைக் கிளப்பும் காட்சிகளை வர்த்தக நோக்கத்துடன் செய்கின்றன. எமது பாரம்பரியமும் பண்பாடும் காப்பாற்ற வேண்டுமென்றால் இவை நிறுத்தப்படவேண்டும். அதற்காகத் தயங்காது போராடத் தயாராக இருக்கிறோம். எமது இளம் சமுதாயத்தை காப்பாற்றுவதற்கு இது இன்றியமையாதது.

**பண்பாடு**

எமது பண்பாடு எமது மண்ணில் காப்பாற்றப்படவேண்டும். தாய்மார்களே, இளம்பெண்களே மது விற்கும் நிலையங்களை மூட வேண்டும் என்று போராட்டம் நடத்துங்கள். போதைப் பொருட்களை இளம் சமுதாயம் பாவிக்காது கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களின் கணவன்மார்களையும், பிள்ளைகளையும் கவனியுங்கள். இதில் ஆசிரிய சமுதாயத்திற்கும் பங்கு உண்டு என அனுபவத்திலிருந்து கூறுகிறேன்.

**இளைஞர்கள்**

இளைஞர்களின் தேவைகளை அதிகாரத்தில் இருப்பவர்களும், நாங்களும் நிறைவேற்ற வேண்டும். இளைஞர்களின் ஆன்மீக அறிவை ஆன்மீக உணர்வை வளர்த்து ஆன்மீகப்பாதையில் ஈடுபடுத்தவேண்டும். சிவதொண்டர் அணிகளில் எல்லோரும் சேர்ந்து நல்ல பாதையில் முன்னேறுங்கள்.

**பல்கலைக்கழகம்**

இம்மாநாட்டில் எமக்கு ஆக்கபூர்வமான ஆதரவைத் தந்த பல்கலைக்கழகக் கல்விமான்களே இந்த மாநாட்டைப் போன்று வேறும் பல திட்டங்களை நிறைவேற்றி கைகோர்த்து பணியாற்றுகிறோம். நவம்பர் 6, 7, 8 ஆம் திகதிகளில் பல்கலைக்கழகம் நடாத்தும் சர்வதேச சைவ மாநாட்டிற்கு நாங்கள் எம்மாலான சகல உதவிகளையும் தருவோம்.

உங்கள் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து மாமன்றம் சைவசித்தாந்தத்தில் டிப்ளோமா பயிற்சியை நடத்தலாம் என உங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு சந்திரசேகரம் கூறினார்கள். திட்டத்தை தாருங்கள் நாங்கள் உங்களுக்கு பூரண ஆதரவு தருகிறோம்.

இந்து நாகரீகத்துறையில் ஏன் சைவ சித்தாந்த பீடப்பேராசிரியரை நியமிக்கவில்லை. அமரர் டாக்டர் விஸ்வலிங்கம் இதற்கு பெரும் சொத்தைத் தந்து மறைந்து விட்டார். ஏன் இன்னும் நியமிக்கவில்லை. இலங்கையில் பொருத்தமானவர் இல்லாவிடில் இந்தியாவிலிருந்து ஒருவரைக் கொண்டு வரலாம். தருமபுர ஆதீனத்தை கேளுங்கள்.

**(யாழ் இந்து ஆராய்ச்சி மாநாடு நிறைவு நிகழ்வின்போது, தலைமை வகித்த மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் ஆற்றிய உரையிலிருந்து)**

# கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் கடமைகள்

## (மாமன்ற அனுபவங்கள்)



*மா. கணபதிப்பிள்ளை*
தலைவர், கல்விக்குழு, அகில இலங்கை இந்து மாமன்றம்

**அறிமுகம் :**

கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரை தமிழர் மரபில் கோவில்கள்தான் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. ஒரு நிறுவன மயப்படுத்தப்படாத வகையில் அத்தகைய முயற்சிகள் காணப்பட்டன. இலங்கையில் நாயன்மார்களால் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்று அருணகிரிநாதரின் திருப்புகழால் உயர்ந்த கதிர்காமம் போன்றவை கூட ஆரம்ப காலத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்கள் வரலாற்றுக் குறிப்புக்களை இழந்தது போன்று கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்களிப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் பலவற்றையும் இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். சிங்களவர்களின் மகாவம்சம், தீப வம்சம், சூழ வம்சம் போன்ற எந்த நூல்களுமே வரலாற்று நூல்கள் அல்ல. ஆனால் அவற்றிலுள்ள பல குறிப்புக்கள் இன்று வரலாற்று ஆதாரத்திற்கு அடிப்படையாகி விட்டது. இத்தகைய முயற்சிகள் எம்மிடம் ஏன் அருகியிருந்தன என்பது பற்றி ஆராயப்படல் வேண்டும்.

**போர்த்துக்கேயர் காலம் :**

ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட சைவக் கோயில்கள் எல்லாவற்றையும் போர்த்துக்கேயர் தரைமட்டம் ஆக்கினர். கத்தோலிக்க மேலாதிக்கத்தால் மதம் மாறியோர் தப்பிப்பிழைக்க சைவசமயம் சார்ந்தோர் தாம் சாப்பிட்ட தட்டுவத்தைக் கூட வெளியே எறிய முடியாத நிலையில் இருந்தனர். சைவ நூல்கள், கோயில்கள் பற்றிய சிந்தனை தமிழரிடம் வளரக் கூடாது என்பதில் போர்த்துக்கேயர் மிகக் கவனமாக அவதானத்துடன் செயற்பட்டனர். இத்தகைய நெருக்கடியிலும் இடிக்கப்பட்ட கோயில்களில் இருந்த கடவுள் உருவங்களை பேணிப்பாதுகாத்து மதம் மாறாப் பண்புடன், ஆட்சியாளருக்கு அடங்காத உணர்வுடன் செயற்பட்ட பலர் எம்மை நாமாக்கித் தந்த பெருமைக்குரியவர்கள் ஆவார்கள்.

**ஒல்லாந்தர் காலம் :**

இவர்கள் காலத்தில் விதிக்கப்பட்ட சட்டங்கள் காரணமாகவும், கட்டுப்பாடுகள் காரணமாகவும் பொது வழிபாடுகள் நடைபெறாது ஒழிந்தன என “ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக்கொள்கை” என்ற கட்டுரையில் க.அருமைநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஒல்லாந்தரின் இறுதிக்காலத்தில் நெகிழ்வுத் தன்மையை பயன்படுத்தி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் (1782), நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் (1782), வண்ணைச் சிவன் கோவில் (1787), நல்லூர் கந்தசுவாமி கோவில் (1793) வேலைகள் ஆரம்பமாகின. மட்டக்களப்பு, திருகோணமலை கோவில்கள் வரலாறும் பெரும்பாலும் இதையொத்தே அமைந்திருந்தது.

**ஆங்கிலேயர் காலம் :**

இவர்கள் சமய சுவாதீன கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதனால் போலிக் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை திடீரென வீழ்ச்சியடைந்தது. 1802 இல் யாழ்ப்பாணத்தில் 1,36,000 கிறிஸ்தவர்கள் இருந்தனர். 1806 இல் (Buchanam) உக்கனம் அவர்கள் இலங்கை வந்தபோது யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து மதத்தைச் சார்ந்தோர் யாரும் இருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் 34 கிறிஸ்தவ தேவாலயங்களும் யாழ்ப்பாணத்தில் 1814 இல் 324 சைவக்கோயில்களும் காணப்பட்டன. இவ்வாறு கட்டப்பட்ட கோவில்களில் ஒரு நிறுவனத்தன்மை காணப்பட்டதா என்றால் “இல்லை” என்றே விடை கிடைக்கிறது. உயர் வேளாளர் கோவில்களுக்கு தாழ்ந்த சாதியினர் போக முடியாமையினால் ஒவ்வொரு சாதியினரும் தமக்கு சாதகமான கோவில்களைக் கட்டினர். அத்துடன் காலத்துக்கு ஒவ்வாத கோவில் வழிபாடும், கொண்டாட்டங்களும், தேவதாசி நடனங்களும் இடம்பெற்றதால் சைவ மத பக்தி இயல்புகள் கொச்சைப்படுத்தப்பட்டன. சிற்றின்ப பொருளே உண்மைப்பொருள் என விளக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திய கிறிஸ்தவர்கள், வெஸ்லியன் மிஷன் (1814), அமெரிக்க மிஷன் (1816), சேர்ச் மிஷன் (1818) போன்ற திருச்சபையினர் மதமாற்றம் செய்தனர். அத்துடன் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. ஆங்கிலக் கல்வி பெறுவதற்காக சைவர்கள் மதம்மாறினார்கள். அரசாங்க உத்தியோகம் என்ற மோகத்தால் ஆங்கிலக் கல்வியும் மதமாற்றமும் யாழ்ப்பாணத்திலே இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன.

இந்த நேரத்தில் கிறிஸ்தவ மத முன்னேற்றத்தைத் தடுத்து அரண் போட சைவர்கள் மத்தியில் எந்தவித தாபன அமைப்புகளும் காணப்படவில்லை. பௌத்த மக்கள் மத்தியில் இயங்கிய பிரிவேனாக்கள் போல அல்லது தென்னிந்தியாவில் இயங்கிய ஆதீனங்கள் போன்ற தாபன அமைப்புக்களைக் காண முடியவில்லை.

**சமய விழிப்புணர்வு :**

நல்லை நகர் ஆறுமுக நாவலர் அவர்களின் காலத்தில் தான் ஒரு பாரிய சைவ சமய எழுச்சியை அவதானிக்கலாம். வண்ணார்பண்ணையில் இருந்த சமய எழுச்சியை நாவலர் பயன்படுத்தி மாபெரும் அதிர்வு ஒன்றை அங்கு ஏற்படுத்தினார். நாவலர் பெருமான் வெஸ்லியன் பாடசாலையில் கல்வி கற்றதுடன் ஆசிரியராகவும் இருந்ததுடன் பேர்சிவல் பாதிரியாருடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாக வேத விவிலியத்தை மொழிபெயர்ப்பு செய்தார். இந்த அனுபவங்களால் கிறிஸ்தவ சமயம் பற்றியும் அதன் முயற்சிகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். கிறிஸ்தவர் கையாண்ட முறைகளைப் பின்பற்றி சைவத்தை வளர்ப்பதற்கு முயற்சி

செய்தார். அந்த அடிப்படையில் பிரசங்க முறை வசன ரூபத்தில் அமைந்த வினாவிடைகள், பாலர் பாடம், இலக்கணச் சுருக்கம், வசன நூல்கள், துண்டுப்பிரசுரங்கள், பாடசாலைகளின் சமய முறைமைகள் பற்றி ஒரு ஸ்தாபன முறை வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

1848 களில் பல்வேறு தலைப்புகளில் நாவலராலும், கார்த்திகேய ஐயராலும் செய்யப்பட்ட 29 பிரசங்கங்கள் கிறிஸ்தவ பாதிரிகளையும், போலிச் சைவர்களையும் எள்ளி நகையாடியது. இவர்கள் பேசும் போது காடன், மாடன், காட்டேறி, கருப்பன் என்ற வழிபாடுகள் சிவ வழிபாடுகள் அல்ல என்றும், எமது முழுமுதற் கடவுள் சிவனே என்றும் முறையாக விளங்கப்படுத்தியதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் அத்தகைய கிராமிய தெய்வங்களின் வழிபாடுகள் அற்றுப்போயின.

கிறிஸ்தவர்கள் மும்மூர்த்தி லட்சணம், குருட்டு வழி என்ற துண்டுப் பிரசுரத்தால் அருவருப்பான மொழியால் சைவத்தைக் கொச்சைப்படுத்தினார்கள். அதற்கு எதிராக சைவத்தூஷண பரிகாரம், சுப்பிர போதம் போன்ற மறுப்புரைகளால் நாவலர் காலத்தில் எமது மதம் எழுச்சி பெறத் தொடங்கியது. அங்கேதான் ஒரு ஸ்தாபன முறையில் எமது மதத்துக்கான வளர்ச்சிப் போக்கை அவதானிக்கலாம்.

**சமயக் கல்வி :**

சைவ சமயச் சூழலில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமானது. 1834 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 239 சைவப் பாடசாலைகள் காணப்பட்டன. அவற்றில் பல பின்னர் கிறிஸ்தவப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன.

1842 இல் வைத்திலிங்கம் செட்டியார், முத்துவேலுச் செட்டியார், சிறாப்பர் குருநாத முதலியார், இரகுநாத முதலியார் போன்ற உயர்குழாத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கூடி 1842 ஐப்பசி 22 இல் திறக்கப்பட்ட பாடசாலை முக்கியமானது. இக்காலத்தில் தோன்றிய சைவக் கல்வி இயக்கம் ஆறுமுகநாவலரின் தீவிர அக்கறையால் உத்வேகம் அடைந்தது. 1840 இல் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து நாவலரதும் அவரது அணியினரதும் முயற்சியால் இணுவில், கந்தர்மடம், கோப்பாய், புலோலியில் தமிழ் பாடசாலைகள் தோன்றின. இந்தியாவில் குறிப்பாக சிதம்பரம் போன்ற இடங்களில் சைவமும் தமிழும் வீழ்ச்சியடைந்திருந்ததைக் கண்டு ஆறுமுகநாவலர் அங்கும் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். பிறர் ஈனநிலை கண்டு பொங்கும் மனத்தினனாய் சைவர்களின் உயர்நிலைக்காக அயராது உழைத்தவர் எங்கள் நாவலர் பெருமான்.

நாவலர் மறைவுக்குப் பின் கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்கு எதிராக "சைவப்பிரகாச சமாஜம்" உருவாக்கப்பட்டது. "உதயபானு" பத்திரிகையின் வரவால் சைவமத கோரிக்கைகள் வலுவடைந்தது. 1858 இல் சைவ பரிபாலன சபையின் தோற்றம் ஈழச் சைவசமய வளர்ச்சியில் மற்றுமோர் மைல் கல்லாக அமைந்தது. சைவ பரிபாலன சபையினர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், மாதகல் சு. ஏரம்பையர், இன்னும் பலரையும் இணைத்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு நோக்கி சைவப் பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டன. அத்துடன் இவர்கள் இந்து சாதனம் என்ற பத்திரிகையையும் வெளியிட்டனர்.

1893 இல் நியாயவாதி நாகலிங்கம் அவர்களும், சி. த. மு. பசுபதிச் செட்டியாரும் இந்து உயர்தர பாடசாலையை உருவாக்கினார். ஆண்களினுடைய கல்வி அபிவிருத்தியைப்போல பெண்களின் கல்வி வளர்ச்சிக்காக சேர். பொன். இராமநாதன் மருதனார் மடம் இராமநாதன் பெண்கள் பாடசாலையை திறந்து சைவ மகளிர் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றினார்.

1916 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது ஆசிரிய கல்விக்கு பாரிய பங்களிப்பை நல்கியது. சைவ மறுமலர்ச்சிக்கும், நாவலரின் பணிகளுக்கும் அப்போது வடமாகாண அரசாங்க அதிபராக இருந்த சேர். துவைணம் என்றும் தடையாகவே இருந்தார். இத்தகைய எல்லாத் தடைமுயற்சிகளையும் முறியடித்து 1893 இல் சி. த. மு. பசுபதிச் செட்டியார் அவர்கள்தான் சேதமடைந்திருந்த திருக்கேதீஸ்வரத்தை புதுப்பித்தார். இத்தகைய செயல்கள் யாவும் நாவலர் பெருமானின் கல்வி மறுமலர்ச்சிக்கான சமய நிறுவனங்களின் கடமையாக அமைந்தன.

1897 இல் சுவாமி விவேகானந்தர் தன்னுடைய சிக்காக்கோ உரையை முடித்துக் கொண்டு ஈழத்துக்கு வருகை தந்தமை சைவர்களையும் இந்துக்களையும் மேலும் சமயத்தில் அக்கறை காட்ட தூண்டியது. நாவலருக்குப் பின் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், காசிவாசி செந்திநாதையர், நீர்வேலி சிவசங்கரப் பண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் "இந்து சாசனம், இலங்கை நேசன்" பத்திரிகைகள் ஊடாக கிறிஸ்தவ மத கண்டனங்களையும் பிரசங்கங்களையும் வெளியிட்டனர். இது ஒரு அணி சேர்ந்த நடவடிக்கையாக காணப்பட்டது.

இக்காலத்தில் செட்டிமாரின் பங்களிப்பு சைவசமய மறுமலர்ச்சியில் மறக்கமுடியாதது. அதைத் தொடர்ந்து இந்து போட் இராஜரட்ணம் அவர்களது சைவ சமய அக்கறையும் கல்வி முயற்சிகளும் பாராட்டப்படவேண்டியவை. கிராமம் எங்கும் அரச கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு எதிராக சைவ பாடசாலைகள் அமைப்பு முக்கியமான நடவடிக்கையாகும். அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்து பண்டிதர்களை கொண்டு வந்து உடப்பு,குசலை ஆகிய வடமேல் மாகாணத்தில் உள்ள கிராமங்களிலும் தமிழும் சைவமும் அழிந்துவிடாது பாதகாத்த பெருமை அவரையே சாரும். இந்துபோட் இராஜரட்ணம் அவர்கள் கல்வி வளர்ச்சியில் ஒரு சமய நிறுவனக் கட்டமைப்புடன் செயற்பட்டவர் ஆவார்.

சைவ மறுமலர்ச்சியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் பங்கும், பணியும், வகிபாகமும் முக்கியம் வாய்ந்தது. 20 ஆம் நூற்றாண்டில் மில்க்வைட் கனகராஜா போன்றவர்களுடைய சைவசமய எழுச்சி நடவடிக்கைகள் துண்டுப்பிரசுரங்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றியவை.

**அகில இலங்கை இந்து மாமன்றம் :**

இந்த அடிப்படையிலேதான் தலைநகரில் வாழ்ந்த தமிழர்கள் ஐக்கியப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தை 1955 இல் நிறுவினர். மாமன்றத்தின் வகிபாகத்தை நோக்கின் சைவர்களிடமும், இந்துக்களிடமும் ஒரு ஐக்கியப்பட்ட ஒன்றியம் காணப்படவில்லை. தனித்தனிக் கோவில்கள், குழுக்கள் என்ற வகையில் காணப்பட்ட நிலையை மாற்றி இந்து அமைப்புக்களின் ஒன்றியமாக இந்து மாமன்றம் உருப்பெறுவதை அவதானிக்கலாம்.

கடந்த அறுபது ஆண்டுகளில் மன்றம் கடந்து வந்த பாதையில் பல சமூகநலத் திட்டங்களை முன்வைத்துள்ளதை நாம் அவதானிக்கலாம். சமய

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

# நாட்டார் மரபில் மாரியம்மன் வழிபாடு
## (மலையகப் பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)

நாட்டுப்புற வழிபாட்டில் பெண்தெய்வ வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வழிபாட்டில் தாய்த்தெய்வ வழிபாடே முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வழிபாட்டினை நோக்குமிடத்து தாய்வழிச் சமுதாயத்தின் வளர்ச்சி நிலையைக் காணக்கூடியதாயுள்ளது. இலங்கையின் தோட்டப்புறங்களை நோக்குமிடத்து, இவ்வழிபாடானது மிகவும் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகிறது. தோட்டப் புறங்களில் பெண் தெய்வ வழிபாட்டில் மாரியம்மன் வழிபாடே சிறப்புப் பெற்று விளங்குகிறது. மலையகத்தின் பெரும்பாலான தோட்டங்களில் குறைந்தபட்சம் எட்டு நாளாவது மாரியம்மன் வழிபாடு நடைபெறுவது வழக்கமாயுள்ளது. தோட்டப்புறக் கோயில்களில் மாசி, பங்குனி மாதங்களிலேயே மாரியம்மனுக்கு திருவிழா நடைபெறுகின்றது.

தோட்ட மக்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த காலம் தொடக்கம் இன்றுவரை இவ்வழிபாட்டினையே தம் முதன்மையான வழிபாடாகக் கொண்டுள்ளனர். இவ்வழிபாடானது மலையகத்தைப் பொறுத்த வரையில் காரணகாரிய வழிபாடாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நுவர — எலிய மாவட்டத்தில் மட்டும் நூற்றித்தொண்ணூற்று ஏழு மாரியம்மன் தோட்டக் கோயில்கள் அமைந்துள்ளன.

*கலாநிதி (திருமதி) சோதிமலர் ரவீந்திரன்*
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

நிறுவனம் என்பது சமயப் பணிகளோடு நிற்றல் ஆகாது. மாறாக சமூகப் பணிகளிலும் ஈடுபடவேண்டும் என்ற அடிப்படையில் எங்கே சமூக நலனோம்பு திட்டங்கள் தேவைப்பட்டனவோ அங்கெல்லாம் இந்து மாமன்றத்தின் செயற்குழுவினர் முன்னின்று உழைத்தனர். 1977, 1983 இன வன்செயல் காலத்தில் இந்து மாமன்ற உறுப்பினர்கள் நலன்புரி நிலையங்களில் தமிழர்களுக்கு ஆற்றிய சேவைகள் மிக முக்கியமானவை. வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை போன்றோர் மக்கள் நலனோம்பலில் அக்கறையுடன் மாமன்ற அணியோடு சேவையாற்றியமை பாராட்டப்படுகிறது. அதேபோல சுனாமி இயற்கை அனர்த்தத்திலும் மாமன்றத்தின் சேவைகள் செயற்பாடுகள் அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டது. எங்கே துயருடன் மக்கள் காணப்படுகின்றார்களோ அங்கே இனம், மதம், மொழி கடந்து ஓடிச்சென்று சேவையாற்றும் பாங்கு எல்லோராலும் பாரா்ட்டப்படுகிறது.

**இந்து மாமன்ற தலைமைச் செயலகம் :**

இந்து மாமன்ற தலைமைச் செயலகம் கொழும்பில் ஐந்து மாடிக் கட்டடங்களுடன் சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அமைந்திருக்கிறது. இன்றைய நம்மவர்களை நாம் ஆக்குவதற்காக 60 ஆண்டுகளுக்கு முன்னர் மிகச் சிறந்த தூரநோக்கோடு அல்லும் பகலும் அன்று தொட்டு இன்றுரை அயராது உழைக்கின்ற இந்து மாமன்ற செயற்குழுவைப் பாராட்டப்பட வேண்டியது அவசியம். இந்து மக்களுக்கு என்று ஒரு செயலகம் தலைநகரத்தில் தலைநிமிர்ந்து நிற்பது ஒட்டுமொத்த இந்துக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

**சட்ட ஆலோசனை :**

கோவில்களில் பிரச்சனைகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் வல்லமை இந்து மாமன்றத்திடம் காணப்படுகிறது. சட்ட ஆலோசனைகளை வழங்கி தேவையற்ற செலவீனங்களைக் குறைத்து மனித நேயத்துடன் கோவில்கள் செயற்பட ஆலோசனை வழங்குகின்றனர்.

**சமூக நலக்குழு :**

வறுமையினால் வாடி நிற்கும் கிராமங்களுக்குச் சென்று வறுமை ஒழிப்புக்கு அக்கறையுடன் நடவடிக்கை எடுக்கின்றனர். 2009இல் யுத்தம் முடிவடைந்ததன் பின் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள பாரிய பிரச்சனைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துள்ளனர். ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற அடிப்படையில் அவர்கள் பணி தொடா்கிறது.

**கல்விக்குழு :**

தாழ்நிலையில் உள்ள பாடசாலைகளின் கல்வி நிலையில் கல்விக்குழு அக்கறை காட்டுகிறது. அவர்களின் பணி மூன்று அடிப்படையில் நோக்கத்தக்கது.

**1. க.பொ.த சாதாரண தரம்**

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் சைவ சமய அறிவு மட்டுமல்ல ஏனைய பாடங்களில் பின் தங்கியிருக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நல்லாசிரியர்களால் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்களின் மன உழைச்சல்கள் போன்றவற்றுக்கு ஆலோசனையும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகிறது.

**2. க.பொ.த. உயர்தரம்**

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இந்து நாகரிக பாடத்தில் அகில இலங்கை ரீதியாக கருத்தரங்குகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்து நாகரிகம் என்ற பெறுமதிமிக்க நூல் பாடத்திட்டத்துக்கு ஏற்புடைய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தப் புத்தகம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாடப்புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை இந்துநாகரிக பாடத்துறை ஆசிரியர்கள், மாணவர்கள், விரிவுரையாளர்கள் பாராட்டுகிறார்கள். இப்பணியை செவ்வையாக மேற்கொண்ட இந்து மாமன்ற கல்விக்குழுச் செயலாளர் த. மனோகரன் பாராட்டுக்குரியவர்.

**3. ஆசிரியர் கல்வி**

இந்து சமய பாட ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளை ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. சமயபாடக் கற்பித்தலில் காணப்படுகின்ற குறைபாடுகள் ஆராயப்பட்டு ஆசிரியர்களுக்கு சிறப்பான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுகிறது. நாடு பரந்த ரீதியாக சைவமும் இந்து நாகரிகமும் கற்பிக்கக் கூடியவர்களுக்கு இக்கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துவதில் அக்கறை உடன் உள்ளனர். அத்துடன் க.பொ.த உயர்தரத்தில் இந்து சமயம் என்ற பாடத்திற்கு உரிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஒரு நூலை உருவாக்குவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு பாடத்திட்டத்தை தேசிய கல்வி நிறுவகம் வழங்கியபோதும் பாடத்திட்டத்திற்கு ஏற்புடைய நூல்கள் காணப்படவில்லை என்பதை அவதானித்து தூரநோக்குடன் இந்நூல்களை வெளியிட்டு வைப்பதானது கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் அத்தியாவசிய தேவையாகும். அத்தோடு இன்று மாணவர்கள் பல்வேறு கவனக் கலைப்பான்களால் சிதறுண்டு கிடக்கிறார்கள். அவர்களை அவர்களுடைய பாடசாலைகளுக்கு சென்று சமய பாட கருத்தரங்குகளின் ஊடாக நன்னெறிப்படுத்துவதும் சமய நிறுவனங்களின் தேவை ஆகும். அதைச் செவ்வனே செய்வதற்கு அயராது முயலும் இந்து மாமன்றத்தின் பணியும் பாங்கும் பாராட்டப்படவேண்டியவை.

**நூல்கள் :**

இந்து மக்களுக்கான ஒரு கையேடு, கட்டுரைச் சிறப்பு மலர், சிவவழிபாட்டு மலர், பொன்விழா மலர், இந்து நாகரிகம், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்து ஒளிச் சஞ்சிகை ஆகியவற்றுடன் மிகச் சிறப்பான நூல்கள் எனக் கருதிய வடமாகாண முதலமைச்சர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் அவர்களின் நூல், விழுமியக் கருத்துக்களை நம் நாட்டில் சொல்லிக் கொண்டு இருக்கக்கூடிய சோமசுந்தரம் ஐயாவின் சைவநற்சிந்தனைக் களஞ்சியம் மற்றும் வரலாற்று சம்பவங்களை சிறப்பாக ஆராயும் திரு. திருச்செல்வம் அவர்களின் நூல், அத்துடன் எமது முறையான பஞ்ச புராண ஓதலுக்கும் ஏனைய மாமன்ற செய்திகளுடன் தரமான கட்டுரைகளை தாங்கிவரும் ஆங்கிலத்தால் ஆன A Compendium for Hindus என்ற நூல் உலகெலாம் வாழும் எம் புலம் பெயர்ந்தவர்களை அடிப்படை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இத்தகைய் முயற்சிகள் கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் அத்தியாவசியக் கடமையாகும் என்பதை நன்குணர்ந்து இந்து மாமன்றம் மேற்கொண்டுள்ளது.

**ஆத்மீகச் சேவை :**

நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு மட்டுமல்ல மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட ஞானவைரவர் ஆலயம், கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள புனித யாத்திரிகர்கள் விடுதி, மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனை விநாயகர் ஆலயம், ஆலயடி வேம்பு இந்து மாமன்றம், யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்து மாமன்ற பிராந்திய நிலையம் என்பவை மாமன்றத்தின் பல்வேறு பணிகளில் சில குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் ஈழத்து சித்தர் யோகர் சுவாமி அவர்களின் ஐம்பதாவது ஆண்டு குருபூசை சிறப்பு ஊர்வலமும் மாநாடும், நாவலர் பெருமானின் சிறப்பு மாநாடுகள் மாமன்ற முன்னாள் தலைவர்களினதும் ஆளுமைகளினதும் நினைவுச் சொற்பொழிவுகள், காலத்தின் தேவை அறிந்து மாணவர்களினதும் மக்களினதும் மனப்பாங்கில் மாற்றத்தை தரக்கூடிய சைவ மாநாடுகள் என்பவற்றை நடாத்துவதுடன் அமெரிக்க ஆதீன பிதா தொண்டுநாத சுவாமிகள், இந்திய ஆதீனங்களைச் சார்ந்த சான்றோர்கள் போன்றவர்களை அழைத்து செய்யப்படும் அருளுரைகள், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சுவாமிகளின் நலனோம்பலில் காட்டும் அக்கறை போன்றவை காலத்தின் தேவை ஆகும். அது மாமன்றத்தின் சிறப்பான பணிகளுக்கு சான்றாதாரமாக அமைந்துள்ளது.

அகில உலக ரீதியாக பிரபல்யம் அடைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பணிகள் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எவ்வெவ் நாடுகளில் எல்லாம் இந்து சமயம் இருக்கின்றதோ அங்கெல்லாம் அகில இலங்கை இந்து மாமன்ற பணி பற்றி அறியவைக்கப்பட்டுள்ளது. இந்து மாமன்றத்தின் காப்பாளராக இருந்து பல்வேறு சமூக ஆத்மீக பணிகளில் ஈடுபட்டுள்ள மனிதநேய மாமனிதர் வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கும், மாமன்றத்தின் பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் உட்பட்ட நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும், முகாமைப் பேரவை உறுப்பினர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி சொல்லுவது அவசியமாகும். ஏனெனில் ஒரு நிறுவனத்தை மனிதநேய நிறுவனமாக ஆக்கி அந்நிறுவனத்தால் சைவத்தையும் தமிழையும் வாழவைக்கின்ற முயற்சி அளப்பரிய செயற்பாடாகும். எதிர்கால இலங்கையில் இந்துக்களின் இருப்புக்கான பலமுள்ள அத்திவாரமாக இந்து மாமன்றத்தின் கல்விச் செயற்பாடுகள் அமைந்துள்ளது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**உசாத்துணை நூல்கள் :**


1. அருமை நாயகம். க. "இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை" சிந்தனை மலர் 1 இதழ் 1
2. ஆறுமுக நாவலர். 1955 "பிரபந்தத்திரட்டு" கைலாசபிள்ளை பதிப்பு. சென்னை
3. கௌரிகாந்தன். மு. (2014) "வரலாற்றுச் சிந்தனை தடம்" குமரன் பதிப்பகம் கொழும்பு-6
4. தனஞ்சயராசசிங்கம். ச. (1969) "நாவலர் பணிகள்" நாவலர் சிவன்கோவில் பதிப்பு சென்னை
5. மனேகரன். த. (2007) "இந்து நாகரிகம்" பதிப்பு. யுனி ஆட்ஸ் நிறுவகம் கொழும்பு 13
6. Old Ceylon Hindu Congress (2015) 'A Compendium for Hindus' Unie Arts Ltd – Colombo – 13.


**(மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடந்த இந்து ஆராய்ச்சி மாநாட்டின் சமகால அமர்வின்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை)**

# மாமன்றத்தின் அனுதாபம்

## அமரர் சு. பொ. நடராஜா



இணுவில் அண்ணா தொழிலகத்தின் அதிபரும், சமூக சேவையாளருமான திரு. சு. பொ. நடராஜா அவர்களது மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகின்றது.

இவர் உள்ளூர் உற்பத்தி ஊடாக தொழில் வசதிகளை ஏற்படுத்தி, அதன்மூலம் ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியதன் மூலம், சமூகத்தில் ஆற்றிய பணி பெரிதும் போற்றுதற்குரியது. இதற்கும் மேலாக ஆன்மீக சமயப்பற்றுள்ளவராகத் திகழ்ந்ததுடன், தோத்திரப் பாடல்கள், சமய தத்துவங்கள் போன்றவைகள் அடங்கிய சிறு பிரசுரங்களை வெளியிட்டு இலவசமாக வழங்கியதன் மூலம் இந்து மக்கள் பெரும் பயன்பெறும் வகையில் உதவி வந்துள்ளார்.

அமரர் நடராஜா அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

## அமரர் கனகநாயகம் சண்முகநாயகம்



பிரபல ஆன்மீகத் தொண்டரும், சமூகப் பணியாளருமான திரு. கனகநாயகம் சண்முகநாதன் அவர்களது மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகின்றது.

வழக்கறிஞராகப் பணியாற்றிய இவர், பின்னாளில் பல சமய நிறுவனங்களுடன் இணைந்து பெரும்பணியாற்றியிருக்கிறார். பாரதத்திலிருந்து பல ஆன்மீக அறிஞர் பெருமக்களை இலங்கைக்கு அழைத்து வந்து, அதன் ஊடாகப் பலரும் பயன்பெறும் வகையில் இவர் மேற்கொண்ட செயற்பாடு பெரிதும் போற்றத்தக்கது.

இவர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் பலவகையிலும் உதவிவந்துள்ளார். அன்னாரின் மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

# மாமன்றச் செய்தி

## மாமன்றத்தில் நடந்த மூன்று நூல்களின் வெளியீடு

ஆசிரியர் கு. பாலசுப்பிரமணியம் அவர்களின் 25 ஆம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வும், இவரது நினைவாக மூன்று நூல்களின் வெளியீடும் கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியன்று மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமை தாங்கினார்.

ஆசிரியர் அமரர் கு. பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வர்களான சிவஸ்ரீ பால. வசந்தக்குருக்கள் (லண்டன்) எழுதிய "இந்துப் பண்பாட்டு மரபில் பிதிரர் வழிபாடு" என்ற நூலும், சிவஸ்ரீ பால. இந்திரக்குருக்கள் (அவுஸ்திரேலியா) எழுதிய "தத்துவ சிந்தனை மரபில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா", "மகோற்சவ கிரியா தத்துவ விளக்கம்" ஆகிய நூல்களும் நிகழ்வின்போது வெளியிடப்பட்டன.

சிவஸ்ரீ பால. இந்திரக்குருக்கள் முன்னர் மாமன்றத்தில் திட்ட மிடல் அலுவலராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வு

மாமன்றத்தின் ஏற்பாட்டில் ஆடி அமாவாசை தினமான கடந்த ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதியன்று கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

மாமன்றப் பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன், மாமன்ற உப தலைவரும், சமூகநலன் குழுத் தலைவருமான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, மாமன்ற உபதலைவரும், யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் உட்பட பலர் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

## தருமபுரம் ஆதீன குருமுதல்வருக்கு கொழும்பில் வரவேற்புபசாரம்

அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் நடத்திய இந்து ஆராய்ச்சி மாநாடு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்திருந்த தருமபுரம் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு, கடந்த ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று மாலை கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது.

கொழும்பு இந்து வித்தியாவிருத்திச் சங்கம், கொழும்பு இந்து மகளிர் மன்றம், கொழும்பு விவேகானந்த சபை மற்றும் இந்த நிறுவனங்களுடன் இணைந்து, அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த மேற்படி வரவேற்புபசாரம், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்றது.

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

## ஈழத்து பாடசாலைக் கல்வி முறையில் தற்போது சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்கள்.

ஈழத்தில் வாழும் நம் சைவத்தமிழ் மக்கள் தமது சமயத்தைச் சரியாகப் பின்பற்ற தம் சிறார்களான எதிர்காலச் சந்ததியினருக்குச் சரியான வழிகாட்டல்களை வீட்டில் ஏற்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து பாடசாலையில் சைவசமய பாடம் கற்றலுடன் சமய வாழ்வை வாழக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் ஒழுக்க விழுமியமுள்ள நல்ல பிரஜைகளாக இவர்களை ஆக்கமுடியும். இந்நிலையில் தற்போதைய காலத்தில் பல பிரச்சினைகளும் இடையூறுகளும் வந்துவிட்டன. வீட்டில் சைவசமய அனுட்டான வாழ்க்கை வாழ பல இடையூறுகள் காணப்படுகின்றன. பாடசாலையிலும் சைவசமய பாடத்தினூடாக சமய விழுமியங்களை விதைக்க பல தடைகள் உள்ளன. ஏனைய சமய பாடசாலைகள் தத்தம் சமயங்களுக்கே முன்னுரிமை வழங்கும் போது சைவசமயம் கற்பிக்கும் பாடசாலைகளில் இதற்கான ஏதுக்கள் தொடர்ச்சியாகக் குறைந்து வருகின்றன.

**திரு. பா. தனபாலன்**
உபபீடாதிபதி, நிதிநிர்வாகம்.
யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி
இராச வீதி, கோப்பாய்

# யாழ்ப்பாணத்தில் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாடு

அகில இலங்கை இந்து மாமன்றம், அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்திருந்த இந்து ஆராய்ச்சி மாநாடு மூன்று நாள் பெருவிழாவாக, கடந்த ஜுலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதிவரை யாழ் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. 'ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு' என்ற தொனிப்பொருளில் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அரங்கில் ஜுலை 31 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தானு. மகாதேவக் குருக்கள், சைவக்குருமார் ஒன்றிய முதல்வர் சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள், நல்லூர் சின்மயா மிஷன் வதிவிட ஆசாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கியிருந்தனர்.

நிகழ்வின்போது வடமாகாண முதலமைச்சர் சத்திய வித்தகர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்பதாக மாமன்ற யாழ் பணிமனையிலிருந்து பிரமுகர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்தவர்கள் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். ஊர்வலம் துர்க்கா மணிமண்டபத்தை வந்தடைந்ததும் மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனிதநேயமாமணி வி.கயிலாசபிள்ளை தம்பதியினரும், மாமன்ற பிரதித் தலைவர் திரு.மா.தவயோகராஜா தம்பதியினரும் மங்கள விளக்கேற்றி வைத்தனர். மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா நந்திக்கொடியை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பேராசிரியர் அ.சண்முகதாஸ் வரவேற்புரையையும், மாநாட்டின் நோக்கம் தொடர்பான அறிமுகவுரையையும் நிகழ்த்தினார். ஆசியுரைகள் வாழ்த்துரைகளைத் தொடர்ந்து மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி" மாநாட்டு சிறப்பு இதழ் வெளியீடு இடம்பெற்றது. யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு.ஐ.தயானந்தராஜா வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினரின் உரையைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக தகைசார் தமிழ்ப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், மாமன்ற உபதலைவரும் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். மாமன்ற பொதுச் செயலாளர் திரு. முத்தையா கதிர்காமநாதன் வழங்கிய நன்றியுரையுடன் ஆரம்பநாள் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இரண்டாம் நாளான ஆகஸ்ட் முதலாம் திகதி காலையும், மாலையும், மூன்றாம் நாளான ஆகஸ்ட் 2 ஆம் திகதி காலையும் மூன்று மண்டபங்களில் சமகால அமர்வுகள் இடம்பெற்றன.

*மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....*

## இலங்கையில் குருகுலக் கல்வி – ஒரு நோக்கு

இக்காலத்திலே வட மொழியறிவில்லாத தமிழறிவுடையோர் கூற்றுக்களை வித்துவான்கள் அங்கீகரிப்பது குறைவானதாலும், தமிழிலே நிரம்பிய புலமை வேண்டின் வடமொழிக் கல்வியறிவு அவசியம் என புலவர்கள் நன்கு உணர்ந்திருந்ததாலும், தக்க பாண்டித்தியமுடைய குருவிடம் வரன்முறையாகத் தமிழ் கற்ற பலர் தமது தமிழ் அறிவைச் செழுமைப்படுத்த வடமொழி கல்வியையும் கற்றனர். இவ்வாறு கற்ற தமிழறிஞர்களின் ஆளுமையில் வடமொழிக் கல்வி பலமான ஒரு பின்னணியாக இருந்து வந்துள்ளது.

உலகம் முழுக்க குருகுலக் கல்விமுறையே நெடுங்காலம் கல்விக்கான உகந்த வழிமுறையாக இருந்து வந்துள்ளது. கீழைநாடுகளில் குறிப்பாக கீழை ஆன்மீக அமைப்புகளில் குருகுலக்கல்வி அதன் உச்சநிலைநோக்கி எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வகுக்கும் இந்திய மரபு தெய்வத்துக்கு முதற்படியில் குருவையே வைக்கிறது. அதாவது மானுடரில் உயர்ந்தவர் குருவே. குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகாதேவன் என்ற பிரபலமான மந்திரம் குருவை 'ஆக்கிக்காத்தழிக்கும்' முத்தெய்வங்களும் ஒன்றானவன் என்கிறது. இதற்கு இணையான முக்கியத்துவம் ஜென் மரபிலும் இருப்பதைக் காணலாம். நாமறிந்த பெரும்பாலான ஜென் கதைகள் குருசீட உறவு குறித்தவையே.

*சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்*
தலைவர், இந்து குருமார் அமைப்பு
கொழும்பு

இதன்போது பல்கலைக்கழகம், ஆசிரிய கலாசாலை, கல்வியற் கல்லூரி மற்றும் பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்பித்து உரையாற்றினார்கள்.

இரண்டாம் நாள் (01.08.2015)மாலை 5.00மணிமுதல் சிறப்பு அமர்வு மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றிய தலைவர் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் தலைமையில் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது தருமபுர ஆதீன முதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களும், இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாடு நிறைவு நிகழ்வு மூன்றாம் நாளான ஆகஸ்ட் 2 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கில், மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு.வீ.கருணலிங்கம் நிகழ்த்திய வரவேற்புரையைத் தொடர்ந்து, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.


இந்த நிகழ்வின்போது மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு தே.ம.சுவாமிநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ் இந்திய உதவி உயர் ஸ்தானிகர் மாண்புமிகு ஆ.நடராஜன், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்கள். தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் மாமன்றத்தின் வெளியீடான திரு. வை.சோமசேகரன் அவர்களால் தொகுக்கப்பட்ட ஈழத்து ஆலயங்கள் (யாழ்.மாவட்டத் திருத்தலங்கள் - பாகம் 1), அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் ஆக்கிய மகோற்சவ விளக்கம்- (மறுபதிப்பு) ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஈழத்து ஆலயங்கள் நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் இ.குமாரவடிவேல் அவர்களும், மகோற்சவ விளக்கம் நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு.ச.அமிர்தலிங்கம் அவர்களும் நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வின்போது மாமன்றத்தின் அறுபது ஆண்டு நிறைவையொட்டி இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தானு.மகாதேவக் குருக்கள், கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம முதல்வர் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆகியோர் மாமன்றத்தினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் வழங்கிய நிறைவுரையுடன் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாடு நிகழ்வுகள் நிறைவுபெற்றன.







# கீரிமலையில் நீத்தார் நினைவு தினம் (14.08.2015)

கீரிமலை சிவபூமி மடத்தில் ஆடி அமாவாசை அன்று நீத்தார் தினம் அனுட்டிக்கப்பட்டது. நல்லை ஆதீன முதல்வர், மாமன்ற உப தலைவர்களான கலாநிதி ஆறு. திருமுருகன், விடைகொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, பொதுச் செயலாளர் திரு. முத்தையா கதிர்காமநாதன் ஆகியோரும் பங்குபற்றினர்.






# அமரர் செல்வரத்தினம் அவர்களுக்கு அஞ்சலி










இரத்மலானை செல்வா இல்லத்தில் 09.08.2015 அன்று அமரர் செல்வரத்தினம் அவர்களது மறைவுக்கு அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அந்நிகழ்வில் திருமதி ராணி செல்வரத்தினம் மற்றும் அன்னாரது குடும்ப அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். மாமன்ற நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைத்தலைவர் இறைசிரோரத்தினம் திரு வி. கயிலாசபிள்ளை. மாமன்றத் தலைவர் திரு. க.நீலகண்டன். பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா. பொதுச் செயலாளர் திரு. முத்தையா கதிர்காமநாதன். பொருளாளர் திரு வே. கந்தசாமி. விடுதிகள் குழுத் தலைவி திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோரும் நிகழ்வின் போது கலந்துகொண்டனர்.

அமெரிக்கா சிக்காக்கோவில் Saivite Tamil Foundation நடத்திய பத்தாண்டு நிறைவு ஆன்மீக முகாமில்
ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் அதில் பங்குபற்றியவர்களும்












மாமன்றத்தில் நடைபெற்ற ஆசிரியர் கு. பாலசுப்பிரமணியம் அவர்களின் 25ஆம் ஆண்டு
சிரார்த்ததின நிகழ்வும் மூன்று நூல்களின் வெளியீடும் – 30.08.2015







# நல்லூரிற் கந்தா அருள்வாய்

*அருட்கவி அமரர் சீ. விநாசித்தம்பி*

முன்னவனே யாழ்ப்பாண நகர்நல் லூரில்
முதியதமிழ் வேலேந்தி வீற்றிருக்கும்
மன்னவனே கந்தப்பா மயிலில் ஏறி
வலம்வள்ளி இடம்தெய்வ யானையோடு,
பின்னமிலா அடியாரின் குறைகள் தீர்க்கப்
பிரகாச தினகரனாய்க் காட்சிநல்கும்
அன்னபரி பூரணியின் மகனே எங்கள்
அல்லலெலாம் தீர்க்கமன மிரங்குவாயே.

எத்தனையோ மக்கள்வாழ் விடங்களின்றி
எத்தனையோ மக்கள்உண வேதுமின்றிப்
பித்தனைப்போல் வதிவிடமில் லாதுவாழும்
பெற்றியினைக் கந்தாநீ அறிகிலாயோ,
பத்தியுடன் ஐயாநின் புகழைப் பாடிப்
பகைவறுமை யில்லாத வாழ்வுகாண,
உத்தமராய்ச் சமாதான நலம் சிறக்க
ஓம் முருகா நீகருணை செய்வாய் போற்றி

மற்றவர்க்குத் துயரிழைக்கா நீதிவாழ்வும்
மதுகளவு பொய்சூது கருதாநெஞ்சும்
பெற்றவரைப் பெரியோரைப் பேணும் பண்பும்
பேசுமறை யாகமத்தை மதிக்கும் போக்கும்
கற்ற வரின் தெளிவுரைகள் உணரும் நோக்கும்
காயம்மனம் வாக்கினால் தருமம் பேணும்
நற்றவத்தில் நின்னடியைப் பிடிக்கும் பேறும்
நல்லூரிற் கந்தாநீ அருள்வாய் போற்றி

(நன்றி: நல்லைக்குமரன் மலர் - 2003)

## அருணகிரிநாதர் அருளிய நல்லூர் கந்தன் திருப்புகழ்

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்
போற்றாய் நாளுநங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியினர் அமுதூறல்
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபடை
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிருகமதம் அகிலாரும்
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ
ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவனேசை
ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் பெறுசேயே
ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழுருள்தரு முருகோனே
ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்பரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே!

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- இந்து மக்களின் வாழ்க்கையை வளம்படுத்துவதில் தொடர்ந்தும் மாமன்றத்தின் பயணம் அமையவேண்டும் - (சத்தியவித்தகர் க. வி. விக்கினேஸ்வரன் உரை) 4
- நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும் 9
- திருவருட்பொலிவு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் 10
- திருமுருகாற்றுப்படை சொல்லும் ஆறுபடைவீடு சிறப்புகள் 13
- அலங்காரக் கந்தனாகப் போற்றப்படும் நல்லைக் குமரன் 14
- நல்லைக் கந்தன் திருவூஞ்சல் 15
- கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும் நாமங்களும் 16
- நல்லைக் கந்தனை வந்தனை செய்வோம் 21
- யோகர் சுவாமிகள் பக்கம் - நல்லைக் கந்தன் தேரடியில் ஞான உபதேசம் பெற்ற யோகர் சுவாமிகள் 22
- கந்தபுராணம் தோன்றிய வரலாறு 23
- நாவலர் பக்கம் - சைவ வரலாற்றில் தனது இருப்பை நிலைநிறுத்திய நல்லை நகர் நாவலர் 24
- இறைபணி நிற்கும் இந்து மக்களின் உச்ச நிறுவனம் 26
- கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் கடமைகள் 31
- மாமன்றத்தின் அனுதாபம்/மாமன்றச் செய்தி 35
- யாழ்ப்பாணத்தில் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாடு 36
- நல்லூரிற் கந்தா அருள்வாய்/நல்லூர் திருப்புகழ் 40


## நல்லூரின் பெருமானே போற்றி!

வல்லாரின் வல்லானாய் வடிவே லாயுள்
வளமாக்கி யாய்நல்ல வற்றா வூற்றாய்
எல்லாரின் உள்ளத்தும் என்றும் நின்றே
இயல்பாக இனிக்கின்ற இன்ப மாகி
இல்லாரின் உள்ளாரின் இன்னல் யாவும்
இல்லாமற் செய்கின்ற எழிலார் தூய
நல்லூரின் பெருமானே நாளும் நம்மை
நன்றாகக் காக்கின்ற நாதே போற்றி!

**வி.கந்தவனம்**

## வாஷிங்டன் முருகன் ஆலயத்தில் நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா








## கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகோற்சவ நிகழ்வு– 2015










HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015


# மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாடு ஆரம்ப நிகழ்வு – (31.07.2015)



வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் க. வி. விக்கினேஸ்வரன் உரை



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உரை




மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரை



தருமபுரம் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களிடமிருந்து 'இந்து ஒளி' சிறப்பிதழைப் பெற்றுக்கொள்கிறார்.



சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன் நினைவுச் சின்னம் வழங்குகிறார்.





சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களிடமிருந்து நினைவுச் சின்னம் பெற்றுக்கொள்வதையும், நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களுள் ஒரு பகுதியினரையும் காணலாம்.

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.